Thanjavur Sarasvati Mahal – Series No. 382

श्रीः

॥ श्रीमद्विखनसमहागुरवे नमः ॥

# ॥ श्रीरामायणद्विशती ॥

# Sri Ramayana Dvisati

# ஸ்ரீ ராமாயண த்விசதீ

THANJAVUR MAHARAJA SERFOJI'S
SARASVATI MAHAL LIBRARY, THANJAVUR.

1998 ] [ Price: 25-00

S. 18118

Thanjavur Sarasvati Mahal – Series No. 382

श्रीः

॥ श्रीमद्विखनसमहागुरवे नमः ॥

# ॥ श्रीरामायणद्विशती ॥

# Sri Ramayana Dvisati

# ஸ்ரீ ராமாயண த்விசதீ

Edited By :

**S. SUDARSANAN**, M. A.,
Sanskrit Pandit,
Sarasvati Mahal Library, Thanjavur.

THANJAVUR MAHARAJA SERFOJI'S
SARASVATI MAHAL LIBRARY, THANJAVUR.

1998 ] [ Price : 25-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | ஸ்ரீ ராமாயண த்விசதீ |
| பதிப்பாசிரியர் | : | எஸ். சுதர்சனன், எம். ஏ., |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம் |
| வெளியீட்டு எண் | : | 382 |
| மொழி | : | ஸம்ஸ்க்ருதம், தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | மார்ச், 1998 |
| தாள் | : | 13. 7 கி. கி. சேஷசாயி |
| நூல் அளவு | : | 21 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : | 120 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 16, 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | சரசுவதி மகால் அச்சகம் |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | காவியம் |
| விலை | : | ரூ. 25—00 |

# வெளியீட்டாளர் முகவுரை

இந்திய இலக்கியங்களில் இராமாயணமும், மகா பாரதமும் இதிகாசங்களாகக் கொண்டாடப்படுகின்றன, இவ்விரண்டு காப்பியங்களும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் நன்கறிந்த கதையாகும். இதைப் போன்றே உலக நாடுகளிலும் இவ்விரண்டு கதைகளும் பரவலாக புகழ் பெற்றுள்ளன எனில் மிகையில்லை,

இராமாயணம் என்ற சொல்லுக்கு "இராமனுடைய வழி" என்ற பொருளுண்டு. அயனம் என்றால் வழி — பாதை என்று பொருள்படும். ஆதலால்தான் தக்ஷிணாயணம், உத்தராயணம் என்று சூரியன் செல்லும் வழியைக் குறித்துச் சொல்கிறோம். இதைப்போல் இராமாயணம் என்றால் இராமன் செல்லும் வழி என்று பொருள்படுகிறது. இராமன் செல்லும் வழி யாது என்றால், இராமன் செல்லும் வழி "தர்மவழி". "அறவழி". இதனால்தான் கம்பன் "நல்லறமூர்த்தி" என்று இராமனைச் சுட்டிச் சொல்கிறார். அறத்தின் மூர்த்தியாக விளங்கும் இராமனின் வரலாற்றை எடுத்தியம்பும் இராமாயணத்தைப் பின்பற்றி எழுந்த இலக்கியங்கள் பல. இவை பல்வேறு மொழிகளில் அமைந்துள்ளன. இந்த இலக்கிய வரிசையில் எழுந்த நூலே "இராமாயணத்விசதீ" என்னும் நூலாகும். இதில் **213** சுலோகங்கள் உள்ளன. இராமாயணக் கதையைச் சுருக்கமாகவும், இலக்கிய நயத்துடனும் கூறுகிறது.

இந்த நூலில் வடமொழி சுலோகங்களும் அதற்கான தமிழ் வரிவடிவம் மற்றும் தமிழ் பொழிப்புரை ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளன. இது வடமொழி அறியாதவர்களும் எளிதில் புரிந்துகொள்ள உதவும். இந்த நூல் தற்போது முதன்முதலாக அச்சாகி வெளிவருகிறது.

இதனை நூலக வடமொழிப் பண்டிதர் திரு. எஸ். சுதர்சனன் அவர்கள் பதிப்பித்துள்ளார். அவருக்கு எனது பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவர ஆவன செய்துள்ள நூலக நிர்வாக அலுவலர் திரு. சி. பாலசுப்ரமணியன் அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும், சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கிய நூலக அச்சகப் பிரிவினர் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

"ஸ்ரீராமாயண த்விசதீ" என்னும் இந்நூல் வெளிவர பொருளுதவி நல்கிய நடுவண் அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை ஆராய்ச்சியாளர்களும், மாணவர்களும், இராமாயணத்தின்பால் ஈடுபாடுடையவர்களும் வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்கள் என்பது திண்ணம்.

**து. நா. இராமநாதன்,** இ. ஆ. ப.,
*மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,*
*சரசுவதி மகால் நூலகம்.*

*தஞ்சாவூர்*
*12—3—1998*

॥ श्रीः ॥

॥ श्रीमद्विखनसमहागुरवे नमः ॥

# முகவுரை

सकलभुवनरत्नं सर्वशास्त्रार्थ रत्नं
समय विजयरत्नं सच्चिदानन्द रत्नम् ।
दशरथकुलरत्नं सीतया सेव्यरत्नं
दशमुख रिपुरत्नं पातु मां रामरत्नम् ॥

ஸகல புவனரத்னம் ஸர்வசாஸ்த்ரார்த்த ரத்னம்
ஸமய விஜயரத்னம் ஸச்சிதானந்த ரத்னம் ।
தசரதகுலரத்னம் ஸீதயா ஸேவ்யரத்னம்
தசமுகரிபுரத்னம் பாது மாம் ராமரத்னம் ॥

கவிகளின் வாக்கு காவ்யம் எனப்படும். முற்காலத்தில் எந்த ஒரு விஷயத்தையும் பாடலாக எழுதிவைத்துவிடுவது என்ற மரபு பேணப்பட்டதாக அறியமுடிகின்றது. எழுதப் படும் பாடல்கள் நூல்களாகத் தொகுக்கப்படும். மேலும் நூல் என்பது படிப்பவருக்கு ஆனந்தத்தைக் கொடுப்ப தாகவும், மனக்கவலையை அழிப்பதாகவும்; அதோடுமட்டு மின்றி அறம், பொருள், இன்பம். வீடு ஆகிய நாற்பயன் களையும் தரவல்லதாகவும் இருத்தல் அவசியம் எனவும் கருதப்பட்டது. வேதம் முதல் தொடங்கி காவ்யங்கள்

அனைத்தும் அவை எழுந்த காலத்திலிருந்த நிலையை மிகவும் துல்லியமாக எடுத்துரைக்கும் எனில் அது மிகை யாகாது. இதன் வரிசையில் எழுந்ததே "ஆதிகாவ்ய"மாம் ஸ்ரீமத்ராமாயணம்.

## ஆதிகாவ்யம்

" आदिकाव्यमिदं त्वार्षं पुरावाल्मीकिनाकृतम् "

"ஆதிகாவ்யமிதம் த்வார்ஷம் புராவால்மீகினாக்ருதம்"

என்ற இராமாயண யுத்தகாண்டத்தினுள் அமையப் பெற்றுள்ள வாக்யத்தின் மூலமும்,

" इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये .... "

" இத்யார்ஷே ஸ்ரீமத்ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே .." என்ற நூலின் இறுதியடியின் மூலமும் மிகவும் தெளிவாக இந்நூல் ஆதிகாவ்யம் என அறிய முடிகின்றது. இது 24,000 ஸ்லோகங்களையும், 500 ஸர்கங்களையும், 7 காண்டங்களையும் கொண்டதாகும். இதனை பாராயணம் (தினமும் படித்தால்) செய்தால் அனைத்து பலன்களையும் (விரும்பிய எல்லாவற்றையும்) தரும் என்பது ஆன்றோர்களின் வாக்கு. இந்த ஆதிகாவ்ய மானது ஸ்ரீமந்நாராயணனுடைய அவதாரங்களில் ஒன்றான இராமாவதாரத்தை எடுத்தியம்புகின்றது.

## ஸ்ரீமந்நாராயணனின் அவதாரங்கள்

ஸ்ரீமந்நாராயணன் என்பவர் பரமாத்மா. "பரம்" என்ற ஸம்ஸ்க்ருதச் சொல்லுக்கு மேல்நிலை — உயர்ந்த — மேலான போன்ற பொருள்கள் சொல்லப்படுகின்றன. எனவே "பரமாத்மா" என்பதன் மூலம் உயர்ந்தவர் ஸ்ரீமந் நாராயணன் என்ற பொருள் கிடைக்கும். அப்படிப்பட்ட

அந்த பரமாத்மாவானவர்; நமது பாபவசத்தாலே (ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளவர்கள் "பஜகோவிந்தம்" என்ற ஸ்தோத்திரத்திலே கூறியதுபோல "புனரபி ஜனனம் புனரபி மரணம் — திரும்பவும் பிறத்தல், திரும்பவும் இறத்தல்") திரும்பத்திரும்பப் பிறந்து, இறந்து இந்த பூலோகத்திலேயே உழன்றுகொண்டிருக்கிறோம் என்பதை கண்ணுற்று, தனது நிலையிலிருந்து இறங்கிவருகிறார். இதனையே அவதாரம் என்று கூறுவர்.

பகவான் ஸ்ரீமந்நாராயணனின் அவதாரங்கள் சொல்ல முடியாதது. இருப்பினும் அவற்றில் முக்கியமாகப் பத்தை மட்டும் முன்னோர்கள் கூறுவர். அதனை ... ...

"वनजौ वनजौ ह्रस्वः त्रिरामी कृष्णकल्किनौ"

"வனஜௌ வனஜௌ ஹ்ரஸ்வ: த்ரிராமீ க்ருஷ்ண கல்கினௌ" என்ற வாக்யத்தின் மூலம் அறியலாம். அதாவது - முதல் வனஜௌ என்ற பதத்தால் மத்ஸ்யம், கூர்மம் என்ற இரு அவதாரங்களையும், அடுத்த வனஜௌ என்ற பதத்தால் வராக, நரஸிம்ம என்ற இரு அவதாரங்களையும், ஹ்ரஸ்வ: என்ற பதத்தால் வாமன அவதாரத்தையும், த்ரிராமீ என்ற பதத்தால் பலராம, பரசுராம, ராம என்ற மூன்று அவதாரங்களையும், க்ருஷ்ண அவதாரத்தையும், கல்கி என்பதால் கல்கி அவதாரத்தையும் மிகவும் சுருக்கமாக (பத்து அவதாரங்களையும்) சொல்வது வழக்கம். எனவே இவைகளில் ஒன்றுதான் இராமாவதாரம்.

## இராமாவதாரம் பற்றி :

பூலோகத்தில் "துஷ்டநிக்ரஹ, சிஷ்ட பரிபாலனம்" அதாவது:- துஷ்டர்களை அழிப்பதற்காகவும், நல்லவர்களை காப்பாற்றுவதற்காகவும், மனிதன் எவ்வாறு வாழ

வேண்டும் என்ற நெறிமுறைகளை நமக்குக் கற்றுக் கொடுப்பதற்காகவும், ஸ்ரீமந்நாராயணனானவர் இரண்டு கைகளோடு (அதாவது மஹாவிஷ்ணுவினுடைய ஸ்வரூபத்தைப் போன்று நான்கு கைகளோடு இல்லாமல்) அயோத்தியில் தசரதனுக்கு மகனாகப் பிறக்கிறார் (அவதரிக்கிறார்). இந்த அவதாரத்தைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் ஸ்ரீமத் வால்மீகியானவர் காவ்யமாகப் படைத்தார். இதற்கு ஆதிகாவ்யம் என்ற பெயருமுண்டு என முன்பே அறிந்துகொண்டோம்.

## இராமாயணக் கதைச் சுருக்கம் :

ஒரு ஊரில் ஒரு உபந்யாசம் செய்பவர் பத்து நாட்கள் இராமனுடையை கதையைச் சொல்லிவந்தாராம். கடைசீ நாளன்று ஒரு பெரியவர் வந்து கதையைக் கேட்டுவிட்டு மிகவும் அழகான கதை போலிருக்கிறதே! இதன் தொடக்கமும், இடைப்பாகத்தினுடைய கதையையும் கேட்க இயலாமல் போய்விட்டதே! என்று அந்த உபந்யாசகரிடம் கூறி உண்மையில் வருந்தினாராம். உடனே அவர் இராமனுடைய கதை அனைத்தையும் ஒரே ஒரு ஸ்லோகத்தின் மூலம் சொன்னாராம்.

आदौरामतपोवनादिगमनं हत्वामृगं काञ्चनं
वैदेही हरणं जटायुमरणं सुग्रीव संभाषणम् ।
वाली निग्रहणं समुद्रतरणं लङ्कापुरी दाहणं
पश्चाद्रावण कुम्भकर्ण हननं एतद्धिरामायणम् ॥

ஆதௌராமதபோவனாதிகமனம் ஹத்வாம்ருகம் காஞ்சனம்
வைதேஹி ஹரணம் ஜடாயுமரணம் ஸுக்ரீவ ஸம்பாஷணம் ।

வாலீநிக்ரஹணம் ஸமுத்ரதரணம் லங்காபுரீ தாஹனம்
பச்சாத்ராவண கும்பகர்ண ஹனனம் ஏதத்திராமாயணம் ||

அதாவது:- ( ஸ்லோகத்தின் பொருள்:- )

இராமபிரானினுடைய கதையே ஆரம்பம் எப்பொழுது எனில் தபோவனத்திற்குச் செல்வதில்தான். அடுத்து தங்கமானை அடித்து வருதல். இதனிடையில் ஸீதையானவள் காணாமல் போதல், அவளைத் தேடி அலையும் பொழுது ஜடாயு என்ற கழுகரசன் ஸீதையை இராவணன் எடுத்துச் சென்றுவிட்டான் என்றுக் கூறி விட்டு அது இறந்து போதல். பிறகு ஸுக்ரீவனைக் கண்டு அவனுடன் பேசுதல், பிறகு வாலியை வதம் செய்து, கடலைக் கடந்து லங்காபுரியை அழித்து கும்பகர்ணன், இராவணன் ஆகியோரை அழித்து ஸீதையைப் பெற்று திரும்புதல் இதுவே இராமாயணம் என்று கூறினாராம். எனவே இராமாயணச் சுருக்கம் அறிந்து கொள்வது மட்டும் ஒருவரின் மனதிற்கு நிறைவளிக்காது. அப்பொழுது தான் 24000 ஸ்லோகங்களுக்குக் குறைவாகவும், ஒரு ஸ்லோகம், 24 ஸ்லோகம் போன்றவைகளைவிட அதிகமாகவும், புதியதாகவும் ஒரு காவ்யம் வரவேற்கத்தக்க ஒரு நிலை தோன்றுகிறது.

## இராமாயண த்விசதீ

"அகலாது அணுகாது குளிர்காய்வான் போல்வர்" என்ற திருக்குறள் நெறி போல — இராமனுடைய கதையைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். அதே சமயத்தில் கதைகள் விடுபட்டு விடவும் கூடாது. மேலே சொன்னது போல 10 மணித்துளிகளுக்குள் சொல்லிவிடுவதாகவும் இருக்கக்கூடாது. ஓரளவு கவித்திறனோடும் இருக்க

வேண்டும். அதாவது: ரொம்பவும நீட்டாமலும், ரொம்ப வும் சுருக்காமலும் இராமாயணத்தினுடைய கதைகள் அனைத்தையும் தெளிவாகச் சொல்லக்கூடிய காவ்யம் ஒன்று உண்டு என்று சொன்னால் அது "இராமாயண த்விசதீ" என்ற இந்த நூல் ஒன்றுதான் எனில் அது மிகை யாகாது.

## நூல் பற்றி :

இந்த நூலானது 213 ஸ்லோகங்களில் அமைந்துள்ளது. ஏழு காண்டங்களையும் சுருக்கமாகவும், தெளிவாகவும் எடுத்தியம்புவதாக அமைந்துள்ளது. இதில் முதல் ஐம்பத்தோரு ஸ்லோகங்களால் பாலகாண்டத்தினுடைய செய்திகளையும், ஐம்பத்திரெண்டு முதல் எழுபத்தி நான்கு ஸ்லோகங்களால் அயோத்யா காண்டத்தினுடைய செய்தி களையும், எழுபத்தைந்து முதல் நூற்றுநான்கு ஸ்லோகங் களால் ஆரண்ய காண்டத்தினுடைய செய்திகளையும், நூற்று ஐந்து முதல் நூற்று இருபத்தொன்பது ஸ்லோகங் களால் கிஷ்கிந்தா காண்டத்தினுடைய செய்திகளையும், நூற்று முப்பது முதல் நூற்று நாற்பத்தாறு ஸ்லோகங் களால் ஸுந்தர காண்டத்தினுடைய செய்திகளையும், நூற்று நாற்பத்தேழு முதல் நூற்று தொன்னூறு ஸ்லோகங்களால் யுத்த காண்டத்தினுடைய செய்திகளை யும், நூற்று தொன்னூற்று ஒன்று முதல் இருநூற்று பதிமூன்று ஸ்லோகங்களால் உத்தர காண்டத்தினுடைய செய்திகளையும் நூலாசிரியர் படைத்துள்ளமை ஈண்டு நோக்கத்தக்கதாக உள்ளது.

## சுவடி பற்றி :

இந்நூலுக்கான சுவடி ஸம்ஸ்க்ருதப் பிரிவில் புதிய கலெக்ஷன் தொகுதியில் K. M சுந்தரம் என்பவரால்

இந்த நூலகத்திற்கு நன்கொடையாக அளிக்கப்பட்டுள்ள தாக பதிவேடுகளின் மூலம் அறிய முடிகிறது. இது காகிதச் சுவடியாகும், இந்நூலகத்திலுள்ள மற்ற காகிதச் சுவடியைக்காட்டிலும் வேறுபட்டதாக உள்ளது. அதாவது: ஸ்லோகங்கள் பிரிக்கப்பட்டும், ஸ்லோகங்களுக்கான தொடர் எண் கொடுக்கப்பட்டும் காணப்படுகிறது. தொடர் எண் கொடுத்துவரும்பொழுது 180, 181, 182 ஆகிய மூன்று எண்கள் விடப்பட்டு அவை சுவடியினுடைய ஓரங்களில் எழுதப்பட்டுள்ளது. இது கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. மேலும் ஒரு சில ஸ்லோகங்களில் கடுக்காய் இங்க்கினால் எழுதியதை அடித்துவிட்டு பென்சிலால் எழுதப்பட்டுள்ளது. $12\frac{1}{2}$ x $8\frac{1}{2}$ என்ற நீள அகலமுடையதாகவும். ஒருசில பக்கங்களில் 44 வரிகளும், ஒருசில பக்கங்களில் 48, 52 வரிகளும் உள்ளன. ஒவ்வொரு வரிகளும் 11 எழுந்துக்களைக் கொண்டதாக அமைந்து உள்ளது. இராமாயணக் கதை முழுவதும் சொல்லப் பெற்றுள்ளபோதிலும். நூற்பயன் (பலச்ருதி) சொல்லப் பெறவில்லை. மேலும் நூலினுடைய ஆசிரியர் பெயரும் நூலில் சொல்லப்பெறவில்லை இச்சுவடி K. M. Collection No. 4-இல் "இராமாயண த்விசதீ" என்னும் தலைப்பில் பதிவாகியுள்ளது.

## பதிப்பும் — பயனும்

மேற்படி சுவடியை தேவநாகரி எழுத்தில் மாற்றம் செய்து; தவறுகள் களையப்பெற்று; தமிழ் ஒலியுடனும், தமிழ் மொழிபெயர்ப்புடனும் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இதனை தமிழ் மொழி மட்டும் அறிந்தோரும் படித்துப் பயன்பெறும் வண்ணம் பதிப்பித்துள்ளதால் காவியத்தின் பால் ஈடுபாடுடையவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் உதவும் என்பது திண்ணம்.

## நன்றி நவிலல்

இந்நூலிற்கான வெளியீட்டாளர் முகவுரையை வழங்கிய மாவட்ட ஆட்சியர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் உயர்திரு. T. N. இராமநாதன், இ. ஆ. ப. அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூலைப் பதிப்பிக்க ஆணை வழங்கிய நூலக நிருவாக அலுவலர் திரு. சி. பாலசுப்ரமணியன் அவர்களுக்கும், பதிப்பிக்க ஊக்கமளித்த நூலகப் பதிப்பு மேலாளர் மற்றும் நூலகர் திரு. அ. பஞ்சநாதன், M. A,. M. L. I. S., அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறேன். இந்த நூல் பிழையின்றி வெளிவரச் செம்மையாக நுண்ணாய்வு செய்து அளித்த, ஸம்ஸ்க்ருத இலக்கணத்தில் சிரோமணி பட்டம் பெற்றவரும், தஞ்சாவூர் ஓரியண்டல் உயர்நிலைப் பள்ளியில் முதுநிலை வடமொழிப் பண்டிட்டாக பணி புரிந்துவருபவரும், ஆங்கிலத்தில் முதுகலைப் பட்டம், ஸம்ஸ்க்ருத இலக்கணத்தில் ஆய்வுசெய்து முனைவர் பட்டம் பெற்றவரும், ஸம்ஸ்க்ருத அறிஞரும், நமது நூலகச் சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியருமான முனைவர் திரு. S. கோதண்டராமன் அவர்களுக்கு ப்ரணாமத்துடன் கூடிய எனது க்ருதக்ஞதையை (நன்றியை)த் தெரிவித்து மகிழ்கிறேன். இந்நூலை நன்முறையில் அச்சிட்டுத் தந்த இந்நூலக அச்சகப் பிரிவினர் அனைவருக்கும் உளங்கனிந்த எனது நன்றியை உரித்தாக்குகின்றேன்.

**எஸ். சுதர்சனன்,**
*ஸம்ஸ்க்ருத பண்டிட்,*
*சரசுவதி மகால் நூலகம்.*

*தஞ்சாவூர்*
*23—2—98*

श्रीः

॥ श्रीमद्विखनसमहागुरवे नमः ॥

# ॥ श्रीरामायणद्विशती ॥

# ஸ்ரீ ராமாயண த்விசதீ

## ॥ बालकाण्ड प्रारम्भः ॥

ओङ्कारवाच्यं जगदेकबीजं
व्याप्तं च भूतेष्वखिलेषु नित्यम् ।
ब्रह्माभिधं तत्प्रणमन् समीडे
तदीयलीलाकथनप्रवृत्या ॥

## பாலகாண்டம்

ஓங்காரவாச்யம் ஜகதேகபீஜம்
வ்யாப்தம் ச பூதேஷ்வகிலேஷு நித்யம் ।
ப்ரம்மாபிதம் தத்ப்ரணமன் ஸமீடே
ததீய லீலா கதனப்ரவ்ருத்யா ॥ 1

அகில உலகின் அடிப்படையாயும், ப்ரணவத்தின் உட்பொருளாயும், ஜீவராசிகள் அனைத்திலும் நிலைத்து விரவி இருப்பதுமான பரப்ரம்மத்தை அதன் லீலா வினோதங்களை விவரிக்கும் முகமாக வணங்குகிறேன்.

दुष्टात्मनां निग्रहकारणार्थं
शिष्टात्मभूतानवितुं तथैव ।
संस्थापनार्थाय च धर्ममीशः
तदोप्सिताकारमुपैति लोके ॥ २

துஷ்டாத்மனாம் நிக்ரஹகாரணார்த்தம்
சிஷ்டாத்ம பூதானவிதும் ததைவ ।
ஸம்ஸ்தாபனார்த்தாய ச தர்மமீச:
ததீப்ஸிதாகாரமுபைதி லோகே ॥ 2

எப்பரம்பொருள் துஷ்டர்களை அழித்து, சிஷ்டர்களைக் காப்பாற்றுவதற்கும், தர்மத்தை நிலைநாட்டுவதற்கும், தன் விருப்பப்படி வடிவை உலகில் எடுக்கிறதோ,

नानाप्रकारैर्मृगमानुषाद्यैः
कालोचितकारकदम्बकैस्तत् ।
विभूतिमद्भिस्त्वखिलांश्च धर्मान्
शाशिष्यतेलोक विबोधनार्थम् ॥ ३

நாநா ப்ரகாரைர்ம்ருகமானுஷாத்யை:
காலோசிதாகாரகதம்பகைஸ்தத் ।
விபூதிமத்பிஸ்த்வகிலாம்ஸ்ச்ச தர்மான்
சாசிஷ்யதே லோக விபோதனார்த்தம் ॥ 3

மேலும் தனது விளையாட்டு வினோதங்களால் உலகில் தர்மத்தை போதிப்பதற்கு காலத்திற்கேற்றவாறு விலங்கு மனித உருவங்களை எடுக்கிறதோ,

प्रादुर्भवेष्वस्य निरीश्वरस्य
प्रदर्शिता येन समस्तधर्माः ।

स्वकर्मभिस्तद्रघुवीर मूर्त्तेः
चित्रे चरित्रे रमते मनोमे ॥ ४

ப்ராதுர்பவேஷ்வஸ்ய நிரீச்வரஸ்ய
ப்ரதர்சிதா யேந ஸமஸ்ததர்மா: ।
ஸ்வகர்மபிஸ்தத்ரகுவீர மூர்த்தே:
சித்ரே சரித்ரே ரமதே மனோமே ॥ 4

(அப்படிப்பட்ட) ஒப்புயர்வற்ற இந்த ப்ரம்மத்தின் அவதாரங்களால் தர்மங்கள் அனைத்தும் வழிகாட்டப்படுகின்றன. சிறப்பாக தனது செயல்களால் வழிகாட்டிய ரகுவீரமூர்த்தியின் விதவிதமான சரித்ரங்களில் எனது மனம் ஈடுபாடு மிகக்கொள்கிறது.

लङ्काधिनाथस्य दशाननस्य
क्षपाचरेन्द्रस्य नृशंसताभिः ।
क्षितिर्विरिञ्चिं शरणं प्रपेदे
रक्षक्षयोपाय विधित्सयासौ ॥ ५

லங்காதிநாதஸ்ய தசானனஸ்ய
க்ஷபாசரேந்த்ரஸ்ய ந்ருசம்ஸதாபி: ।
க்ஷிதிர்விரிஞ்சிம் சரணம் ப்ரபேதே
ரக்ஷ க்ஷயோபாய விதித்ஸயாஸௌ ॥ 5

இரவில் ஸஞ்சரிக்கும் ராக்ஷஸனாகிய லங்காதிபதி தசானனனின் கொடூரச் செயல்களால் துயரடைந்த பூமிதேவி அரக்கர்களை அழிக்கும் உபாயத்தை மேற்கொள்ள நினைத்து ப்ரம்மனைச் சரணடைந்தாள்.

साचष्ट धातुर्वरदृप्तचेताः
प्रोत्सादयत्येव स सर्वलोकान् ।

स्त्रियश्च बह्वीः कलुषीकृतास्ता
ऊर्जामुनाधूर्त गणावृतेन ॥ ६

ஸாசஷ்ட தாதுர்வரத்ருப்தசேதா:
ப்ரோத்ஸாதயத்யேவ ஸ ஸர்வலோகான் ।
ஸ்த்ரியச்ச பஹ்வீ: கலுஷீக்ருதாஸ்தா
ஊர்ஜாமுனா தூர்த்த கணாவ்ருதேன ॥

தாங்கள் அளித்த வரத்தால் செருக்கடைந்த அந்த இராவணன் உலக மக்கள் அனைவரையும் தொல்லைப் படுத்துகிறான். துஷ்டர்களின் கூட்டத்துடன் கூடிய படை கொண்ட இவனால் ஸ்த்ரீகள் பலர் மானபங்கப்படுத்தப் பட்டனர் என்று பூமிதேவி கூறினாள்.

निशम्य पृथ्वीवचनं विधाता
ध्यायन्मुहूर्तं सकलं निशाम्य ।
सुरैर्वृतः क्षीरसमुद्रतीरं
गत्वानुनावाखिललोकहृत्स्थम् ॥ ७

நிசம்ய ப்ருத்வீவசனம் விதாதா
த்யாயன்முகூர்த்தம் ஸகலம் நிசாம்ய ।
ஸுரைர்வ்ருத: க்ஷீரஸமுத்ரதீரம்
கத்வாநுநாவாகிலலோகஹ்ருத்ஸ்தம் ॥ 7

அந்த ப்ரம்மனும் பூமாதேவியின் வார்த்தைகளைக் கேட்டு, ஏகாக்ரசித்தராய் ஒரு முகூர்த்தம் த்யானித்து தேவர்களுடன் சூழப்பட்டவராக பார்க்கடல் தீரத்தை (கரையை) அடைந்து, அனைத்து ஜீவராசிகளின் ஹ்ருதயத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீமந்நாராயணனைத் துதித்தார்.

ततस्फुरत्कोटिरविप्रभाभं
नीलाभ्रकान्तद्युतिमार्त बन्धुम् ।
श्रियासमेतं हरिमत्र दृष्ट्वा
विज्ञापयामास विधिर्विशिष्टम् ॥ ८

தத்ஸ்புரத்கோடிரவிப்ரபாபம்
நீலாப்ரகாந்தத்யுதிமார்த்த பந்தும் ।
ச்ரியாஸமேதம் ஹரிமத்ர த்ருஷ்ட்வா
விக்ஞாபயாமாஸ விதிர்விசிஷ்டம் ॥ 8

கோடி ஸூர்ய ப்ரகாசத்துடன் நீர்கொண்ட மேகத்தின் ஒளிரும் காந்தி உடையவராயும், அல்லலுருபவரின் அன்பனும், இலக்குமியின் கணவனுமான ஸ்ரீமந்நாராயணனிடம் பூமிதேவியின் அவல நிலையை வெளியிட்டார்.

आकर्ण्य धातुर्वचनं परेशः
क्षितिं समालोक्य सखिन्नवक्त्राम् ।
क्षणं विचिन्त्याथ दयार्द्रचित्तः
प्रसन्न वक्त्रो भगवान् बभाषे ॥ ९

ஆகர்ண்ய தாதுர்வசனம் பரேச:
க்ஷிதிம் ஸமாலோக்ய ஸகின்னவக்த்ராம் ।
க்ஷணம் விசிந்த்யாத தயார்த்ரசித்த:
ப்ரஸன்னவக்த்ரோ பகவான் பபாஷே ॥ 9

ப்ரம்மனின் வார்த்தையைக் கேட்டு, வாடிய முகத்தையுடைய பூமியைப் பார்த்த கருணைக் கடலும் - பரம்பொருளுமான நாரணன் நொடிநேரம் சிந்தித்து முகத்தெளிவுடன் கூறுவான்,

अहं त्वयोऽध्यानगरीशपुत्रो
भूत्वाऽचिराद्दाशरथिः करिष्ये ।
संशोधनं राक्षससंहृदीनां
वेश्म प्रयाहीति विधूतचिन्तः ॥ १०

அஹம் த்வயோத்யா நகரீச புத்ரோ
பூத்வாऽசிராத்தாசரதி: கரிஷ்யே ।
ஸம்சோதனம் ராக்ஷஸஸம்ஹதீனாம்
வேச்ம ப்ரயாஹீதி விதூதசிந்த்த: ॥ 10

“நான் விரைவில் அயோத்தி நகரில் தசரதனின் மகனாய்ப் பிறந்து அரக்கர்களின் கூட்டத்தைக் களைவேன். கவலையை ஒழித்து வீடு திரும்புவீர்” (என ஸ்ரீமந் நாராயணன் ப்ரம்மனிடம் கூறினார்.)

सुरानथादिश्य तदंशभूतान्
स्रष्टुं बलाढ्यान् भुवि वानरेषु ।
भाविन्मनुष्यस्य हिताय विष्णुः
ययौ विधिस्स्वं भवनं वितापः ॥ ११

ஸுரானதாதிச்ய ததம்சபூதான்
ஸ்ரஷ்டும் பலாட்யான் புவி வானரேஷு ।
பாவின் மனுஷ்யஸ்ய ஹிதாய விஷ்ணோ:
யயௌ விதிஸ்ஸ்வம் பவனம் விதாப: ॥ 11

விஷ்ணுவின் அம்சமான தேவர்களை விடைகொடுத்தனுப்பி, மனிதனாக அவதாரம் செய்யவிருக்கும் நாரணனின் உதவிக்காக அவர்களை (தேவர்களை)ப்படைக்க எண்ணி மனக்கவலை நீங்கியவராக ப்ரம்மனும் ப்ரம்ம லோகம் ஏகினான்,

अथाध्वरे तन्नृपतेस्सुताप्त्यै
वसिष्ठमुख्यैर्मुनिभिः प्रवृत्ते ।
हविर्हुताशः सुरनिर्मितं तत्
भूपाय पात्रे प्रददौ हिरण्मये ॥ १२

அதாத்வரே தந்ந்ருபதேஸ்ஸுதாப்த்யை
வஸிஷ்டமுக்யைர்முனிபி: ப்ரவ்ருத்தே ।
ஹவிர்ஹுதாச: ஸுரநிர்மிதம் தத்
பூபாய பாத்ரே ப்ரததௌ ஹிரண்மயே || 12

இந்நிலையில் வஸிஷ்டர் முதலிய முனிவர்கள் தசரதரின் புத்ரகாமேஷ்டி யாகத்தைச் செய்ய, அக்னி பகவான் தேவர்களால் தயாரிக்கப்பட்ட ஹவிஸ்ஸைத் தங்கப் பாத்திரத்தில் ஏந்தி தசரதரிடம் தந்தான்.

गुरोर्मतेनाथ नृपप्रदत्तं
तिस्रोऽस्य पत्न्यश्च विभज्य भुक्त्वा ।
दधुः शुभं दौहृतलक्षणं ताः
कालक्रमेणैव पतेः प्रियार्हाः ॥ १३

குரோர்மதேநாத ந்ருபப்ரதத்தம்
திஸ்ரோஸ்ய பத்ன்யச்ச விபஜ்ய புக்த்வா ।
தது: சுபம் தௌஹ்ருத லக்ஷணம் தா:
காலக்ரமேணைவ பதே: ப்ரியார்ஹா: || 13

அரசனின் மனதிற்கிசைந்த தேவியர் மூவரும் குருவின் ஆலோசனைக்கிணங்க அரசரளித்த ஹவிஸ்ஸைப் பகிர்ந்துண்டு, காலக்கிரமத்தில் கருவடைந்த சின்னங்களைப் பெற்றனர்.

चैत्रेऽथमासे भगवन्नवम्यां
पञ्चग्रहेषूच्चगतेषु राज्ञाः ।
कुक्षीरलग्ने शशिजीव योगे १४
जज्ञे स्वयं कोसलराजपुत्र्याः ॥

சைத்ரே தமாஸே பகவந்நவம்யாம்
பஞ்சாக்ரஹேஷூச்சகதேஷு ராக்ஞா: ।
குக்ஷீரலக்னே சசிஜீவ யோகே
ஜக்ஞே ஸ்வயம் கோஸலராஜபுத்ர்யா: ॥ 14

பகவான் நாராயணனும் ஐந்து க்ரஹங்கள் உச்சத்தில் அமைய, குருவுடன் சந்த்ரன் இணைய, கர்க்கடக லக்னத்தில் சித்திரை மாத நவமியில் அரசி கௌஸல்யாதேவியிடம் தானுதித்தான்.

गदारिशङ्खाब्जविशोभिहस्तं
श्रीवत्सहारादिसुरञ्जिताङ्गम् ।
पीताम्बरं रत्नकिरीटमौलिं
दृष्ट्वार्थयत् सा नतिपूर्वमीशम् ॥ १५

கதாரிசங்காப்ஜவிசோபிஹஸ்தம்
ஸ்ரீவத்ஸ ஹாராதி ஸுரஞ்ஜிதாங்கம் ।
பீதாம்பரம் ரத்னகிரீடமௌலிம்
த்ருஷ்ட்வார்த்தயத் ஸா நதிபூர்வமீசம் ॥ 15

அரசி கௌஸலையும் கதாயுதம், சக்ரம், சங்கம், தாமரை, ஸ்ரீவத்ஸம் வனமாலை, பீதாம்பரம், ரத்னகிரீடம் ஆகியவற்றுடன் அழகுற விளங்கும் அங்கங்களையுடைய நாரணனைக் கண்டு வணக்கத்துடன் பின்வருமாறு வேண்டினாள்,

देवादिदेव ! प्रणतोस्मि नित्यं
प्रसीद रूपं तव मेऽस्तु चित्ते ।
अलौकिकं तेऽद्भुतमाहरंस्तत्
भूयाश्च मे सुन्दर बालकस्त्वम् ॥ १६

தேவாதி தேவ ! ப்ரணதோஸ்மி நித்யம்
ப்ரஸீத ரூபம் தவ மேऽஸ்து சித்தே ।
அலௌகிகம் தேऽத்புதமாஹரம்ஸ்தத்
பூயாச்ச மே ஸுந்தர பாலகஸ்த்வம் ॥ 16

தேவர்களின் தேவனே ! உன்னைத் தொழுதேத்தினேன். கருணைகொண்டு உனது அத்புதமான தேவ உருவை விடுத்து எனது அழகிய குழந்தையாக வடிவெடுப்பாய்.

इतीरितोऽसौ तवपूर्वतप्त-
व्रतैरिदं ते वपुरीक्षितं मे ।
इति ब्रुवन्तामथ भक्तकान्तः
भेजे क्षणात् कोमलबालभावम् ॥ १७

இதீரிதோऽஸௌ தவபூர்வதப்த
வ்ரதைரிதம் தே வபுரீக்ஷிதம் மே ।
இதி ப்ருவந்தாமத பக்தகாந்த:
பேஜே க்ஷணாத் கோமளபாலபாவம் ॥ 17

தாங்கள் முன்செய்த வ்ரதத்தின் காரணமாக இவ்விதமான எனது தேவ வடிவை அருளினேன் எனக்கூறி பக்தர்கள் போற்றும் அந்நாராயணன் நொடியில் மென்மையான எளிய குழந்தை வடிவினன் ஆனான்.

अपत्यलाभश्रवणेन हृष्टो
राजा समभ्येत्य गुरोर्निदेशात् ।
दानानि चक्रे धनधान्य रत्नैः
महीसुरेभ्यो विधिवत्तदानीम् ॥ १८

அபத்யலாப ச்ரவணேன ஹ்ருஷ்டோ
ராஜா ஸமப்யேத்ய குரோர்நிதேசாத் ।
தானானி சக்ரே தனதான்ய ரத்னை:
மஹீஸுரேப்யோ விதிவத்ததானீம் ॥ 18

அரசர் தசரதனும் மக்கட்பேறைக் கேட்டு மகிழ்ந்து வஸிஷ்டர் வழிகாட்ட பொன், பொருள் இவற்றை பூதேவர்களுக்கு முறைப்படி தானமளித்தார்.

रामाभिधानं गुरुरस्य तस्मै
सुताय दत्वाखिलरञ्जकत्वात् ।
कैकेयि जातं भरतं तथाऽसौ
तन्वन् सुमित्रां स ययौ सभूपः ॥ १९

ராமாபிதானம் குருரஸ்ய தஸ்மை
ஸுதாய தத்வாகிலரஞ்ஜகத்வாத் ।
கைகேயி ஜாதம் பரதம் ததாऽஸௌ
தன்வன் ஸுமித்ராம் ஸ யயௌ ஸபூப: ॥ 19

ஆசான் வஸிஷ்டனும் ரஞ்சகப்படுத்தும் அந்தக் குழந்தையை இராமனென்றும், கைகேயியின் குழந்தையை பரதன் என்றும் பெயரிட்டு அரசருடன் கூடியவராக ஸுமித்ரையின் இருப்பிடம் அடைந்தார்.

तद्गर्भजातौ यमलौ विदित्वा
दत्वाग्रजं लक्ष्मणनामधेयम् ।
शत्रुघ्न इत्यावरजं च कुर्वन्
चक्रे स भूपं समवाप्तकामम् ॥ २०

தத்கர்பஜாதௌ யமளௌ விதித்வா
தத்வாக்ரஜம் லக்ஷ்மணநாமதேயம் ।
சத்ருக்ன இத்யாவரஜம் ச குர்வன்
சக்ரே ஸ பூபம் ஸமவாப்தகாமம் ॥ 20

ஸௌமித்ரையின் கர்பத்தில் இரட்டையர்கள் தோன்றியதை அறிந்து, அவற்றில் மூத்தவனை லக்ஷ்மணன் என்றும், இளையவனை சத்ருக்னன் என்றும் பெயரிட்டு அரசனை ஆவல் நிறைவேறியவராகச் செய்தார்.

अथोत्सवोभून्नगरे तदानीं
राज्ञाज्ञयादभ्र कुतूहलेन ।
प्रजाश्च सर्वानृपसूनुलाभं
सम्मेनिरे स्वीयमिवान्तरङ्गे ॥ २१

அதோத்ஸவோபூன்நகரே ததானீம்
ராக்ஞாக்ஞயாதப்ர குதூஹலேன ।
ப்ரஜாச்ச ஸர்வாந்ருபஸூனுலாபம்
ஸம்மேனிரே ஸ்வீயமிவாந்தரங்கே ॥ 21

அளவிடமுடியாத ஆனந்தத்துடன் அரசர் கட்டளை இட, நகரெங்கும் விழாக்கோலம் பூண்டது. மக்கள் அனைவரும் மக்கட்பேறால் அரசர் அடைந்த மகிழ்ச்சியை தாங்கள் அடைந்ததுபோல் எண்ணி மகிழ்ந்தனர்.

अथात्र सर्वे नृपतेस्तनूजाः
निसर्गतो मन्मथतुल्यरूपाः ।
संवर्द्धिताश्चाद्भुत मण्डनैस्ते
पित्रोः प्रमोदं दधते स्म नित्यम् ॥ २२

அதாத்ர ஸர்வே ந்ருபதேஸ்தனூஜா:
நிஸர்கதோ மன்மததுல்யரூபா: ।
ஸம்வர்த்திதாச்சாத்புத மண்டனைஸ்தே
பித்ரோ: ப்ரமோதம் தததே ஸ்ம நித்யம் ॥ 22

தசரதனின் தனயன்களனைவரும் மன்மத வடிவம் கொண்டு விதவித அலங்காரங்களுடன் தினமும் தாய், தந்தையருக்கு மகிழ்ச்சியை அளித்தனர்.

रामद्वितीयस्तु स लक्ष्मणोऽभूत्
शत्रुघ्न आसीद्भरतानुसारी ।
सितेन्दुवत्ते परिवर्धमानाः
कालेन कौमारदशामवापुः ॥ २३

ராமத்விதீயஸ்து ஸ லக்ஷ்மணோऽபூத்
சத்ருக்ன ஆஸீத்பரதானுஸாரீ ।
ஸிதேந்துவத்தே பரிவர்த்தமானா:
காலேன கௌமார தசாமவாபு: ॥ 23

லக்ஷ்மணன் இராமனின் இணையாகவும், சத்ருக்னன் பரதனின் இணையாகவும் வளர்பிறைச் சந்திரன் போல் காலத்தே வளர்ந்து குமார பருவம் எய்தினர்.

अथोपनीता गुरुणात्मजास्ते
यथाक्रमं क्षत्रियसंस्क्रियाभिः ।
शस्त्रेषु शास्त्रेषु च वेदकूटे
बाल्येऽपि नैपुण्यमवापुरेते ॥ २४

அதோபனீதா குருணாத்மஜாஸ்தே
யதாக்ரமம் க்ஷத்ரிய ஸம்ஸ்க்ரியாபி: ।
சஸ்த்ரேஷு சாஸ்த்ரேஷு ச வேதகூடே
பால்யே஽பி நைபுண்யமவாபுரேதே ॥ 24

முறையே உபனீதம் செய்து வைக்கப்பட்ட அக்குமாரர்கள், க்ஷத்ரிய ஸம்ஸ்காரங்களான சஸ்த்ர, சாஸ்த்ர வித்யைகளிலும், வேதவித்யை, ராஜநீதிகளிலும் இளமையிலேயே தேர்ச்சியடைந்தனர்.

इत्थं परात्मा मनुजावतरे
मनुष्यधर्माननुकृत्य सर्वान् ।
चक्रे विकारी परिणामहीनो
मनुष्यधर्मान् स्वकृतैश्च शासन् ॥ २५

இத்தம் பராத்மா மனுஜாவதாரே
மனுஷ்யதர்மானனுக்ருத்ய ஸர்வான் ।
சக்ரே விகாரீ பரிணாமஹீனோ
மனுஷ்ய தர்மான் ஸ்வக்ருதைச்ச சாஸன் ॥ 25

இவ்விதம் மனிதனாக அவதரித்த பரமாத்மாவும் மனித தர்மங்களைப் பின்பற்றி தனது செயல்களிலும் அத்தர்மங்களைக் கடைபிடித்தொழுகினான்.

नाम्नेति सीता भुवनप्रसिद्धा
माया स्वयं सा परमस्य पुंसः ।
मखाङ्गणे हेमहलेनकृष्टे
लब्धा सुकन्या जनकेन राज्ञा ॥ २६

நாம்னேதி ஸீதா புவனப்ரஸித்தா
மாயா ஸ்வயம் ஸா பரமஸ்ய பும்ஸ: ।
மகாங்கணே ஹேமஹலேனக்ருஷ்டே
லப்தா ஸுகன்யா ஜனகேன ராக்ஞா ॥ 26

யாகசாலையை (அமைக்க) தங்கக் கலப்பையால் உழும்பொழுது பரமபுருஷனின் மாயா வடிவினளான ஸீதை என்று ப்ரஸித்தி பெற்ற பெண் அரசர் ஜனகரால் அடையப்பட்டாள்.

गृह्णन् स भावे दुहितुर्विवेकी
तामस्य पत्न्याः प्रसमर्प्य हस्ते ।
संवर्धयामास कुलस्य भूत्यै
श्रियं यथावत् सरितामधीशः ॥ २७

க்ருஹ்ணன் ஸ பாவே துஹிதுர்விவேகீ
தாமஸ்ய பத்ன்யா: ப்ரஸமர்ப்ய ஹஸ்தே ।
ஸம்வர்தயாமாஸ குலஸ்ய பூத்யை
ச்ரியம் யதாவத் ஸரிதாமதீச: ॥ 27

விவேகியான ஜனகனும் அப்பெண் குழந்தையைத் தன் மகள் எனும் பாவத்துடன் மனைவியிடமளித்துத் தனது குலம் விளங்க வளர்த்து வரலானான்.

तं नारदो वेत्य च पद्मनेमीं
हरेरसौ नान्यवधूत्वमीयात् ।
तस्मै तदस्ते महतोऽपि यत्ना-
द्देयेति भूपं मुनिरादिदेश ॥ २८

தம் நாரதோ வேத்ய ச பத்மநேமீம்
ஹரேரஸௌ நாந்யவதூத்வமீயாத் ।
தஸ்மை ததஸ்தே மஹதோऽபி யத்னா-
த்தேயேதி பூபம் முனிராதிதேச ॥ 28

இந்நிலையில் நாரதர் அவரை அடைந்து ஹரியின் தர்மபத்னியாகிய இவளை எப்பாடுபட்டேனும் நாரணனுக்கே விவாஹம் செய்து கொடுக்குமாறு ஆக்ஞாபித்தார்.

विचिन्त्य तस्माज्जनकोपि यस्तु
ज्यारोपणं तस्य महेशचापे ।
कुर्यात् स सीतां परिणेष्यतीति
व्यधात् प्रतिज्ञां मिथिलेश्वरोयम् ॥ २९

விசிந்த்ய தஸ்மாஜ்ஜனகோபியஸ்து
ஜ்யாரோபணம் தஸ்தமஹேச சாபே ।
குர்யாத் ஸ ஸீதாம் பரிணேஷ்யதீதி
வ்யதாத் ப்ரதிக்ஞாம் மிதிலேச்வரோயம் ॥ 29

ஆகவே நாரதரின் ஆக்ஞையை நிறைவேற்ற மிதிலேச்வரன் ஜனகனும் சிவதனுசில் நாணேற்றுபவனை ஸீதை மணப்பாள் என சூளுரை பகன்றாள்.

तामीहमाना वरवर्णिनीं ये
नृपा बलाढ्या बहवस्समेत्य ।
उद्धर्तुमुद्यम्य महच्छरासं
महत्यामपप्तन् प्रविभग्न दर्पाः ॥ ३०

தாமீஹமானா வரவர்ணினீம் யே
ந்ருபா பலாட்யா பஹவஸ்ஸமேத்ய ।
உத்தர்த்துமுத்யம்ய மஹச்சராஸம்
மஹ்யாமபப்தன் ப்ரவிபக்ன தர்பா: ॥ 30

சிறந்த அழகுடைய ஸீதையை மணக்க விரும்பிய வலிமைமிக்க அரசர் பலரும் அவ்வில்லை உயர்த்தவும் முடியாது தனது செருக்கடங்கி முயற்சியில் தோற்றனர்.

तां रामभार्यां विचिकीर्षुरन्तः
गाधेस्सुतेभ्येत्य पुरीमयोध्याम् ।
मखावनार्थीव निशाचरेभ्यो
रामं ययाचे पितरं मुनीन्द्रः ॥ ३१

தாம் ராமபார்யாம் விசிகீர்ஷுரந்த:
காதேஸ்ஸுதேப்யேத்ய புரீமயோத்யாம் ।
மகாவனார்த்தீவ நிசாசரேப்யோ
ராமம் யயாசே பிதரம் முனீந்த்ர: ॥ 31

அந்த ஸீதையை இராமனின் மனைவியாகச் செய்ய வேண்டும் என்ற உள்நோக்குடன் அயோத்தியை அடைந்த விச்வாமித்ர முனிவர், தந்தை தசரதரை அரக்கர்களிடமிருந்து தனது யாகத்தைக் காக்க அழைத்துச் செல்லும் வ்யாஜத்தில் குழந்தை இராமனை (தன்னுடன்) அனுப்புமாறு வேண்டினான்.

बाल्यं सुतस्यापि मुनिप्रकोपं
प्रत्याख्यया लभ्यमवेत्य खिन्नः ।
नृपो विमृश्यास्य पुरोधसामौ
सुतप्रभावं प्रतिपद्य चादात् ॥ ३२

பால்யம் ஸுதஸ்யாபி முனிப்ரகோபம்
ப்ரத்யாக்யயா லப்யமவேத்ய கின்ன: ।
ந்ருபோ விம்ருச்யாஸ்ய புரோதஸாஸௌ
ஸுதப்ரபாவம் ப்ரதிபத்ய சாதாத் ॥ 32

குழந்தை இராமனைக் கொடுக்க (தசரதர்) விரும்பாததால் விச்வாமித்ரர் கோபங்கொள்ள, தசரதர் மனம் வருந்த, (பின்) புத்ரனின் மஹிமையை வசிஷ்டரால் அறிந்த அரசர் இராமனை விச்வாமித்ரரிடம் அளித்தார்.

प्रशस्य भूपं समवाप्य रामं
मुनिस्स सौमित्रिमनुप्रतस्थे ।
तदध्वखेदस्य निवारणार्थं
मन्त्रद्वयं तौ स उपादिदेश ॥ ३३

ப்ரசஸ்ய பூபம் ஸமவாப்ய ராமம்
முனிஸ்ஸ ஸௌமித்ரிமனுப்ரதஸ்த்தே ।
ததத்வகேதஸ்ய நிவாரணார்த்தம்
மந்த்ரத்வயம் தௌ ஸ உபாதிதேச ॥ 33

மஹரிஷி விசுவாமித்ரரும் இராம லக்ஷ்மணர்களைப் பெற்று, தசரதரைப் புகழ்ந்து, அக்குழந்தைகளுக்கு வழிநடைப்பயணத் துயரைத்துடைப்பதற்காக "பலா-அதிபலா" என்ற இரு மந்த்ரங்களையும் உபதேசித்தார்.

सन्तीर्य गङ्गां नृपनन्दनाभ्यां
वनं मुनीन्द्रेथ विगाहमाने ।
रक्षस्त्रियं साधुजनोपरोधं
हनेति रामं स समादिदेश ॥ ३४

ஸந்தீர்ய கங்காம் ந்ருபநந்தனாப்யாம்
வனம் முனீந்த்ரேத விகாஹமானே ।
ரக்ஷஸ்த்ரியம் ஸாதுஜனோபரோதம்
ஹனேதி ராமம் ஸ ஸமாதிதேச ॥ 34

தசரதரின் குழந்தைகளுடன் கங்கையைக் கடந்து தவசிலர் காட்டில் சென்றுகொண்டிருக்கும் பொழுது மக்களை வதைத்துவந்த அரக்கி தாடகையைக் "கொல்" என இராமனுக்குக் கட்டளை இட்டார்.

तां ताडकाख्यं मुनिवाग्विधानात्
नागायुतानां बलमावहन्तीम् ।
एकेन रामो विशिखेन घोरां
आपातयत् भूमितले विहिंसन् ॥ ३५

தாம் தாடகாக்யம் முனிவாக்விதானாத்
நாகாயுதானாம் பலமாவஹந்தீம் ।
ஏகேன ராமோ விசிகேன கோராம்
ஆபாதயத் பூமிதளே விஹிம்ஸன் ॥ 35

அம்முனிவரின் சொற்படி தாடகை என்று ப்ரஸித்தி பெற்ற ஆயிரக்கணக்கான யானைகளின் பலத்தைப் பெற்றுள்ள கோரமான அவ்வரக்கியை இராமன் ஒரே பாணத்தால் பூமியில் வீழ்த்தினான்.

तस्यां हतायां कुशिकात्मजोऽसौ
हर्षप्लुतोऽत्रैव विचिन्त्य किञ्चित् ।
सर्वास्त्रजालं सरहस्यमन्त्रं
ददौ मुनीन्द्रो रघुनाथमीड्यम् ॥ ३६

தஸ்யாம் ஹதாயாம் குசிகாத்மஜோऽஸௌ
ஹர்ஷப்லுதோத்ரைவ விசிந்த்ய கிஞ்சித் ।
ஸர்வாஸ்த்ரஜாலம் ஸரஹஸ்யமந்த்ரம்
ததௌ முனீந்த்ரோ ரகுநாதமீட்யம் ॥ 36

குசிகனின் புத்திரரான விச்வாமித்ரரும் தாடகை வதத்தால் மகிழ்ந்து, சிறிதளவு சிந்தித்து அனைத்து அஸ்த்ரங்களின் மூலமந்த்ரத்தையும் போற்றத்தக்க இராமனுக்கு வழங்கினார்.

कथास्स ताभ्यां कथयन्सुरम्याः
क्रमेण सिद्धाश्रममाससाद ।
यज्ञे प्रवृत्ते मुनिभिस्तदानीं
रक्षांसि चक्रुर्विविधान्तरायम् ॥ ३७

காதாஸ்ஸ தாப்யாம் கதயன்ஸுரம்யா:
க்ரமேண ஸித்தாச்ரமமாஸஸாத ।
யக்ஞே ப்ரவ்ருத்தே முனிபிஸ்ததானீம்
ரக்ஷாம்ஸி சக்ருர்விவிதாந்தராயம் ॥ 37

அழகிய கதைகளைக் கூறியவண்ணம் ஸித்தாச்ரமத்தை அடைந்தார். அப்பொழுது முனிவர்கள் யாகத்தில் ஈடுபட, அரக்கர்களும் பலவித தொல்லைகளைக் கொடுக்கத் தொடங்கினர்.

मारीचमुत्क्षिप्य मखघ्नमब्धौ
निमज्जयामास शरेण रामः ।
अन्यांश्च तस्यानुचरान् व्यहिंसीत्
सुबाहुपूर्वान् सहलक्ष्मणेन ॥ ३८

மாரீசமுத்க்ஷிப்ய மகக்னமப்தௌ
நிமஜ்ஜயாமாஸ சரேண ராம: ।
அந்யாம்ச்ச தஸ்யாநுசரான் வ்யஹிம்ஸீத்
ஸுபாஹுபூர்வான் ஸஹலக்ஷ்மணேன ॥ 38

அரக்கன் மாரீசனை தனது பாணத்தால் கடலில் மூழ்கடித்தார். ஸுபாஹு முதலிய அவனது தோழர்களையும் லக்ஷ்மணன் துணைகொண்டு அழித்தொழித்தார்.

समाप्तयज्ञो विधिवन्मुनीन्द्रो
हर्षेण चानर्च रघुप्रवीरौ ।
मुनेर्मतेनाथ विदेह यज्ञं
शैवं च चापं स ययौ दिदृक्षुः ॥ ३९

ஸமாப்தயக்ஞோ விதிவன்முனீந்த்ரோ
ஹர்ஷேண சானர்ச்ச ரகுப்ரவீரௌ ।
முனேர்மதேநாத விதேஹயக்ஞம்
சைவம் ச சாபம் ஸ யயௌ தித்ருக்ஷு: ॥ 39

முறைப்படி யாகத்தை முடித்த முனிச்ரேஷ்டரும் மகிழ்வுடன் ரகுவீரர்களைப் போற்றி, அந்த முனிவரின் விருப்பப்படி அவர்களுடன் விதேஹ தேசத்தில் நடைபெற விருக்கும் யக்ஞத்தையும் சிவதனுசையும் காணவிரும்பி மிதிலை நோக்கிப் புறப்பட்டார்.

संप्रेक्ष्य मार्गे सुरदीर्घिकायाः
तीरस्थितं गौतममाश्रमं सः ।
शापादहल्यां कुपितस्य भर्तुः
ददर्श रामो दृषदीकृतां सः ॥ ४०

ஸம்ப்ரேக்ஷ்ய மார்கே ஸுரதீர்கிகாயா:
தீரஸ்திதம் கௌதமமாச்ரமம் ஸ: ।
சாபாதஹல்யாம் குபிதஸ்ய பர்த்து:
ததர்ச ராமோ த்ருஷதீக்ருதாம் ஸ: ॥ 40

வழியில் கங்கையின் கரையிலுள்ள கௌதமரின் ஆச்ரமத்தைப் பார்த்த இராமர், (அங்கு) கணவனின் சாபத்தால் கல்லாய்ச் சமைந்த அகலிகையைக் கண்டார்.

पृष्ट्वा मुनिं गौतममन्युहेतुं
तदोपलेभेस्य गिरैव रामः ।
शक्रस्स्वयं गौतमवेषधारी
पूतीचकारेति सतीमहल्याम् ॥ ४१

ப்ருஷ்ட்வா முனிம் கௌதமமன்யுஹேதும்
ததோபலேபேஸ்ய கிரைவ ராம: ।
சக்ரஸ்ஸ்வயம் கௌதமவேஷதாரீ
பூதீசகாரேதி ஸதீமஹல்யாம் ॥ 41

கௌதமரைப் போன்று வேடமணிந்த இந்திரன் தன்னிச்சையாக பதிவ்ரதை அகலிகையை களங்கப்படுத்தினான் என்று விச்வாமித்ரரின் வாயிலாகக் கேட்டு, கௌதமரின் கோபத்திற்குக் காரணத்தை இராமன் அறிந்தான்.

तां कौशिकस्यैव मुनेर्निदेशात्
कृत्वा पुरावत् स्वपदाभियोगात् ।
तया च भर्त्रा प्रतिपूज्यमानः
रामः प्रपेदे मिथिलां मुनीन्द्रैः ॥ ४२

தாம் கௌசிகஸ்யைவ முனேர்நிதேசாத்
க்ருத்வா புராவத் ஸ்வபதாபியோகாத் ।
தயா ச பர்த்ரா ப்ரதிபூஜ்யமான:
ராம: ப்ரபேதே மிதிலாம் முனீந்த்ரை: ॥ 42

கௌசிகரின் கட்டளைப்படித் தனது திருவடி சம்பந்தத்தினால் அகலிகையை சாபம் நீங்கி முன்போல் அழகிய வடிவைப் பெறச்செய்து. அகலிகை — கௌதம தம்பதியால் போற்றப்பெற்றவாக இராமர் முனீந்திரர் களுடன் மிதிலையை அடைந்தார்.

तत्रार्चितोऽसौ जनकेन राज्ञा
चापन्महान्तं गिरिशस्य मर्त्यैः ।
अर्धायुतैरस्य सभाभिनीतं
ददर्श रामो मुनिना प्रणुन्नः ॥ ४३

தத்ரார்சிதோऽஸௌ ஜனகேன ராக்ஞா
சாபன்மஹாந்தம் கிரிசஸ்ய மர்த்யை: ।
அர்தாயுதைரஸ்ய ஸபாபிநீதம்
ததர்ச ராமோ முனினா ப்ரணுன்ன: ॥ 43

அரசர் ஜனகரால் மிதிலை நகரில் கௌரவிக்கப்பட்ட இராமர் அவரது சபைக்கு ஐயாயிரம் ஆட்களால் கொண்டு வரப்பட்ட சிவனது பெருவில்லை முனிவரால் தூண்டப் பட்டவராகக் கண்டார்.

उद्धृत्य चापं नमयन् सलीलं
भङ्क्त्वास्थलस्तं महतास्वनेन ।
सीतार्पितां हेममयीं प्रपेदे
रामस्वकण्ठे वरणस्रजं च ॥ ४४

உத்த்ருத்ய சாபம் நமயன் ஸலீலம்
பங்க்த்வாஸ்யலஸ்தம் மஹதாஸ்வனேன ।
ஸீதார்பிதாம் ஹேமமயீம் ப்ரபேதே
ராமஸ்வ கண்டே வரணஸ்ருஜம் ச ॥ 44

வில்லைக் கையிலெடுத்து விளையாட்டாக வளைத்து சப்தம் மிக எழ ஒடித்து, ஸீதையால் அளிக்கப்பட்ட தங்க மயமான சுயம்வர மாலையை இராமன் தன் தோளில் ஏற்றார்.

ततः प्रहर्षाज्जनकं प्रतिज्ञां
निवेद्य रामाय सुतां दिदित्सुः ।
तस्यैव तीव्रं पितरं निनीषुः
मुनेर्मतात् तत्सचिवान्न्ययुङ्क्त ॥ ४५

தத: ப்ரஹர்ஷாஜ்ஜனகம் ப்ரதிக்ஞாம்
நிவேத்ய ராமாய ஸுதாம் திதித்ஸு: ।
தஸ்யைவ தீவ்ரம் பிதரம் நிநீஷு:
முனேர்மதாத் தத்ஸசிவாந்ந்யயுங்க்த ॥ 45

மகிழ்ந்த ஜனகரும் தனது மகளை இராமனுக்குக் கொடுக்க விரும்பி, தனது ப்ரதிக்ஞையை வெளியிட்டு விச்வாமித்ரரின் எண்ணப்படி தந்தை தசரதரை அழைத்து வர மந்திரிமார்களை நியமித்தார்.

अभ्यागतं तत्पितरं प्रमोदात्
संपूज्य राजा जनकस्तदानीम् ।
रामाय सीतां प्रददौ विधानात्
लक्ष्मीमिवाब्धिर्हरये सभूषाम् ॥ ४६

அப்யாகதம் தத்பிதரம் ப்ரமோதாத்
ஸம்பூஜ்ய ராஜா ஜனகஸ்ததானீம் ।
ராமாய ஸீதாம் ப்ரததௌ விதானாத்
லக்ஷ்மீமிவாப்திர் ஹரயே ஸபூஷாம் ॥ 46

ஜனகனும் விரைவில் அங்கு வந்த இராமனின் தந்தை தசரதரை மகிழ்வுடன் பூஜித்து, பாற்கடல் மஹாலக்ஷ்மியை மஹாவிஷ்ணுவிற்களித்தது போல் ஆபரணங்களால் நன்கு அலங்கரிக்கப்பட்ட ஸீதையை இராமனின் பொருட்டு அளித்தார்.

कन्याभिरस्यावरजस्य चायं
रामानुजांस्त्रीन् गृहमेधिनश्च ।
कृत्वा तदानीं विधिवत् ससर्ज
प्रदात् स रत्नानि धनान्यथेष्टम् ॥ ४७

கந்யாபிரஸ்யாவரஜஸ்ய சாயம்
ராமானுஜாம்ஸ்த்ரீன் க்ருஹமேதினச்ச ।
க்ருத்வா ததானீம் விதிவத் ஸஸர்ஜ
ப்ரதாத் ஸ ரத்னானி தனான்யதேஷ்டம் ॥ 47

ஜனகரும் தனது தம்பியினுடைய மூன்று கன்னிகைகளால் இராமனின் தம்பிகள் மூவரையும் அதே முகூர்த்தத்தில் முறைப்படி க்ருஹஸ்தர்களாக்கி வேண்டிய அளவில் பொன்னையும் பொருளையும் அளித்து அனுப்பிவைத்தார்.

आपृच्छ्य भूपौ कुशिकात्मजेऽस्मिन्
यातेऽस्ववासं तपसे नगेन्द्रम् ॥
रामः प्रतस्थे सपरिच्छदस्तत्
पुरीमयोध्यां सपरिग्रहश्च ॥ ४८

ஆப்ருச்ய பூபௌ குசிகாத்மஜேஸ்மின்
யாதேஸ்வவாஸம் தபஸே நகேந்த்ரம் ।
ராம: ப்ரதஸ்தே ஸபரிச்சதஸ்தத்
புரீமயோத்யாம் ஸபரிக்ரஹச்ச ॥ 48

விச்வாமித்ரரும் ஜனகன் — தசரதன் இவர்களிடம் விடைபெற்றுத் தவம் செய்ய இமயமலையிலுள்ள தனது இருப்பிடத்தைக் குறித்துச் சென்ற அளவில், இராமனும் சுற்றத்தார் புடைசூழ மனைவியுடன் அயோத்திக்குக் கிளம்பினான்.

निरुध्य मार्गं हरचापभङ्गात्
रुषा परश्वी जमदग्निसूनुः ।
रामोऽभ्यपप्तत् क्षितिपप्रमाथी
द्वन्द्वाहवायाहूय रघुप्रवीरम् ॥ ४९

நிருத்ய மார்கம் ஹரசாப பங்காத்
ருஷா பரச்வீ ஜமதக்னிஸூனு: ।
ராமோப்யபப்தத் க்ஷிதிபப்ரமாதீ
த்வந்த்வாஹவாஹூய ரகுப்ரவீரம் ॥ 49

பரமேச்வரனின் வில்லொடித்த செய்தியைக்கேட்டு கோபங்கொண்ட ஜமதக்னியின் புத்திரர் க்ஷத்ரியர்களை ஒழிக்கும் பரசுராமன் இராமனை வழிமறித்து த்வந்த்வ யுத்தத்திற்கு அழைத்தார்.

मूर्च्छां प्रपन्ने पितरीक्ष्य विप्रं
प्राच्छिद्य हस्ताद्धनुरस्य रामः ।
तस्थं स्वतेजश्च यदा जहार
प्रभग्नदर्पः प्रययौ द्विजन्मा ॥ ५०

மூர்ச்சாம் ப்ரபன்னே பிதரீக்ஷ்ய விப்ரம்
ப்ராச்சித்ய ஹஸ்தாத்தனுரஸ்ய ராம: ।
தஸ்தம் ஸ்வதேஜஸ்ச யதா ஜஹார
ப்ரபக்னதர்ப: ப்ரயயௌ த்விஜன்மா ॥ 50

அந்தணர் பரசுராமரைக் கண்டு தந்தை தசரதர் மூர்ச்சை அடைந்த அளவில், இராமர் அவரது வில்லை உடைத்து அவரிடமிருந்த தனது தேஜஸை ஸ்வீகரித்துக் கொள்ள, செருக்கடங்கிய அவ்வந்தணரும் தன்வழி ஏகினார்.

महेन्द्रकल्पं विजयश्रियासौ
प्रहृष्टपित्रा प्रययावयोध्याम् ।
स्त्रियासमं द्वादशवत्सरान् सः
भुङ्क्ते स्म भोगानिव राजसूनुः ॥ ५१

மஹேந்த்ரகல்பம் விஜயச்ரியாஸௌ
ப்ரஹ்ருஷ்டபித்ரா ப்ரயயாவயோத்யாம் ।
ஸ்த்ரியாஸமம் த்வாதசவத்ஸரான் ஸ:
புங்க்தே ஸ்ம போகானிவ ராஜஸூனு: ॥ 51

பரசுராமனை வென்ற இராமர் விஜயலக்ஷ்மியுடன் மஹேந்திரனுக்கிணையாக மகிழ்ந்த தந்தையுடன் அயோத்தியை அடைந்து பன்னிரண்டு ஆண்டுகள் மனைவியுடன் அனைத்து போகங்களையும் அனுபவித்தார்.

## ॥ अयोध्याकाण्ड प्रारम्भः ॥

अथैकदा मातुलधाम यातः
शत्रुघ्नपूर्वो भरतः कुमारः ।
तदा स राजा परिषद्विधानात्
रामस्य राज्यक्षमतामजानात् ॥ ५२

## அயோத்யாகாண்டம்

அதைகதா மாதுளதாம யாத:
சத்ருக்னபூர்வோ பரத: குமார: ।
ததா ஸ ராஜா பரிஷத்விதானாத்
ராமஸ்ய ராஜ்யக்ஷமதாமஜானாத் ॥ 52

இந்நிலையில் ஒரு சமயம் சத்ருக்னனுடன் கூடிய குமாரன் பரதன், மாமா யுதாஜித்தின் அரண்மனைக்குச் சென்ற அளவில் அரசர் தசரதர் மந்த்ரிப்ரதானிகளின் ஆலோசனைப்படி இராமனின் அரசாளும் திறமையை அறிந்தார்.

ततोतिहर्षादभिषेक्तुमिच्छन्
धर्मासने राममयेय शक्तिम् ।
मन्त्रिप्रधानैर्नृपतिर्गुरूक्त्या
संभारजालान्यपि सम्बभार ॥ ५३

ததோதிஹர்ஷாதபிஷேக்துமிச்சன்
தர்மாஸனே ராமமயேயசக்திம் ।
மந்த்ரிப்ரதானைர்ந்ருபதிர்குருக்த்யா
ஸம்பாரஜாலாந்யபி ஸம்பபார ॥ 53

மந்த்ரி ப்ரதானிகளின் ஆலோசனையை ஏற்ற மன்னர் மகிழ்வுடன் ஒப்புயர்வற்ற சக்திகொண்ட இராமனை அரியணையில் ஏற்ற விரும்பி பட்டாபிஷேக விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யலானார்.

रक्षोभरक्षेपविघातभूतं
रामाभिषेकं गणयत्सुरौघैः ।
क्षणेन वाणी प्रहिता भुजिष्यां
विवेश कुब्जां भरतस्य मातुः ॥ ५४

ரக்ஷோபரக்ஷேபவிகாதபூதம்
ராமாபிஷேகம் கணயத்ஸுரௌகை: ।
க்ஷணேன வாணீ ப்ரஹிதா புஜிஷ்யாம்
விவேச குப்ஜாம் பரதஸ்ய மாது: ॥ 54

பூமியில் ராக்ஷஸர்களின் பாரத்தை அழிப்பதற்குத் தடையாக இராமனின் பட்டாபிஷேகம் விளங்குமோ என எண்ணும் தேவர்களால், அதனைத் தடுப்பதற்காக அனுப்பப்பட்ட செய்தி பரதனின் தாயான கைகேயியின் வேலைக்காரி கூனியை அடைந்தது.

कुब्जोपजापात् विकृतान्तरासौ
कैकेयिरुष्टा नृपतिं ययाचे ।
देवासुरे तुष्टनृपोपलब्धं
वरद्वयं तन्निहितं तदानीम् ॥ ५५

குப்ஜோபஜாபாத் விக்ருதாந்தராஸௌ
கைகேயிருஷ்டா ந்ருபதிம் யயாசே ।
தேவாஸுரே துஷ்டந்ருபோபலப்தம்
வரத்வயம் தன்னிஹிதம் ததானீம் ॥ 55

கூனியின் வஞ்சகப் பேச்சில் மயங்கி மனம் மாறிய கைகேயி, தேவாஸுர யுத்தத்தில் மகிழ்ந்த தசரதரிடம் இருந்து தான்பெற்று, அவ்வமயம் அவரிடமே கொடுத்து வைத்திருந்த வரங்களிரண்டையும் அடங்காச்சினத்துடன் யாசித்தாள்.

एकेन राज्ये स्वसुताभिषेकं
राघमस्य चान्येन विवासनं च ।
चतुर्दशाब्दान्तमरण्यमध्ये
तपस्विधर्मेन तयार्थितोऽसौ ॥ ५६

ஏகேன ராஜ்யே ஸ்வஸுதாபிஷேகம்
ராமஸ்ய சாந்யேன விவாஸனம் ச ।
சதுர்தசாப்தாந்தமரண்யமத்யே
தபஸ்விதர்மேன தயார்த்திதோऽஸௌ ॥ 56

வரம் ஒன்றினால் தனது மகன் பரதனின் பட்டாபிஷேகத்தையும், மற்றொன்றினால் தவமுனிவரின் நெறியேற்று 14 ஆண்டுகள் வனவாசம் செய்ய வேண்டும் என தசரதர் இக்கைகேயியினால் வேண்டப்பட்டார்.

नृपस्तदाकर्ण्य वचः प्रियायाः
शोकाभिघातात्पमुहूर्तमूर्च्छः ।
उत्थाय पप्रच्छ पुनस्स पुत्रं
त्यक्ष्यामि पापं कथमित्यरण्ये ॥ ५७

ந்ருபஸ்ததாகர்ண்ய வச: ப்ரியாயா:
சோகாபிகாதாப்தமுகூர்த்தமூர்ச்ச: ।
உத்தாய பப்ரச்ச புனஸ்ஸ புத்ரம்
த்யக்ஷ்யாமி பாபம் கதமித்யரண்யே ॥ 57

அரசர் தசரதனும் அன்பானவளின் அவ்வார்த்தையைக் கேட்டு சோகத்தால் பீடிக்கப்பட்டவராக ஒரு முகூர்த்தம் மூர்ச்சித்து எழுந்து பாக்யமற்ற மகனைக் காட்டிற்கு எவ்விதம் அனுப்புவேன் என அவளிடம் வினவினார்,

गृहाण राज्यं तव सूनवे त्वं
रामः सुखं तिष्ठतु मन्दिरेऽस्मिन् ।
इत्यर्थिता सा बहुधापि भर्त्रा
कठोरभावा न तदग्रहीच्च ॥ ५८

க்ருஹாண ராஜ்யம் தவ ஸூனவே த்வம்
ராம: ஸுகம் திஷ்டது மந்திரேஸ்மின் ।
இத்யர்த்திதா ஸா பஹுதாபி பார்த்ரா
கடோரபாவா ந ததக்ருஹிச்ச ॥ 58

உனது மகனுக்கு அரசைப் பெற்றுக்கொள். இராமன் அரண்மனையில் இருக்கட்டும் என தசரதர் பலவாறு வேண்டியபொழுதும், கைகேயி கடுமையான தன்மையால் அவ்வார்த்தைகளை ஏற்கவில்லை.

दुःखाब्धिमग्नस्य पितुर्विमुक्त्यै
राज्ञस्तु सत्यग्रथितस्य रामः ।
आशास्य भूपं जननीं च खिन्नां
नयेन जग्राह वनप्रवासम् ॥ ५९

து:காப்திமக்னஸ்ய பிதுர்விமுக்த்யை
ராக்ஞஸ்து ஸத்யக்ரதிதஸ்ய ராம: ।
ஆசாஸ்ய பூபம் ஜனனீம் ச கின்னாம்
நயேன ஜக்ராஹ வனப்ரவாஸம் ॥ 59

சத்தியத்தால் கட்டுண்டு துயரக்கடலில் மூழ்கியுள்ள தந்தையான அரசரின் பிரிவின் பொருட்டு அவரை சமாதானப்படுத்தி, மனங்கலங்கிய தாய் கௌஸல்யாவை நல்வார்த்தைகளால் அமைதிப்படுத்தி காட்டிற்குச் செல்வதை (இராமன்) ஏற்றார்.

ततोर्थितो लक्ष्मणजानकीभ्यां
भृशं विधायानुचरावुभौ तौ ।
रामः प्रतस्थे धृतवल्कलोयं
भूपं परिक्रम्य रथेन ताभ्याम् ॥ ६०

ததோர்த்திதோ லக்ஷ்மணஜானகீப்யாம்
ப்ருசம் விதாயானுசராவுபௌ தௌ ।
ராம: ப்ரதஸ்தே த்ருதவல்கலோயம்
பூபம் பரிக்ரம்ய ரதேன தாப்யாம் ॥ 60

லக்ஷ்மணனும் ஜானகியும் இராமனைத் தொடர்ந்து வருவதாக வற்புறுத்த, இராமனும் மரஉறி தரித்து அவர்களுடன் அரசரை வணங்கி தேரில் ஏறினான்.

आसाद्य गङ्गां स विसृज्य सूतं
जटां च कृत्वा सहलक्ष्मणेन ।
ततार दिव्यां सरितं च नावा
गुहेन शीघ्रं सुहृदाहृतेन ॥ ६१

ஆஸாத்ய கங்காம் ஸ விஸ்ருஜ்ய ஸூதம்
ஜடாம் ச க்ருத்வா ஸஹலக்ஷ்மணேன ।
ததார திவ்யாம் ஸரிதம் ச நாவா
குஹேன சீக்ரம் ஸுஹ்ருதாஹ்ருதேன ॥ 61

கங்கைக் கரையை அடைந்து தேரோட்டி சுமந்த்ரருக்கு விடைகொடுத்தனுப்பி, இலக்ஷ்மணனுடன் சடைமுடி தரித்து, நல்மனம் படைத்த குகனால் கொண்டுவரப்பட்ட படகின் மூலம் கங்கையைக் கடந்தார்.

मुनिं भरद्वाजमथानुपश्यन्
भार्यानुजाभ्यामनुनाहितोयम् ।
तद्दृष्टवर्त्मः क्रमशः प्रपेदे
गिरिं सुवासाय च चित्रकूटम् ॥ ६२

முனிம் பரத்வாஜமதானுபச்யன்
பார்யானுஜாப்யாமமுனாஹிதோயம் ।
தத்த்ருஷ்டவர்த்ம: க்ரமச: ப்ரபேதே
கிரிம் ஸுவாஸாய ச சித்ரகூடம் ॥ 62

பரத்வாஜாச்ரமத்தை அடைந்து அவரை வணங்கி சிறிது காலம் தங்கி, அவர் வழிகாட்ட சுகமாக வசிப்பதற்கு சித்ரகூட மலையை அடைந்தார்.

प्रणम्य वाल्मीकिमथाप्तपूजः
भ्रात्रा विनिर्माप्य च पर्णशालाम् ।
रामस्सुखं सानुचरोध्युवास
स्वर्गे यथा देवपतिः ससच्या ॥ ६३

ப்ரணம்ய வால்மீகிமதாப்தபூஜ:
ப்ராத்ரா விநிர்மாய்ய ச பர்ணசாலாம் ।
ராமஸ்ஸுகம் ஸானுசரோத்யுவாஸ
ஸ்வர்கே யதா தேவபதி: ஸஸர்ச்யா ॥ 63

சித்ரகூடத்தில் வால்மீகி முனிவரை வணங்கி லக்ஷ்மணன் பர்ணசாலை அமைக்க, தேவேந்த்ரன் ஸ்வர்கத்தில் வசிப்பது போல் (இராமன்) மனைவியுடன் சுகமாக வசித்தார்.

सुते प्रयाते गहनं नरेन्द्रः
कैकेयिमुञ्जन् भृशमार्तचित्तः ।
रामस्य मातुः प्रविशन् स कक्षां
पर्यङ्कशायी विलपन् तदानीम् ॥ ६४

ஸுதே ப்ரயாதே கஹனம் நரேந்த்ர:
கைகேயிமுஞ்ஜன் ப்ருசமார்த்தசித்த:
ராமஸ்ய மாது: ப்ரவிசன் ஸ கக்ஷாம்
பர்யங்கசாயீ விலபன் ததானீம் ॥ 64

அரசர் தசரதர் இராமன் காடு சென்ற அளவில் கைகேயியை வெறுத்து மனம் மிக வருந்தி கௌஸல்யையின் அந்தப்புரம் சென்று கட்டிலில் படுத்தவராக அழுது கொண்டே இருந்தார்.

रामस्य वृत्तं स निशम्य सर्वं
निवृत्तसूतोक्तमथातिदुःखी ।
पुरोरुजस्यैव मुनेरवाप्तं
सस्मार शापं तदपत्यघातात् ॥ ६५

ராமஸ்ய வ்ருத்தம் ஸ நிசம்ய ஸர்வம்
நிவ்ருத்தஸூதோக்தமதாதிதுக்கீ ।
புரோருஜஸ்யைவ முனேரவாப்தம்
ஸஸ்மார சாபம் ததபத்யகாதாத் ॥ 65

தேரோட்டி ஸுமந்த்ரரின் வாயிலாக இராமனின் வ்ருத்தாந்தத்தை முற்றிலும் அறிந்து துக்கம் மேலிட, அவரது புத்ரனைக் கொன்றதால் ஊருஜஸ் முனிவர் "என்னைப்போல் நீயும் புத்ர சோகத்தால் உயிர் துறப்பாயாக" என தனக்கு முன்பளித்த சாபத்தை நினைவு கூர்ந்தார்.

गजभ्रमेणैव हतस्सपुत्रो
मयेति रामस्य वदन् स मात्रे ।
हाराम सीतेति विलप्य राजा
हालक्ष्मणेत्यापि दिवं प्रपेदे ॥ ६६

கஜப்ரமேணைவ ஹதஸ்ஸபுத்ரோ
மயேதி ராமஸ்ய வதன் ஸ மாத்ரே ।
ஹாராம ஸீதேதி விலப்ய ராஜா
ஹாலக்ஷ்மணேத்யாபி திவம் ப்ரபேதே ॥ 66

யானையென்று தவறாகக் கருதி அவரது மகனைத் தான் கொன்றதையும், அதனால் தனக்கு ஏற்பட்ட சாபத்தையும் கௌஸல்யையிடம் கூறிக்கொண்டு "ஹா ராம! ஹா ஸீதே! ஹா லக்ஷ்மண!" என ஓலமிட்டவாறே உயிர்துறந்து ஸ்வர்கத்தை அடைந்தார்.

योषिद्गणास्तत्र समेत्य राज्ञः
सक्रोशमस्यास्तमनं विलेपुः ।
शरीरमस्य द्रुतमेत्य तैल-
द्रोण्यां च चिक्षेप गुरुस्समन्त्रिः ॥ ६७

யோஷித்கணாஸ்தத்ர ஸமேத்ய ராக்ஞ:
ஸக்ரோசமஸ்யாஸ்தமனம் விலேபு: ।
சரீரமஸ்ய த்ருதமேத்ய தைல-
த்ரோண்யாம் ச சிக்ஷேப குருஸ்ஸமந்த்ரி: ॥ 67

அந்தப்புரப்பெண்கள் அனைவரும் அரசர் இறந்ததை அறிந்து புலம்ப, அவரது உடலை மந்த்ரி ப்ரதானிகள் எண்ணெய்க்கொப்பரையிலிட்டனர்.

वसिष्ठदूतैस्त्वरिताभिनीतः
शत्रुघ्नयुक्तो भरतस्तु वृत्तम् ।
निशम्य धिक्कृत्य द्रुतं निजाम्बां
रामप्रसूमेत्य भृशं शुशोच ॥ ६८

வஸிஷ்ட தூதைஸ்த்வரிதாபினீத:
சத்ருக்னயுக்தோ பரதஸ்து வ்ருத்தம் ।
நிசம்ய திக்ருத்ய த்ருதம் நிஜாம்பாம்
ராமப்ரஸூமேத்ய ப்ருசம் சுசோச ॥ 68

வஸிஷ்டர் தூதர்களை அனுப்பி பரத சத்ருக்னர்களை அழைத்துவர, தந்தையின் முடிவைக் கேட்டு தனது தாயை வெறுத்து, கௌஸல்யையை அடைந்து தாங்கொனாத் துயரை வெளிப்படுத்தினான்.

गुरूपदेशात् स विसृज्य शोकं
भ्रात्रा यथार्हं पितुरन्त्यकृत्यम् ।
कृत्वार्जितं राज्यमपास्य मात्रा
रामं दिदृक्षुर्नगरात् प्रतस्थे ॥ ६९

குருபதேசாத் ஸ விஸ்ருஜ்ய சோகம்
ப்ராத்ரா யதார்ஹம் பிதுரந்த்யக்ருத்யம் ।
க்ருத்வார்ஜிதம் ராஜ்யமபாஸ்ய மாத்ரா
ராமம் தித்ருக்ஷுர்நகராத் ப்ரதஸ்தே ॥ 69

வஸிஷ்டர் அறிவுறுத்த சோகம் தணிந்து விதிப்படி சத்ருக்னனுடன் தந்தையின் அந்திம கார்யங்களை முடித்து; தாய் தனக்கு ஸம்பாதித்துக் கொடுத்த ராஜ்யத்தைத் துறந்து இராமனைக் காண நகரத்தை விட்டுப் புறப்பட்டான்.

शत्रुघ्नयुक्तः स जनैस्समेतः
पथाग्रजस्यैव चरन् क्रमेण ।
संप्राप्य शीघ्रं भरतोद्रिकूटं
दृष्ट्वाग्रजं तस्य पदे पपात ॥ ௭௦

சத்ருக்னயுக்த: ஸ ஜனைஸ்ஸமேத:
யதாக்ரஜஸ்யைவ சரன் க்ரமேண ।
ஸம்ப்ராப்ய சீக்ரம் பரதோத்ரிகூடம்
த்ருஷ்ட்வாக்ரஜம் தஸ்ய பதே பபாத ॥ 70

சத்ருக்னன் மற்றும் நகரமக்கள் புடைசூழ இராமன் சென்ற வழியைப் பின்பற்றி சித்ரகூடத்தை அடைந்த பரதன் இராமனைக் கண்டு அவனது திருவடியில் விழுந்தான்.

उत्थाप्य रामः सहजौ कराभ्यां
विचार्य वृत्तं पितरं विजानन् ।
भार्यानुजाभ्यां विलपन्नितान्तं
तातं यथार्हं विधिनाप्यतर्पीत् ॥ ௭௧

உத்தாப்ய ராம: ஸஹஜௌ கராப்யாம்
விசார்ய வ்ருத்தம் பிதரம் விஜானன் ।
பார்யானுஜாப்யாம் விலபன்னிதாந்தம்
தாதம் யதார்ஹம் விதினாப்யதர்பீத் ॥ 71

இராமனும் தன் கால்களில் விழுந்த சத்ருக்னனையும் பரதனையும் தூக்கி, தந்தையின் முடிவைக் கேட்டறிந்து ஜானகி, லக்ஷ்மணன் இவர்களுடன் அழுது புலம்பி முறைப்படி தந்தைக்குச் செய்யவேண்டிய க்ருத்யங்களைச் செய்தார்.

राज्यं ग्रहीतुं बहुधार्थितोयं
कैकेयिपुत्रेण न तज्जहार ।
प्रायोपवेशाय ततोद्यतन्तं
न्यबोधयत् स्वं गुरुणैव तत्वम् ॥ ७२

ராஜ்யம் க்ரஹீதும் பஹுதார்த்திதோயம்
கைகேயிபுத்ரேண ந தஜ்ஜஹார ।
ப்ராயோபவேசாய ததோத்யதந்தம்
ந்யபோதயத் ஸ்வம் குருணைவ தத்வம் ॥ 72

பரதன் பலவாறு அரசை ஏற்கும்படி (இராமனை) வேண்டிடினும் அதை ஏற்காது உண்ணா நோன்பிருந்து உயிர் துறக்க முயன்ற பரதனை அதிலிருந்து தடுத்து "பித்ருவாக்யபரிபாலனம்" என்ற உயர்ந்த தத்வத்தை போதித்தார்.

तत्पादुकेभ्यर्च्य सविस्मिताक्षः
स्थानीयभावेस्य निवर्तनान्तम् ।
अवाप्य ताभ्यां पुरमेत्य भूयः
संपूजयंस्ते भरतः शशास ॥ ७३

தத்பாதுகேப்யர்ச்ய ஸவிஸ்மிதாக்ஷ:
ஸ்தானீயபாவேஸ்ய நிவர்த்தனாந்தம் ।
அவாப்ய தாப்யாம் புரமேத்ய பூய:
ஸம்பூஜயம்ஸ்தே பரத: சசாஸ ॥ 73

பிறகு இராமனது பாதுகைகளை வேண்டி அவன் திரும்பும்வரை அவற்றின் மூலம் அரசாள நிச்சயித்து அயோத்திக்கு மீண்டும் வந்து, அவற்றைப் பூஜிப்பவனாக பரதன் ஆண்டுவந்தான்.

पौरागमेनास्य मुहुः स नीडं
विदूषितं तद्गिरिमाशु मुञ्चन् ।
रामः समीक्ष्यात्रिमहामुनिं तं
तेनार्हितः सानुचरः प्रतस्थे ॥ ७४

பௌராகமேனாஸ்ய முஹு: ஸ நீடம்
விதூஷிதம் தத்கிரிமாசு முஞ்சன் !
ராம: ஸமீக்ஷ்யாத்ரிமஹாமுனிம் தம்
தேனார்ஹித: ஸானுசர: ப்ரதஸ்தே ॥ 74

இராமனும் நகரமக்கள் தன்னை வந்து காணக்கூடும் என்பதால், சித்ரகூடத்தை விடுத்து, அத்ரி முனிவரிடமிருந்து விடைபெற்றுத் தம்பியுடன் கிளம்பினான்.

॥ आरण्यकाण्ड प्रारम्भः ॥

कृत्वा पदं दण्डककाननेऽसौ
सन्तर्ज्य सीतामपवाहयन्तम् ।
रामो विराधास्रुपमाशुनिघ्नन्
वधूं मुमोचाप्रतिमप्रतापः ॥ ७५

## ஆரண்ய காண்டம்

க்ருத்வா பதம் தண்டககானனேஸௌ
ஸந்தர்ஜ்ய ஸீதாமபவாஹயந்தம் ।
ராமோ விராதாஸ்ருபமாசுநிக்னன்
வதூம் முமோசாப்ரதிமப்ரதாப: ॥ 75

தண்டகாரண்யத்தை அடைந்து அங்கு ஸீதையை (மிரட்டி) பயமுறுத்தி தூக்கிச் சென்ற வேடர்கூட்டத்தை ஒப்புயர்வற்ற பராக்ரமசாலியான இராமன் அவர்களைக் கொன்று ஸீதையை விடுவித்தார்.

नत्वाथ रामश्शरभङ्गमारात्
तस्मै ददानः स्वपदं दयालुः ।
तदुक्तमार्गेण सुखाधिवासं
सुतीक्ष्णमासाद्य तदर्चितोभूत् ॥ ७६

நத்வாத ராமச்சரபங்கமாராத்
தஸ்மை ததான: ஸ்வபதம் தயாளு: ।
ததுக்தமார்கேண ஸுகாதிவாஸம்
ஸுதீக்ஷ்ணமாஸாத்ய ததர்ச்சிதோபூத் ॥ 76

பிறகு இராமர் சரபங்காச்ரமத்தை அடைந்து அவரை வணங்கி அவருக்கு வைகுண்ட பதவியை அளித்து அவர் கூறிய வழியே சுக (வசதியான) இருப்பிடத்திற்காக சுதீக்ஷ்ணரை அணுக அவரால் கௌரவிக்கப்பட்டார்.

तत्रार्थितो मौनिगणैः स तेषां
निनाघवस्त्येषु कृतातिथेयः ।
समा दशात्रैव ददर्श रक्षो-
परायजं तापसकर्परौघम् ॥ ७७

தத்ரார்த்திதோ மௌனிகணை: ஸ தேஷாம்
நிநாகவஸ்த்யேஷு க்ருதாதிதேய: ।
ஸமா தசாத்ரைவ ததர்ச ரக்ஷோ-
பராயஜம் தாபஸகர்பரௌகம் ॥ 77

சரபங்காச்ரமத்தில் முனிவர்களால் ப்ரார்த்திக்கப்பட்ட இராமன் அவர்களின் அதிதியாக கௌரவிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் அங்கேயே தங்கினான். அங்கு வாழும் ராக்ஷஸர்களால் கொன்று குவிக்கப்பட்ட முனிவர்களின் அஸ்தி பஞ்சரங்களைப் (மலை போன்ற எலும்புகளைப்) பார்த்து ராக்ஷஸர்களை வதம் செய்ய சபதம் பூண்டான்.

संश्रुत्य दुष्टाशरबृन्दहानिं
कुम्भोद्भवं प्रेक्ष्य तपोनिधानम् ।
तदर्चितः प्राप्य शरं विधातुः
जटायुषं गृध्रपतिं ददर्श ॥ ७८

ஸம்ச்ருத்ய துஷ்டாசரப்ருந்தஹானிம்
கும்போத்பவம் ப்ரேக்ஷ்ய தபோநிதானம் ।
ததர்சித: ப்ராப்ய சரம் விதாது:
ஜடாயுஷம் க்ருத்ரபதிம் ததர்ச ॥ 78

அரக்கர்களின் கூட்டத்தை அழித்து தவச்ரேஷ்டர் அகஸ்த்யரை சந்தித்து, அவரால் கௌரவிக்கப்பட்டு, ப்ரம்மாஸ்த்ரத்தை அவரிடமிருந்து பெற்று க்ருத்ரராஜன் ஜடாயுவை சந்தித்தார்.

सीतावनोत्कं तमथात्र गृह्णन्
पितुस्सखं पञ्चवटीं स भेजे ।
भ्रात्राश्रमं तत्र विधाय रम्यं
रामः ससीतः सुखमध्युवास ॥ ७९

ஸீதாவணோத்கம் தமதாத்ர க்ருஹ்ணன்
பிதுஸ்ஸகம்பஞ்சவடீம் ஸ பேஜே ।
ப்ராத்ராச்ரமம் தத்ர விதாய ரம்யம்
ராம: ஸஸீத: ஸுகமத்யுவாஸ ॥ 79

ஸீதாபழம் முதலிய பழங்கள் நிறைந்த காட்டுப் பகுதியில் நாட்டமுள்ள தந்தையின் நண்பரான ஜடாயுவையும் உடன் அழைத்து வந்து, லக்ஷ்மணன் நிர்மாணித்த அழகிய ஆச்ரமத்தில் பஞ்சவடியில் ஸீதையுடன் சுகமாக காலம் கழித்து வந்தார்.

भद्रप्रदस्यास्य पदाब्जमुद्रा-
सौन्दर्यलोभात् पुलिनेषु तीव्रम् ।
लङ्कापतेः शूर्पनखी स्वसाऽसौ
रिरंसुरागादभिरामभद्रम् ॥ ८०

பத்ரப்ரதஸ்யாஸ்ய பதாப்ஜமுத்ரா-
ஸௌந்தர்யலோபாத் புலினேஷு தீவ்ரம் ।
லங்காபதே: சூர்பனகீ ஸ்வஸாऽஸௌ
ரிரம்ஸுராகாதபிராமபத்ரம் ॥ 80

பஞ்சவடியில் இராமன் மணற்குன்றுகளில் தனது பாதங்களைப் பதித்து ஸஞ்சரித்து வந்த காலத்தில் லங்காதிபதியின் தங்கை சூர்பனகை இராமனின் அழகில் நாட்டங்கொண்டு அவரை அணுகினாள்.

प्रत्याख्ययास्यावरजस्य चासौ
रुष्टास्य हर्तुं दयितामधावत् ।
रामाज्ञया तत्सहजात् तयाप्तः
पराभवः कर्तितकर्णनासः ॥ ८१

ப்ரத்யாக்யயாஸ்யாவரஜஸ்ய சாஸௌ
ருஷ்டாஸ்ய ஹர்த்தும் தயிதாமதாவத் ।
ராமாக்ஞயா தத்ஸஹஜாத் தயாப்த:
பராபவ: கர்த்திதகர்ணநாஸ: ॥ 81

இராமனால் திரஸ்கரிக்கப்பட்ட சூர்ப்பனகை ஸீதையை கொலை செய்ய விரைந்தாள். அது கண்ட இராமன் லக்ஷ்மணனைத் தூண்ட, லக்ஷ்மணனால் துண்டிக் கப்பட்ட காது, மூக்கு ரூபமான அவமானம் அவளால் அடையப்பட்டது.

तत्सोदरास्तं खरदूषणाद्याः
 ससैन्यमभ्येत्य शरान् समासुः ।
सीतां गुहायामवरस्यगुप्तौ
 कृत्वा शरैस्तान् स जघान सर्वान् ॥ ८२

தத்ஸோதராஸ்தம் கரதூஷணாத்யா:
 ஸஸைந்யமப்யேத்ய சரான் ஸமாஸு: ।
ஸீதாம் குஹாயாமவரஸ்யகுப்தௌ
 க்ருத்வா சரைஸ்தான் ஸ ஜகான ஸர்வான் || 82

அவளது உடன்பிறப்புக்களான கர — தூஷணர்கள் படைகொண்டுவந்து பொருத, ஸீதையைத் தம்பியின் பாதுகாப்பில் வைத்து, ராக்ஷஸர்களை பாணங்களால் இராமர் அழித்தொழித்தார்.

चतुःसहस्रैरधिकं प्रणष्टं
 निशाचराणामयुतं निरीक्ष्य ।
एकेन रामेण मुहूर्तकाले
 सा राक्षसी रावणमभ्यगाद्द्रुतम् ॥ ८३

சது:ஸஹஸ்ரைரதிகம் ப்ரணஷ்டம்
 நிசாசராணாமயுதம் நிரீக்ஷ்ய ।
ஏகேன ராமேண முஹூர்த்தகாலே
 ஸா ராக்ஷஸீ ராவணமப்யகாத்த்ருதம் ॥ 83

நாலாயிரத்துக்கும் அதிகமான அரக்கர் கூட்டம் இராமன் ஒருவனால் முஹூர்த்த காலத்தில் அழித்தொழிக்கப்பட்டதைக் கண்ட சூர்ப்பனகா விரைந்து இராவணனை அடைந்தாள்.

स्वसुश्च तस्या विकृतप्रदुःखी-
रूपं परं रामवधोर्दशास्यः ।
श्रुण्वन् स मारीचमुपेत्य तीव्रं
सीतापहारोपकृतिं ययाचे ॥ ८४

ஸ்வஸுச்ச தஸ்யா விக்ருதப்ரதுக்கீ-
ரூபம் பரம் ராமவத்வோர்தசாஸ்ய: ।
ச்ருண்வன் ஸ மாரீசமுபேத்ய தீவ்ரம்
ஸீதாபஹாரோபக்ருதிம் யயாசே ॥ 84

தங்கையின் துயரையும், பங்கப்படுத்தப்பட்ட அவளது வடிவையும் கண்டு, (மற்றும்) இராமபத்னி ஜானகியின் அழகிய வடிவையும் கேள்வியுற்ற இராவணன், மாரீசனை அடைந்து ஸீதையைக் கவர அவனது ஒத்துழைப்பை வேண்டினான்.

सञ्चिन्त्य रामस्य नितान्तशौर्यं
प्रत्याख्यया रावणलभ्यहानिम् ।
स निग्रहं रामशरेणमत्वा
वनं प्रतस्थे दशकन्धरेण ॥ ८५

ஸஞ்சிந்த்ய ராமஸ்ய நிதாந்தசௌர்யம்
ப்ரத்யாக்யயா ராவணலப்யஹானிம் ।
ஸ நிக்ரஹம் ராமசரேணமத்வா
வனம் ப்ரதஸ்தே தசகந்தரேண ॥ 85

இராமனின் வீரத்தையும், இராவணனை புறக்கணிப்பதால் நேரக்கூடிய அழிவையும். இராவணனுடன் ஒத்துழைத்தால் இராமனின் பாணத்தால் தான் அடைய நேரிடும் அழிவையும் எண்ணி மாரீசன் இராவணனுடன் பஞ்சவடியைக் குறித்து சென்றான்.

अवेत्य तद्रामनियुक्तसीता
छायामयीं स्वामुटजेनिधाय ।
विवेश यावज्ज्वलनेप्यदृश्या
तत्राययौ हेमकुरङ्ग एकः ॥ ८६

அவேத்ய தத்ராமநியுக்தஸீதா
சாயாமயீம் ஸ்வாமுடஜேநிதாய ।
விவேச யாவஜ்ஜ்வலனேப்யத்ருச்யா
தத்ராயயௌ ஹேமகுரங்க ஏக: ॥ 86

இராமனால் உத்தரவிடப்பட்ட ஸீதை, தனது மாயை வடிவை அடைந்து, அவ்வடிவை ஆச்ரமத்தில் இருக்கச் செய்து, அக்னிப்ரவேசம் செய்து மறைந்துபோன அளவில் தங்கமான் ஒன்று அங்கு வந்தது.

तच्चर्मलोभात् प्रिययार्थितोसौ
मारीचमायेत्यवरेरितोऽपि ।
धृत्वाश्रमेमुं क्षितिजावनार्थं
स सारसारङ्गजिघृक्षयारात् ॥ ८७

தச்சர்மலோபாத் ப்ரியயார்த்திதோஸௌ
மாரீசமாயேத்யவரேரிதோऽபி ।
த்ருத்வாச்ரமேமும் க்ஷிதிஜாவனார்த்தம்
ஸ ஸாரஸாரங்கஜிக்ருக்ஷயாராத் ॥ 87

அதன் தோலுக்கு ஆசைப்பட்டு ஜானகியால் ப்ரார்த்திக்கப்பட்ட இராமன், மாரீசனின் மாயை என்று அறிந்திருந்த போதிலும் அதைப்பிடித்துவர ஆவலுடன் உடனே கிளம்பினான்.

आकृष्य दूरं रघुराममद्रं
सपत्रिणा रामधनुच्युतेन ।
विद्धः पतन् रामगिरा दुरात्मा
हालक्ष्मणेत्यार्तरवं रुराव ॥ ८८

ஆக்ருஷ்ய தூரம் ரகுராமபத்ரம்
ஸபத்ரிணா ராமதனுச்யுதேன ।
வித்த: பதன் ராமகிரா துராத்மா
ஹாலக்ஷ்மணேத்யார்த்தரவம் ருராவ ॥ 88

ரகுராமனை ஆச்ரமத்திலிருந்து வெகுதூரம் அழைத்துச் சென்று, அவனது பாணத்தால் அடிபட்டு விழுந்த துராத்மாவான மாரீசன், இராமனின் குரலில் "ஹா லக்ஷ்மணா" என்று தீனக்குரல் எழுப்பினான்.

श्रुत्वा प्रलापान् तमरं प्रभीत्या
भर्तृव्यपायं परिशङ्कमाना ।
मुमोच सीता परिसान्त्वयन्तं
सौमित्रिमत्याहितमुग्रवाचा ॥ ८९

ச்ருத்வா ப்ரலாபான் தமரம் ப்ரபீத்யா
பர்த்துவ்யபாயம் பரிசங்கமானா ।
முமோச ஸீதா பரிஸாந்த்வயந்தம்
ஸௌமித்ரிமத்யாஹிதமுக்ரவாசா ॥ 89

இராமனின் தீனக்குரல் கேட்ட ஸீதை கணவனுக்கு ஆபத்து நேர்ந்ததாக எண்ணி, தனக்கு ஆறுதல் அளிக்கும் லக்ஷ்மணனை கடுஞ்சொற்களைக் கூறி இராமனைக் காப்பாற்றச் செல்லுமாறு (அங்கிருந்து) அனுப்பினாள்.

अभ्येत्य सीतामथ कूटभिक्षुः
दशाननः स्वागतवादिनीं ताम् ।
मोहात् स्वभाग्यं स विकत्थमानः
भृशं तवाहं प्रणयीत्यवोचत् ॥ ९०

அப்யேத்ய ஸீதாமத கூடபிக்ஷு:
தசானன: ஸ்வாகதவாதினீம் தாம் ।
மோஹாத் ஸ்வபாக்யம் ஸ விகத்தமான:
ப்ருசம் தவாஹம் ப்ரணயீத்யவோசத் ॥ 90

இந்நிலையில் ஸந்யாசி வேடமணிந்த தசானனன் தன்னை வரவேற்கும் ஸீதையை மோஹத்துடன் தனது வைபவங்களைப் பிதற்றி அவளிடம் மையல் கொண்டுள்ளதாகக் கூறினான்.

गाढप्रगल्भं श्रुतिमापतन्तं
विगर्ह्य सीता कुपिता जगाद ।
पापं जनाज्जाल्मक जल्पतस्ते
जिह्वेति भर्त्रा त्रुटिता मम स्यात् ॥ ९१

காடப்ரகல்பம் ச்ருதிமாபதந்தம்
விகர்ஹ்ய ஸீதா குபிதா ஜகாத ।
பாபம் ஜனாஜ்ஜால்மக ஜல்பதஸ்தே
ஜிஹ்வேதி பர்த்ரா த்ருடிதா மமஸ்யாத் ॥ 91

பலவாறு பிதற்றும் இராவணனின் பேச்சை வெறுத்த ஸீதையானவள் கோபங்கொண்டு பாபமான சொற்களைப் பேசும் உனது நாக்கானது எனது கணவனால் துண்டிக்கப் படும் என உரைத்தாள்.

स रूपमस्ताय भयानकं स्वं
स्मरंश्च शापं नलकूबरात्तम् ।
क्षोणीं विदार्य स्वनखैश्च सीतां
कृत्वा रथे स्वे नभसा ससार ॥ ९२

ஸ ரூபமஸ்தாய பயானகம் ஸ்வம்
ஸ்மரம்ச்ச சாபம் நளகூபராத்தம் ।
க்ஷோணீம் விதார்ய ஸ்வநகைச்ச ஸீதாம்
க்ருத்வா ரதே ஸ்வே நபஸா ஸஸார ॥ 92

அந்த இராவணன் பயமளிக்கும் தனது வடிவை மறைத்து, நளகூபரர் தனக்களித்த சாபத்தையும் நினைத்துக்கொண்டு தனது நகங்களால் பூமியைப் பிளந்து ஸீதையை தனது ரதத்தில் ஏற்றிக்கொண்டு ஆகாய வழியே சென்றான்.

हाराम रामेति भृशं वदन्तीं
हृत्वापयान्तं शनकैर्दशास्यम् ।
धीरो दयालुः अरुणस्य सूनुः
अभ्यद्रवद् गृध्रपतिर्जटायुः ॥ ९३

ஹாராம ராமேதி ப்ருசம் வதந்தீம்
ஹ்ருத்வாபயாந்தம் சனைகர்தசாஸ்யம் ।
தீரோ தயாளு: அருணஸ்ய ஸூனு:
அப்யத்ரவத் க்ருத்ரபதிர் ஜடாயு: ॥ 93

ஹாராம! ராம! என ஓலமிட்டுக்கொண்டு புலம்பும் ஸீதையை அழைத்துச் செல்லும் இராவணனை வீரம் மிகுந்த, தயாளுவான, அருணனின் பிள்ளையான கழுகு அரசன் ஜடாயு இடைமறித்தான்.

निकृत्तवर्मायुधचापवाहं
कृत्वा दशास्यं नखतुण्डपक्षैः ।
दशास्यकौक्षेयककृत्तपक्षः
मह्यामपप्तत् द्विजराट्समूर्च्छः ॥ ९४

நிக்ருத்தவர்மாயுதசாபவாஹம்
க்ருத்வா தசாஸ்யம் நகதுண்டபக்ஷை: ।
தசாஸ்யகௌக்ஷேயகக்ருத்தபக்ஷ:
மஹ்யாமபப்தத் த்விஜராட்ஸமூர்ச்ச: ॥ 94

ஆயுதங்கள், வில் இவற்றுடன் தன்னைத் தாக்கும் இராவணனைத் தனது நகம், அலகு, இறக்கைகள் இவற்றால் காயப்படுத்தி, இராவணனது வாளால் துண்டிக்கப்பட்ட இறக்கையை உடையவராக கழுகரசர் பூமியில் வீழ்ந்து மூர்ச்சை அடைந்தார்.

नक्तञ्चरेन्द्रो द्रुतमेत्य लङ्कां
अशोकनाम्नीं वनिकां प्रविश्य ।
तां राक्षसीबृन्दवशं चकार
क्षयाय मानस्य च जीवितस्य ॥ ९५

நக்தஞ்சரேந்த்ரோ த்ருதமேத்ய லங்காம்
அசோகநாம்னீம் வனிகாம் ப்ரவிச்ய ।
தாம் ராக்ஷஸீப்ருந்தவசம் சகார
க்ஷயாய மானஸ்ய ச ஜீவிதஸ்ய ॥ 95

அரக்கர்குலத் தலைவனான இராவணன் விரைந்து இலங்கையை அடைந்து; அசோக வனத்தில் ஸீதையை வைத்து; தனது உயிர் புகழ் இவற்றின் அழிவிற்காக அரக்கிகளின் பொறுப்பில் அவளை (ஸீதையை) விடுத்தான்.

मारीचमाविध्य निवर्त्य रामः
त्यक्ताश्रमं लक्ष्मणमाप्तमग्रे ।
विलोक्य सीतापचयाभिशङ्की
सोगर्हयत्तस्य निदेश भङ्गम् ॥ ९६

மாரீசமாவித்ய நிவர்த்ய ராம:
த்யக்தாச்ரமம் லக்ஷ்மணமாப்தமக்ரே ।
விலோக்ய ஸீதாபசயாபிசங்கீ
ஸோகர்ஹயத்தஸ்ய நிதேச பங்கம் ॥ 96

மாரீசனை அடித்துத் திரும்பிய ராமன் ஆச்ரமத்தை விட்டு வந்த லக்ஷ்மணனை எதிரில் கண்டு, ஸீதைக்கு ஆபத்து நேர்ந்திருக்குமென சந்தேஹித்து, தனது கட்டளையை உதறி எறிந்த லக்ஷ்மணனை நிந்தித்தார்.

नाहं प्रभोत्र स्वयमागतोस्मि
प्रचोदितः ते प्रिययोग्रवाचा ।
रक्षोविलापश्रवणात्तशङ्कया
भद्रे तपेत्यत्रगतो जगाद ॥ ९७

நாஹம் ப்ரபோத்ர ஸ்வயமாகதோஸ்மி
ப்ரசோதித: தே ப்ரியயோக்ரவாசா ।
ரக்ஷோவிலாபச்ரவணாக்தசங்க்யா
பத்ரே தபேத்யத்ரகதோ ஜகாத ॥ 97

ப்ரபுவே! நானாக இங்கு வரவில்லை. ஹா லக்ஷ்மணா! ஹா ஸீதே! என தங்களது குரலில் கதறிய ராக்ஷஸன் குரலைக் கேட்டு சந்தேஹம் கொண்ட தங்களது பத்னியின் கடுமையான சொற்களால் தூண்டப்பட்ட நான் இங்கு வந்திருக்கிறேன் என்று லக்ஷ்மணன் கூறினான்.

भ्रातः प्रियोक्तं परिगृह्य सत्यं
त्वया कृतं यत् प्रतिभात्ययुक्तम् ।
सा राक्षसैरेव हृताथ भुक्ता
वदन् स भ्रात्रोपससार तीव्रम् ॥ ९८

ப்ராத: ப்ரியோக்தம் பரிக்ருஹ்ய ஸத்யம்
த்வயா க்ருதம் யத் ப்ரதிபாத்யயுக்தம் ।
ஸா ராக்ஷஸைரேவ ஹ்ருதாத புக்தா
வதன் ஸ ப்ராத்ரோபஸஸார தீவ்ரம் ॥ 98

தம்பியே! எனது மனைவி கூறியது உண்மையென்று ஏற்று அவளை விடுத்து நீ வந்தது தகுந்ததாக எனக்குத் தோன்றவில்லை. அவள் அரக்கர்களால் தூக்கிச்செல்லப் பட்டாளோ, கடித்துண்ணப்பட்டாளோ எனக்கூறிக் கொண்டு தம்பியுடன் வேகமாக ஆச்ரமத்தை அடைந்தார்.

नवेत्ति सीतां उटजस्थितां तां
मायामयीमेव रजस्तु रामः ।
इतीव जानन् समुपेत्य वस्त्यं
सौमित्रिणासौ नददर्श सीताम् ॥ ९९

நவேத்தி ஸீதாம் உடஜஸ்திதாம் தாம்
மாயாமயீமேவ ரஜஸ்து ராம: ।
இதீவ ஜானன் ஸமுபேத்ய வஸ்த்யம்
ஸௌமித்ரிணாஸௌ நததர்ச ஸீதாம் ॥ 99

பர்ணசாலையில் இருந்த ஸீதை மாயாஸீதை என்பதை பதற்றத்தில் மறந்த இராமன் லக்ஷ்மணனுடன் தன் இருப்பிடத்தை அடைந்து அங்கு ஸீதையைக் காணாது போனார்.

विचित्य सीतामुटजे समन्तात्
शोकोग्रघातार्त इव प्रमूर्च्छन् ।
प्रियावियोगार्तविलापमुग्रं
स शिक्षयामास समस्तलोकान् ॥ १००

விசித்ய ஸீதாமுடஜே ஸமந்தாத்
சோகோக்ரகாதார்த இவ ப்ரமூர்ச்சன் ।
ப்ரியாவியோகார்தவிலாபமுக்ராம்
ஸ சிக்ஷயாமாஸ ஸமஸ்தலோகான் ॥ 100

ஸீதையை பர்னசாலையெங்கும் தேடி சோகத்தால் பீடிக்கப்பட்ட இராமர் மூர்ச்சையடைந்தவராக "ஹா ப்ரியே! ப்ரியே!" என்று பலவாறு புலம்பி மனைவியின் பிரிவுத்துயரின் புலம்பலை அனைத்து உலகிற்கும் கற்றுக் கொடுத்தார் போலும்!

रामो विचिन्वन् सहजेन धावन्
वनाद्वनं तद्दयितामपश्यन् ।
निकृत्तपक्षद्विजमन्दगीर्भिः
प्रियाप्रवृत्तिं समवाप मार्गे ॥ १०१

ராமோ விசின்வன் ஸஹஜேன தாவன்
வனாத்வனம் தத்தயிதாமபச்யன் ।
நிக்ருத்தபக்ஷத்விஜமந்தகீர்பி:
ப்ரியாப்ரவ்ருத்திம் ஸமவாப மார்கே ॥ 101

லக்ஷ்மணனுடன் வனமெங்கும் ஓடி சோகத்தில் ஆழ்ந்த இராமன் ஸீதையைக் காணாது; இரக்கைகள் வெட்டப் பட்ட ஜடாயுவைக் கண்டு தீனக் குரலில் அவர் கூறிய ஸீதையின் ஸம்பவத்தை அறிந்துகொண்டார்.

दिष्टान्तगस्यास्य पतत्रिणोयं
भार्यावनार्थे स्वपदं ददानः ।
तेन स्तुतोदभ्रवचोविलासैः
याम्यां दिशं प्राप विचित्य भूयः ॥ १०२

திஷ்டாந்தகஸ்யாஸ்ய பதத்ரிணோயம்
பார்யாவனார்தே ஸ்வபதம் ததான: ।
தேன ஸ்துதோதப்ரவசோவிலாஸை:
யாம்யாம் திசம் ப்ராப விசித்ய பூய: ॥ 102

விதியின் வசப்பட்ட இந்த இராமர், தன் மனைவியின் பொருட்டு துன்பம் அடைந்ததற்காக இந்த ஜடாயுவிற்கு தனது உயர்ந்த நிலையான மோக்ஷத்தை அளித்து, அவரால் பலவாராகப் போற்றப்பட்டு; இவர் ஜடாயு சொன்னதைக் கருத்தில் கொண்டு தென்திசையை அடைந்தார்.

ग्रस्तस्ततो गच्छति दक्षिणाशां
तस्मिन् कबन्धेन सुदीर्घबाहोः ।
विलूय तौ तं मुनिशापमुक्तं
तन्वन् स रामो शबरीं प्रपेदे ॥ १०३

க்ரஸ்தஸ்ததோ கச்சதி தக்ஷிணாசாம்
தஸ்மின் கபந்தேன ஸுதீர்கபாஹ்வோ: ।
விலூய தௌ தம் முனிசாபமுக்தம்
தன்வன் ஸ ராமோ சபரீம் ப்ரபேதே ॥ 103

தென்திசையைக் குறித்து செல்லும் அவர்கள் நீண்ட கைகளையுடைய கபந்தனால் சிறைபிடிக்கப்பட்டு, அவனைக் கொன்று முனிசாபம் நீங்கிய அவனை நற்கதி அடைவித்து சபரி ஆச்ரமத்தை அடைந்தார்.

तयार्चितोयं परभक्तिमार्गात्
कैवल्यमस्यै वितरन् महात्मा ।
सुग्रीवसख्याद्दयिताप्तिमस्य
लब्ध्वा स रामः प्रययौ च पंपाम् ॥ १०४

தயார்சிதோயம் பரபக்திமார்காத்
கைவல்யமஸ்யை விதரன் மஹாத்மா ।
ஸுக்ரீவஸக்யாத்தயிதாப்திமஸ்ய
லப்த்வா ஸ ராமः ப்ரயயௌ ச பம்பாம் ॥ 104

சபரியால், உயர்ந்த பக்தி மார்க்கத்தினால் பூஜிக்கப்பட்ட இராமர் அவளுக்கு முக்தியை அளித்து, ஸுக்ரீவனை நட்புகொண்டு, அவன்மூலம் ஸீதையை அடைவதை உறுதி செய்து, பம்பை நதிக்கரையை அடைந்தார்.

## ॥ किष्किन्धा काण्ड प्रारम्भः ॥

मरुत्सुतस्तत्र समेत्य रामं
नाम्ना हनूमान् वटुवत् प्रणम्य ।
अचीकरद्वह्निमुखोस्य सख्यं
सुग्रीवनाम्ना कपियूथपेन ॥ १०५

## கிஷ்கிந்தா காண்டம்

மருத்ஸுதஸ்தத்ர ஸமேத்ய ராமம்
நாம்னா ஹனூமான் வடுவத் ப்ரணம்ய ।
அசீகரத்வஹ்னிமுகோஸ்ய ஸக்யம்
ஸுக்ரீவநாம்னா கபியூதபேன ॥ 105

பம்பை நதிக்கரையில் ஹனுமான் என்ற பெயர் கொண்ட வாயுபுத்ரர் சிஷ்யனைப் போல் இராமனை வணங்கி அக்னி சாக்ஷியாக குரங்கரசன் ஸுக்ரீவனுடன் நட்பைச் செய்து வைத்தார்.

श्रुत्वा स रामस्य कथां तु भार्या-
भूषाव्रजं प्रेक्ष्य स वस्त्र खण्डम् ।
मित्राहृतं तत्र विषादमग्नं
रामं समाश्वासयदस्य बन्धुः ॥ १०६

ச்ருத்வா ஸ ராமஸ்ய கதாம் து பார்யா-
பூஷாவ்ரஜம் ப்ரேக்ஷ்ய ஸ வஸ்த்ர கண்டம் ।
மித்ராஹ்ருதம் தத்ர விஷாதமக்னம்
ராமம் ஸமாச்வாஸயதஸ்ய பந்து: ॥ 106

இராமனுடைய கதையைக் கேட்டு, ஸுக்ரீவனால் கொண்டுவரப்பட்ட ஸீதையின் வஸ்த்ரத்தில் கட்டப்பட்ட அவளது ஆபரணங்களைப் பார்த்து துயரில் மூழ்கிய இராமனை, ஆச்வாசப்படுத்தி(தேற்றி)னான்.

सुग्रीवपत्नीं तु स वालिनाम्ना
हृतं समाकर्ण्य तदग्रजेन ।
अन्योन्यमित्रोपकृतिं विधातुं
प्रचक्रतुस्तौ तरसा प्रतिज्ञाम् ॥ १०७

ஸுக்ரீவபத்னீம் து ஸ வாலிநாம்னா
ஹ்ருதம் ஸமாகர்ண்ய ததக்ரஜேன ।
அந்யோன்யமித்ரோபக்ருதிம் விதாதும்
ப்ரசக்ரதுஸ்தௌ தரஸா ப்ரதிக்ஞாம் ॥ 107

ஸுக்ரீவனின் அண்ணனாகிய வாலியினால், அவனது மனைவி அபஹரிக்கப்பட்ட விஷயத்தைக் கேட்டு ஒருவருக்கொருவர் நண்பனுக்கு உபகாரம் செய்துகொள்வதற்கு ப்ரதிக்ஞையை மேற்கொண்டனர்.

स दुन्दुभेश्शीर्षमथाद्रि तुल्यं
प्रदर्शितं तत्सुहृदः प्रतीत्यै ।
प्रक्षिप्य दूरं स्वपदाभिघातात्
बिभेद बाणेन च सप्त सालान् ॥ १०८

ஸ துந்துபேச்சீர்ஷமதாத்ரி துல்யம்
ப்ரதர்சிதம் தத்ஸுஹ்ருத: ப்ரதீத்யை ।
ப்ரக்ஷிப்ய தூரம் ஸ்வபதாபிகாதாத்
பிபேத பாணேன ச ஸப்த ஸாலான் ॥ 108

இராமன், ஸுக்ரீவனுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதற்காக மலைபோன்ற துந்துபியின் தலையைத் தனது காலால் உதைத்து வெகுதூரம் எறிந்து, ஏழு சால வ்ருக்ஷங்களை ஒரே பாணத்தால் துளைத்தார்.

रामप्रतिज्ञाबलतोग्रजं सः
द्वन्द्वाहवाहूय बलाभिपन्नम् ।
चकार युद्धं समरूपिणौ तौ
दृष्ट्वा स रामो न मुमोच बाणम् ॥ १०९

ராமப்ரதிக்ஞா பலதோக்ரஜம் ஸ:
த்வந்த்வாஹவாஹூய பலாபிபன்னம் ।
சகார யுத்தம் ஸமரூபிணௌ தௌ
த்ருஷ்ட்வா ஸ ராமோ ந முமோச பாணம் ॥ 109

இராமன் செய்த ப்ரதிக்ஞையின் பலத்தால் ஸுக்ரீவன் தன் அண்ணனை மல்யுத்தத்திற்கு அழைத்து யுத்தம் செய்தான், இருவரும் ஒரே வடிவம் பெற்றிருந்ததால் இராமர் அவர்களைப் பார்த்து பாணத்தை எய்தவில்லை.

सुग्रीवमाश्वास्य रिपुप्रभग्नं
भ्रमेण तस्यैव वधप्रभीत्या ।
शरः प्रमुक्तो न मयेति शंसन्
साकं प्रनस्तं स नुनोद रामः ॥ ११०

ஸுக்ரீவமாச்வாஸ்ய ரிபுப்ரபக்னம்
ப்ரமேண தஸ்யைவ வதப்ரபீத்யா ।
சர: ப்ரமுக்தோ ந மயேதி சம்ஸன்
ஸாகம் ப்ரணஸ்தம் ஸ நுநோத ராம: ॥ 110

எதிரியால் அடிக்கப்பட்ட ஸுக்ரீவனைத் தேற்றி, குழப்பத்தினால் உன்னையே கொலை செய்திருக்கவும் கூடும். எனவே பாணத்தை விடவில்லையெனக்கூறி அடையாளம் செய்து அவனைப் போருக்குத் தூண்டினார்.

भूयस्तमाहूय रणाय तस्मिन्
घनप्रहारैरभियुध्यमाने ।
भित्त्वैकभल्येन स वालिवक्षः
रामो दुलीनस्सुहृदं ररक्ष ॥ १११

பூயஸ்தமாஹூய ரணாய தஸ்மின்
கனப்ரஹாரைரபியுத்யமானே ।
பித்வைகபல்யேன ஸ வாலிவக்ஷ:
ராமோ துலீனஸ்ஸுஹ்ருதம் ரரக்ஷ ॥ 111

மறுபடியும் வாலியைப் போருக்கு அழைத்து இடி ஓசையுடன் போர் செய்துகொண்டிருக்குமளவில் இராமன் (தன்) ஒரே பாணத்தால் வாலியின் மார்பைப் பிளந்து நண்பனைக் காத்தார்.

सुग्रीवसौमित्रिविशोभिपार्श्वं
समीक्ष्य रामं धृतचापबाणम् ।
वाली कपीन्द्रः पतितो धरायां
व्यगर्हयत् तस्य परोक्षयुद्धम् ॥ ११२

ஸுக்ரீவஸௌமித்ரி விசோபி பார்ச்வம்
ஸமீக்ஷ்ய ராமம் த்ருதசாப பாணம் ।
வாலீ கபீந்த்ர: பதிதோ தராயாம்
வ்யகர்ஹயத் தஸ்ய பரோக்ஷயுத்தம் ॥ 112

ஸுக்ரீவன், லக்ஷ்மணன் இவர்கள் வாலியின் அருகிலிருக்க, வில்லேந்திய இராமரைக் கண்டு (அடிபட்டு பூமியில் விழுந்த வாலி) தன்னை மறைந்திருந்து அடித்ததற்காக அவரை நிந்தித்தான்.

शरप्रहारेण पवित्रितं तं
रामोऽब्रवीत् धर्मविदां वरिष्ठः ।
यो भ्रातृपत्न्या रमतेऽनुनाहं
कथं भवेयं पतितेन दृश्यः ॥ ११३

சரப்ரஹாரேண பவித்ரிதம் தம்
ராமோப்ரவீத் தர்மவிதாம் வரிஷ்ட: ।
யோ ப்ராத்ருபத்ன்யா ரமதேமுனார்ஹம்
கதம் பவேயம் பதிதேன த்ருச்ய: ॥ 113

தர்மமறிந்த இராமர், தன் வில்லால் அடிபட்டதால் பவித்ரமான அவனைக் குறித்து, உடன்பிறந்தவனின் மனைவியுடன் நெறிதவறி மகிழ்ந்திருக்கும் உன் எதிரில் நின்று எவ்விதம் போர் புரிவேன்? நீ பதிதனல்லவா? என்றுரைத்தார்.

अथोदितज्ञानलवेनवाली
कृत्वाञ्जलिं तस्य करे स्वपुत्रम् ।
समर्प्य बालं तरसाङ्गदं सः
ययौ दिवं वीरवरैः प्रलभ्यम् ॥ ११४

அதோதிதக்ஞானலவேனவாலீ
க்ருத்வாஞ்ஜலிம் தஸ்ய கரே ஸ்வபுத்ரம் ।
ஸமர்ப்ய பாலம் தரஸாங்கதம் ஸ:
யயௌ திவம் வீரவரை: ப்ரலப்யம் ॥ 114

இவ்வார்த்தைகளைக் கேட்டு, சிறிதளவு அறிவை அடைந்த வாலி, அவரை நமஸ்கரித்துத் தனது மகன் அங்கதனை அவரிடம் அர்ப்பணித்து வீரர்கள் அடையும் உயர்ந்த ஸ்வர்கத்தை அடைந்தான்.

पत्युर्वियोगादथ तप्यमानां
ताराभिधानां प्रविलापपूर्वम् ।
स शिक्षयन्नेव तदात्मतत्त्वं
रामोहरत् तद्धृदयार्तिमुग्राम् ॥ ११५

பத்யுர்வியோகாதத தப்யமானாம்
தாராபிதானாம் ப்ரவிலாபபூர்வம் ।
ஸ சிக்ஷயன்னேவ ததாத்மதத்வம்
ராமோஹரத் தத் த்ருதயார்திமுக்ராம் ॥ 115

கணவனின் பிரிவால் மனம் வருந்தும் வாலியின் மனைவி தாரைக்கு ஆத்மதத்வங்களை சிக்ஷித்து அவளது மனக்கவலையை இராமன் போக்கினான்.

अथाभिषिच्यैव पदे प्रभुत्वे
सुग्रीवमारात् कपिकुञ्जराणाम् ।
सौमित्रिणा वालितनूद्भवं सः
चकार रामो युवराजमस्य ॥ ११६

அதாபிஷிச்யைவ பதே ப்ரபுத்வே
ஸுக்ரீவமாராத் கபிகுஞ்ஜராணாம் ।
ஸௌமித்ரிணா வாலிதனூத்பவம் ஸ:
சகார ராமோ யுவராஜமஸ்ய ॥ 116

விரைவிலேயே ஸுக்ரீவனைக்கபிகுலத் தலைவனாக லக்ஷ்மணனின் மூலம் பட்டாபிஷேகம் செய்வித்து, வாலியின் பிள்ளையாகிய அங்கதனை இராமர் யுவராஜனாக நியமித்தார்.

सीतां विचेतुं शरदागमेऽस्मिन्
गते प्रतिज्ञाय हरीश्वरे सः ।
भार्यावियोगादिव तप्तचित्तः
सौमित्रिणा प्रस्रवणेऽध्युवास ॥ ११७

ஸீதாம் விசேதும் சரதாகமேஸ்மின்
கதே ப்ரதிக்ஞாய ஹரீச்வரே ஸ: ।
பார்யாவியோகாதிவ தப்தசித்த:
ஸௌமித்ரிணா ப்ரஸ்ரவணேத்யுவாஸ ॥ 117

ஸுக்ரீவன் ஸீதையை மீட்பதற்காக சரத் காலத்தில் உதவுவதாக வாக்களித்து, தன் நகர் சென்ற அளவில்; மனைவியின் துயரால் வருந்தும் இராமர், லக்ஷ்மணனுடன் ஜனஸ்தானத்தில் அமைந்த ப்ரஸ்ரவணம் என்ற மலையில் வசித்துவரலானார்.

श्रीभोगसक्तं दयितानुरक्तं
कपीश्वरं विस्मृतमित्रकार्यम् ।
भ्रात्रानियुक्तोऽभिनिनीषुरागात्
स लक्ष्मणः कोपपलाशनेत्रः ॥ ११८

ஸ்ரீபோகஸக்தம் தயிதானுரக்தம்
கபீச்வரம் விஸ்ம்ருத மித்ரகார்யம் ।
ப்ராத்ரா நியுக்தோऽபிநிநீஷுராகாத்
ஸ லக்ஷ்மண: கோபபலாச நேத்ர: ॥ 118

நண்பனுக்குக் கொடுத்த வாக்குறுதியை மறந்து மனைவியுடன் ஸுகபோகங்களில் திளைத்து மகிழ்ந்து கொண்டிருக்கும் ஸுக்ரீவனை, பலாசபுஷ்பம் போல் கோபத்தால் சிவந்த கண்களை உடைய லக்ஷ்மணன் இராமனால் ஏவப்பட்டவனாக (ஸுக்ரீவனது) அவனது இருப்பிடம் குறித்து அழைத்துவரச் சென்றான்.

शरेण येनैव हतोग्रजस्ते
सत्वामपीप्सन् प्रतिभाति मेऽस्ति ।
इति प्रतर्ज्यैव गिरा हरीशं
हर्यर्क्षलक्षैस्सह सोभ्यनैषीत् ॥ ११९

சரேண யேனைவ ஹதோக்ரஜஸ்தே
ஸத்வாமபீப்ஸன் ப்ரதிபாதி மேஸ்தி ।
இதி ப்ரதர்ஜ்யேவ கிரா ஹரீசம்
ஹர்யர்க்ஷலக்ஷைஸ்ஸஹ ஸோப்யனைஷீத் ॥ 119

ஸுக்ரீவனை அடைந்த லக்ஷ்மணன், "யாதொரு பாணத்தினால் அண்ணன் வாலி கொல்லப்பட்டானோ, அந்த இராமபாணம் உன்னையும் எதிர்பார்க்கிறது" என வார்த்தைகளால் வானரத் தலைவனை விரட்டி லக்ஷக் கணக்கான வானர வீரர்களுடன் இராமனிருக்கும் இடத்திற்கு (ஸுக்ரீவனை) அழைத்துவந்தான்.

रामं प्रणम्यास्य मतात्कपीन्द्रः
प्लवङ्गवीरान् बलिनश्शशास ।
आशासु सर्वासु विचित्य सीतां
आयातमासादिति रौद्र वाचा ॥ १२०

ராமம் ப்ரணம்யாஸ்ய மதாத்கபீந்த்ர:
ப்லவங்கவீரான் பலினச்சசாஸ ।
ஆசாஸு ஸர்வாஸு விசித்ய ஸீதாம்
ஆயாதமாஸாதிதி ரௌத்ர வாசா ॥ 120

இராமனை வணங்கிய ஸுக்ரீவன் வானர வீரர்களை கடுமையான வார்த்தைகளால் எச்சரித்து திசையெங்கிலும் ஸீதையைத்தேடி சீக்கிரம் வந்தடையுங்கள் எனக்கூறினான்.

उन्नीय कार्यक्षमता समेतं
वातात्मजं स्वाङ्गुलिभूषणाग्र्यम् ।
ददावभिज्ञानममुष्यहस्ते
रामः प्लवङ्गेषु तदा प्रियायाः ॥ १२१

உன்னீய கார்யக்ஷமதா ஸமேதம்
வாதாத்மஜம் ஸ்வாங்குலி பூஷணாக்ர்யம் ।
ததாவபிக்ஞானமமுஷ்யஹஸ்தே
ராம: ப்லவங்கேஷு ததா ப்ரியாயா: ॥ 121

வானர ச்ரேஷ்டர்களுள் செயலை நிறைவேற்றும் திறன்கொண்ட வாயுவின் மைந்தனான ஹனுமானிடம் தனது விரல்களில் பூஷணமாக விளங்கும் மோதிரத்தைக் கழற்றி தன் மனைவியின் பொருட்டு அடையாளமாக் அவரது கையில் இராமர் அளித்தார்.

यामेतराशासु नियुक्तकीशाः
  विचित्य वैयर्थ्यमरं शशंसुः ।
नीलर्क्षनाथाङ्गदवातिमैन्द्रैः
  सीतामगागे दिशि दक्षिणस्याम् ॥ १२२

யாமேதராசாஸு நியுக்தகீசா:
  விசித்ய வைய்யர்த்யமரம் சசம்ஸு: ।
நீலர்க்ஷநாதாங்கதவாதிமைந்த்ரை:
  ஸீதாமமாகே திசி தக்ஷிணஸ்யாம் ॥ 122

ஸீதையை தேடுவதற்காக பல திசைகளிலும் நியமிக்கப்பட்ட வானரர்கள் தேடிவிட்டு முயற்சி வீணானதைத் தெரிவித்தனர். நீலன், அங்கதன், ஜாம்பவான், (வாயு மைந்தன்) ஹனுமார் ஆகியோர் தென்திசையில் சீதையைத் தேடினர்.

ततोऽभ्यधात् वालिसुतोम्बुराशेः
  सन्दर्शनत्यक्तबलाभिमानः ।
सीतानदृष्टाब्धिरयं न लङ्घ्यः
  कपीन्द्रकोपं सहते परङ्कः ॥ १२३

ததோப்யதாத் வாலிஸுதோம்புராசே:
  ஸந்தர்சனத்யக்த பலாபிமான: ।
ஸீதானத்ருஷ்டாப்திரயம் ந லங்க்ய:
  கபீந்த்ரகோபம் ஸஹதே பரங்க: ॥ 123

வாலியின் மைந்தன் அங்கதன் ஸமுத்ரக்கரையை அடைந்து தன் பலத்தில் நம்பிக்கையை இழந்து ஸீதையையும் காணவில்லை. இக்கடலையும் கடக்க முடியவில்லை. இந்நிலையில் ஸுக்ரீவனின் கோபத்தை யார் தாங்குவார் எனக்கூறினான்.

तद्रामकार्योज्जित जीवितस्य
स्थिरा जटायोर्भुविकीर्तिरस्ति ।
प्रायं न आश्रित्य ततोब्धितीरे
त्यक्तुं विना जीवितमस्ति नान्यत् ॥ १२४

தத்ராமகார்யோஜ்ஜித ஜீவிதஸ்ய
ஸ்திரா ஜடாயோர்புவிகீர்த்திரஸ்தி ।
ப்ராயம் ந ஆச்ரித்ய ததோப்திதீரே
த்யக்தும் விநா ஜீவிதமஸ்தி நான்யத் ॥ 124

இராமனுக்குத் தொண்டு செய்து உயிர்நீத்த ஜடாயுவின் புகழ் இவ்வுலகில் நிலைபெற்றுவிட்டது. நாம் இக் கடற்கரையை அடைந்து ஸீதையைக் காண முடியாமல் நிற்கும் நிலையில் உயிர் துறப்பதைத் தவிர வேறு வழி யில்லை என அங்கதன் கூறினான்.

तद्वृत्तमाकर्ण्य तदग्रजातः
संपातिरत्रैत्य शुचन्नुवाच ।
सीतां तु लङ्कोपवने निरुद्धयां
पश्यामि चक्षोरिति सूक्ष्मदृष्ट्या ॥ १२५

தத்வ்ருத்தமாகர்ண்ய ததக்ரஜாத:
ஸம்பாதிரத்ரைத்ய சுசன்னுவாச ।
ஸீதாம் து லங்கோபவனே நிருத்யாம்
பச்யாமி சக்ஷோரிதி ஸூக்ஷ்மத்ருஷ்ட்யா ॥ 125

இவ்விதம் அங்கதனின் வார்த்தைகளைக் கேட்ட வயதான ஸம்பாதி வருத்தத்துடன் அவர்களிடம் வந்து ஸீதையை அவன் லங்காபுரி நந்தவனத்தில் சிறை வைத் திருப்பதாக ஸூக்ஷ்ம த்ருஷ்டியினால் நான் காண்கிறே னென்றுக் கூறினார்.

यस्तर्तुमब्धिं तरितं महान्तं
शक्तो भवद्भिः स तु मार्गणीयः ।
प्लक्षौ विदग्धावपि मे वचोभिः
करोमि साहाय्यमिति व्यचष्ट ॥ १२६

யஸ்தர்த்துமப்திம் தரிதம் மஹாந்தம்
சக்தோ பவத்பி: ஸ து மார்க்கணீய: ।
ப்லக்ஷௌ விதக்தாவபி மே வசோபி:
கரோமி ஸாஹாய்யமிதி வ்யசஷ்ட ॥ 126

இப்பெருங்கடலைக் கடப்பதற்கு உங்களில் யார் திறன் பெற்றவர் என்று நாம் தேடவேண்டும். எனது இறக்கைகள் எறிந்துபோயிருப்பினும் உங்களை உத்ஸாகப்படுத்தும் எனது வார்த்தைகளால் உங்களுக்கு உதவி செய்வேன்.

नवोद्भवत्तक्षणलक्ष्यपक्षः
श्रीराम कार्योपकृतिप्रभावात् ।
प्रोत्साहयंस्तान् खगमां गतिं सः
जिज्ञासुरभ्रन्तरसा जगाम ॥ १२७

நவோத்பவத்க்ஷணலக்ஷ்யபக்ஷ:
ஸ்ரீராம கார்யோபக்ருதிப்ரபாவாத் ।
ப்ரோத்ஸாஹயம்ஸ்தான் ககமாம் கதிம் ஸ:
ஜிக்ஞாஸுரப்ரந்தரஸா ஜகாம ॥ 127

(முன் ஸ்லோகத்தில் உள்ளவாறு) இவ்வாறு கூறிக் கொண்டிருக்கும் பொழுதே ஸம்பாதியின் இறக்கைகள் இரண்டும் ஸ்ரீராம கார்யத்திற்கு உபகாரம் செய்யும் மஹிமையால் (இறக்கைகள்) மீண்டும் தோன்றலாயின. இந்நிலையில் அனைவரையும் உத்ஸாஹப்படுத்தி வானில் பறக்கும் தனது திறனை அறிய விரும்பி உயரே கிளம்பி பறக்கலானார்.

ततस्त्वरत्जाम्बवतो हनूमान्
प्रोत्साहितश्चाङ्गदमुख्यवीरैः ।
तर्तुं समुद्रं गिरितुल्यरूपो
भूत्वातिहर्षात्क्षणमुत्पपात ॥ १२८

ததஸ்த்வரத்ஜாம்பவதோ ஹனூமான்
ப்ரோத்ஸாஹிதச்சாங்கதமுக்யவீரை: ।
தர்த்தும் ஸமுத்ரம் கிரிதுல்யரூபோ
பூத்வாதிஹர்ஷாக்ஷணமுத்பபாத ॥ 128

ஹனுமானானவர் மஹேந்த்ர மலையில் ஏறி இராமனை மனதில் தியானித்துக் கடலைத் தாண்டுவதற்காக கால்களால் மலைச்சிகரத்தை நன்கு அழுத்தி ஆகாயத்தில் கிளம்பினார்,

महेन्द्रमारुह्य नगं स धीरः
स्मरंश्च रामं हृदयेम्बुराशिम् ।
तर्तुं विकुर्वेग इवाद्रिशृङ्गं
पद्भ्यां प्रपीड्याशु खमुत्पपात ॥ १२९

மஹேந்த்ரமாருஹ்ய நகம் ஸ தீர:
ஸ்மரம்ச்ச ராமம் ஹ்ருதயேம்புராசிம் ।
தர்தும் விகுர்வேக இவாத்ரிச்ருங்கம்
பத்ப்யாம் ப்ரபீட்யாசு க்முத்பபாத ॥ 129

மஹேந்த்ர மலையில் ஏறி இராமனை மனதில் த்யானித்து, கடலைக் கடப்பதற்காக உயரே கிளம்பவிருக்கும் கருத்மானைப் போல் கால்களால் மலைச் சிகரத்தை நன்கு அழுத்தி ஆகாயத்தில் கிளம்பினார்.

॥ सुन्दरकाण्डप्रारम्भः ॥

मार्गं निरुन्धत्सु रसाभिधाया:
विशन् स वक्त्रं त्वणुवच्च निर्यन् ।
पस्पर्श मैनाकमथार्णवोत्थं
विश्रान्तयेस्याप्यविलम्पनार्थी ॥ १३०

## ஸுந்தரகாண்டம்

மார்கம் நிருந்தத்ஸு ரஸாபிதாயா:
விசன் ஸ வக்த்ரம் த்வணுவச்ச நிர்யன் ।
பஸ்பர்ச மைனாகமதார்ணவோத்தம்
விச்ராந்தயேஸ்யாப்யவிளம்பனார்த்தீ ॥ 130

தனது வழியைத் தடுக்கும் "ரஸா" என்ற பெயருடைய அரக்கியின் வாயில் நுழைந்து அணுவடிவாக வெளிப்பட்டு நீரிலிருந்து எழுந்த மைனாக மலையை ஸ்பர்சித்து ஒய்வு எடுக்கும்படி கூறிய அதன் வேண்டுகோளை தாமதத்தைத் தவிர்ப்பவராகக் கருதி மறுத்தார்.

नीत्वोपमृत्युं स तु पार्ष्णिघाता
च्छायाकृषांवारिणि सिंहिकाख्याम् ।
डयन् रघूक्तः स शरप्रवेगो
लङ्काङ्कशैलस्य पपात सानौ ॥ १३१

நீத்வோபம்ருத்யும் ஸ து பார்ஷ்ணிகாதா-
சாயாக்ருஷாம்வாரிணி ஸிம்ஹிகாக்யாம் ।
டயன் ரகூக்த: ஸ சரப்ரவேகோ
லங்காங்கசைலஸ்ய பபாத ஸானௌ ॥ 131

நிழலைப் பற்றி இழுக்கும் "ஸிம்ஹிகை" என்ற அரக்கியைக் கை முஷ்டிகளால் கொன்று, இராமனால் விடப்படும் பாணத்தின் வேகம்கொண்டு இலங்கை என்று பெயர் கொண்ட மலையின் தாழ்வறையில் இறங்கினார்.

नक्तं विशन् तत्पुरदेवतां सः
प्रताडच मार्गप्रतिषेदिनीं ताम् ।
ज्योत्स्नाकरोद्दीप्तपुरं समन्तात्
विचित्य सीतां विफलोद्यमोभूत् ॥ १३२

நக்தம் விசன் தத்புரதேவதாம் ஸ:
ப்ரதாட்ய மார்கப்ரதிஷேதினீம் தாம் ।
ஜ்யோத்ஸ்னாகரோத்தீப்தபுரம் ஸமந்தாத்
விசித்ய ஸீதாம் விபலோத்யமோபூத் ॥ 132

இரவில் அந்நகரில் நுழையுமவர் வழியை மறிக்கும் அந்நகரக் காவல் தேவதையை அடித்து வீழ்த்தி நில ஒளியால் ஒளிரும் பட்டிணமெங்கும் ஸீதையைத் தேடி பயனேதும் அடைந்தாரில்லை.

खिन्नोप्यनिर्वेदपरः खगोक्त्या
विशान्तशोकं विपिनं सुरम्यम् ।
स शिंशुपावृक्षतले निषण्णां
सीतामपश्यत् मलिनांशुकाढ्याम् ॥ १३३

கின்னோப்யனிர்வேதபர: ககோக்த்யா
விசாந்தசோகம் விபினம் ஸுரம்யம் ।
ஸ சிம்சுபாவ்ருக்ஷதளே நிஷண்ணாம்
ஸீதாமபச்யத் மலினாம்சுகாட்யாம் ॥ 133

ஸீதையைக் காணாது வருத்தமுற்ற போதிலும் ஸம்பாதியின் வார்த்தையினால் நம்பிக்கை தளராது சோகத்தைப் போக்கடிக்கும் மிக அழகிய வனத்தில் மலினமான ஆடைகளுடன் சிம்சுபா மரத்தின் அடியில் அமர்ந்துள்ள ஸீதையை ஹனுமார் பார்த்தார்.

रक्षोवधूभिस्तु सदाभिगुप्तां
सदोपवासेन भृशं कृशाङ्गीम् ।
रामेतिशश्वन्मृदुभाषमाणां
देवीमिवोर्मीतलमावतीर्णाम् ॥ १३४

ரக்ஷோவதூபிஸ்து ஸதாபிகுப்தாம்
ஸதோபவாஸேன ப்ருசம் க்ருசாங்கீம் ।
ராமேதிசச்வன்ம்ருதுபாஷமாணாம்
தேவீமிவோர்மீதளமாவதீர்ணாம் ॥ 134

அரக்கிகளால் எப்பொழுதும் மிரட்டப்படுபளாகவும், எப்பொழுதும் உபவாஸமிருப்பதால் மிகவும் இளைத்த சரீரத்தை உடையவளாகவும், எப்பொழுதும் ராம நாமத்தை மெலிந்த குரலில் உச்சரித்துக் கொண்டிருப்பவளுமான ஸீதையை பூமிக்கு இறங்கிவந்த மஹாலக்ஷ்மியைப்போல் பார்த்தார்.

अथाभिपद्यात्र निशाचरेन्द्रं
तामर्थयन्तं प्रणयप्रभावम् ।
नयेन रोषेण च तर्जनैस्तं
सीता तिरस्कृत्य रुषा बभाषे ॥ १३५

அதாபிபத்யாத்ர நிசாசரேந்த்ரம்
தாமர்த்தயந்தம் ப்ரணயப்ரபாவம் ।
நயேன ரோஷேண ச தர்ஜனைஸ்தம்
ஸீதா திரஸ்க்ருத்ய ருஷா பபாஷே ॥ 135

அங்கு ஸீதையை அடைந்து; தனது ப்ரபாவங்களைக் கூறி கெஞ்சலாகவும், கோபமாகவும் மிரட்டி தன்னை மணக்கும்படி வேண்டும் அரக்கர் தலைவன் இராவணனை திரஸ்கரித்து கோபத்துடன் ஸீதை கூறினாள்.

मासद्वयान्तं स वितीर्य तस्यै
  सत्वं पुनस्तामनुनेतुमाज्ञाम् ।
स्त्रीणां दिशन् स्वं सदनं प्रपेदे
  मरुत्सुते पश्यति पादपस्थे ॥ १३६

மாஸத்வயாந்தம் ஸ விதீர்ய தஸ்யை
  ஸத்வம் புனஸ்தாமனுனேதுமாக்ஞாம் ।
ஸ்த்ரீணாம் திசன் ஸ்வம் ஸதனம் ப்ரபேதே
  மருத்ஸுதே பச்யதி பாதபஸ்தே ॥ 136

மரத்தில் அமர்ந்திருக்கும் ஹனுமன் பார்த்துக் கொண்டிருக்குமளவில் ஸீதையை நல்வார்த்தைகள்கூறி இசையும்படிச் செய்வதற்கு அரக்கிகளுக்குக் கட்டளை யிட்டு, இரண்டு மாத காலம் ஸீதைக்கு அவகாசம் அளித்து இராவணன் தனது இருப்பிடம் சென்றான்.

आश्वास्य भर्तुः कथयैव सीतां
  तदङ्गुलीयं वितरंश्च नत्वा ।
विश्वासितोन्योन्य कथा प्रसादात्
  आसावभिज्ञानमथार्थयत्ताम् ॥ १३७

ஆச்வாஸ்ய பர்து: கதயைவ ஸீதாம்
  ததங்குலீயம் விதரம்ச்ச நத்வா ।
விச்வாஸிதோன்யோன்ய கதா ப்ரஸாதாத்
  ஆஸாவபிக்ஞானமதார்த்தயத்தாம் ॥ 137

இராமனின் கதைகளால் ஸீதையை ஆச்வாஸப்படுத்தி அவர் கொடுத்த மோதிரத்தை வணங்கி ஸமர்பித்து, ஸீதை—இராமர் இவர்களின் அந்யோந்ய (இருவர் மட்டுமே அறிந்த) கதைகளைக் கூறி ஸீதைக்கு நம்பிக்கையூட்டி இராமனிடம் அளிக்க ஓர் அடையாளத்தை அவளிடமிருந்து ஹனுமன் வேண்டினார்.

तयावितीर्णं प्रविचिन्त्य किञ्चित्
तन्मौलिरत्नं स वचोनुलभ्य ।
स्वपारणार्थं विपिनस्य भङ्गं
कर्तुं प्रवृत्तः कपिकुञ्जरोऽयम् ॥ १३८

தயாவிதீர்ணம் ப்ரவிசிந்த்ய கிஞ்சித்
தன்மௌலிரத்னம் ஸ வசோனுலப்ய ।
ஸ்வபாரணார்த்தம் விபினஸ்ய பங்கம்
கர்த்தும் ப்ரவ்ருத்த: கபிகுஞ்ஜரோ஽யம் ॥ 138

சிறிது சிந்தித்து அவளால் அளிக்கப்பட்ட சூடாமணியை நல்வார்த்தைகளுடன் பெற்று, தனது உணவிற்காக அசோகவனத்தை அழிப்பதற்கு ஹனுமன் முற்பட்டான்.

रक्षःपतेस्तद्वनवृक्षनाशं
निरीक्ष्य रक्षःकुलमत्रयोद्धुम् ।
प्राप्तं निहत्याक्षमयीन्द्रजेत्रा
युद्ध्वा चिरं सोऽस्य बलं व्यहिंसीत् ॥ १३९

ரக்ஷ:பதேஸ்தத்வனவ்ருக்ஷநாசம்
நிரீக்ஷ்ய ரக்ஷ:குலமத்ரயோத்தும் ।
ப்ராப்தம் நிஹத்யாக்ஷமயீந்த்ரஜேத்ரா
யுத்வா சிரம் ஸோ஽ஸ்ய பலம் வ்யஹிம்ஸீத் ॥ 139

அரக்கர் தலைவனின் அவ்வனம் அழிக்கப்படுவதைக் கண்டு, போரிட வந்த அரக்கர் கூட்டத்தைக் கொன்று, அதனைப் பொறுக்காது போர் புரியவந்த இந்த்ரஜித்துடன் நெடுநேரம் போரிட்டு அவனது பலத்தை ஒடுக்கினார்.

अलौकिकं तत्प्लवगस्य वीर्यं
दृष्ट्वा विधेरस्त्रबलात् प्रगृह्य ।
तं रावणिः किङ्करबृन्दबद्धं
निनाय रक्षःपतिसन्निकर्षम् ॥ १४०

அலௌகிகம் தத்ப்லவகஸ்ய வீர்யம்
த்ருஷ்ட்வா விதேரஸ்த்ரபலாத் ப்ரக்ருஹ்ய ।
தம் ராவணி: கிங்கரப்ருந்தபத்தம்
நிநாய ரக்ஷ:பதிஸன்னிகர்ஷம் ॥ 140

பூலோகத்தில் கண்டறியாத அவ்வானரனின் வலிமையைப் பார்த்து ப்ரம்மாஸ்த்ர பலத்தினால் கட்டி ஹனுமாரை கிங்கரர்கள் புடைசூழ இந்த்ரஜித் இராவணனுடைய முன்னிலைக்கு அழைத்து வந்தான்.

ब्रह्मास्त्रमुक्तः क्षणसङ्गमान्तं
वरेण तस्यैव कपिर्महात्मा ।
रक्षोभृतोसौ सचिवेन वृष्टः
रामं स्मरन्नुत्तरमाजहार ॥ १४१

ப்ரம்மாஸ்த்ரமுக்த: க்ஷணஸங்கமாந்தம்
வரேண தஸ்யைவ கபிர்மஹாத்மா ।
ரக்ஷோப்ருதாஸௌ ஸசிவேன வ்ருஷ்ட:
ராமம் ஸ்மரன்னுத்தர மாஜஹார ॥ 141

ஒரு நொடிப்பொழுது ப்ரம்மாஸ்த்ரத்தால் கட்டுண்டவர் ப்ரம்மாவின் வரத்தின்படியே அக்கட்டிலிருந்து விடுபட்ட மஹாத்மாவான ஹனுமான் அரக்கர்களால் சூழப்பட்டு அவனது மந்திரியால் அழைத்துச் செல்லப் படுபவராக இராமனை நினைத்துக்கொண்டு பதில் கூறினார்.

मरुत्सुतोहं हनुमांश्च नाम्नां
दूतोखिलेशस्य रघूद्वहस्य ।
पत्नीं त्वयैवास्य समाहृतान्ता-
मन्विष्य दृष्ट्वाभिगतो विवक्षुः ॥ १४२

மருத்ஸுதோஹம் ஹனுமாம்ச்ச நாம்னாம்
தூதோகிலேசஸ்ய ரகூத்வஹஸ்ய ।
பத்னீம் த்வயைவாஸ்ய ஸமாஹ்ருதாந்தா-
மந்விஷ்ய த்ருஷ்ட்வாபிகதோ விவக்ஷு: ॥ 142

வாயுவின் பிள்ளையாகிய நான் ஹனுமான் எனப் பெயர் கொண்டவன். அகில நாயகனான இராமனின் தூதன். உன்னரல் அபஹரிக்கப்பட்ட இராமனது மனைவியைத் தேடிக்கண்டுபிடித்து, திரும்பிச் சென்று அவரிடம் விபரம்கூற விழைபவனாக இங்கு வந்துள்ளேன்,

सीतां पुरस्कृत्य विसृज्य मौग्ध्यं
रामं भजस्वाखिललोकनाथम् ।
नोचेत्त्वमस्यैव शराग्निदग्धः
प्राप्नोषि हानिं स्व कुलात्मनोश्च ॥ १४३

ஸீதாம் புரஸ்க்ருத்ய விஸ்ருஜ்ய மௌக்யம்
ராமம் பஜஸ்வாகிலலோகநாதம் ।
நோசேத்த்வமஸ்யைவ சராக்னிதக்த:
ப்ராப்னோஷி ஹானிம் ஸ்வ குலாத்மனோச்ச ॥

ஸீதையை முன்னிட்டு உனது ஆணவத்தைவிடுத்து அகில உலகத்தின் தலைவனான இராமனைப் போற்றுவாய், இல்லையெனில் இராமனின் பாணங்களினால் அழிக்கப் பட்டு உனக்கும் உன் குலத்திற்கும் அழிவைத் தேடிக் கொள்வாய்.

श्रुत्वास्य वाचं कुपितो दशास्यः
शशास भृत्यान् प्लवगं जिघांसुः ।
वध्या न दूता इति धर्मतोमुं
विभीषणोस्यावरजस्त्वगादीत् ॥ १४४

ச்ருத்வாஸ்ய வாசம் குபிதோ தசாஸ்ய:
சசாஸ ப்ருத்யான் ப்லவகம் ஜிகாம்ஸு: ।
வத்யா ந தூதா இதி தர்மதோமும்
விபீஷணோஸ்யாவரஜஸ்த்வகாதீத் ॥

ஹனுமனின் வார்த்தையைக் கேட்டு கோபங்கொண்ட இராவணன் வானரத்தைக் கொல்ல விருப்பி கிங்கரர்களை பணித்தான். தூதர்களைக் கொல்வது தர்மமல்ல என்று இராவணனின் தம்பி விபீஷணன் கூறினான்.

ततो विचिन्त्यास्य सुदीर्घपुच्छं
स दीपयामास हुताशनेन ।
तेनाग्नि सात्तन्नगरं स तीव्रं
चकार तस्यानुजगेहवर्जम् ॥ १४५

ததோ விசிந்த்யாஸ்ய ஸுதீர்கபுச்சம்
ஸ தீபயாமாஸ ஹுதாசனேன ।
தேனாக்னி ஸத்தன்னகரம் ஸ தீவ்ரம்
சகார தஸ்யானுஜகேஹவர்ஜம் ॥ 145

விபீஷணனின் வார்த்தைகளை மனதில் கொண்ட இராவணன், ஹனுமனின் நீண்ட வாலை நெருப்பினால் கொளுத்தினான். ஹனுமனும் (விபீஷணனின் இருப்பிடம் தவிர்த்த) அந்தகரத்தைக் கடுமையாக நெருப்பினால் கொளுத்தினான்.

सीतार्थितोऽसौ ज्वलनान्न दग्धो
निमज्य पुच्छं जलधौ हनूमान् ।
विलोक्य देवीं पुनरेव सिन्धुं
सन्तीर्य रामं सखिभिर्ननाम ॥ १४६

ஸீதார்த்திதோऽஸௌ ஜ்வலனான்ன தக்தோ
நிமஜ்ய புச்சம் ஜலதௌ ஹனூமான் ।
விலோக்ய தேவீம் புனரேவ ஸிந்தும்
ஸந்தீர்ய ராமம் ஸகிபிர்னனாம ॥ 146

ஸீதையால் ப்ரார்த்திக்கப்பட்டபடி நெருப்பினால் ஹனுமன் பாதிக்கப்படவில்லை. வாலிலுள்ள நெருப்பை ஸமுத்ரத்தில் நனைத்து மறுமுறை ஸீதா தேவியைப் பார்த்துவிட்டு கடலைக் கடந்து தனது தோழர்களுடன் இராமனை அடைந்து வணங்கினார்.

## ॥ युद्धकाण्ड प्रारम्भः ॥

प्रियाप्रवृत्तिं सहभूषणेन
प्रलभ्य रामः परिरभ्य हर्षात् ।
प्रभाञ्जनिं वानरकोटिसङ्ख्यैः
रिपुं जिगीषुः ससुहृत्प्रतस्थे ॥ १४७

### யுத்த காண்டம்

ப்ரியாப்ரவ்ருத்திம் ஸஹபூஷணேன
ப்ரலப்ய ராம: பரிரப்ய ஹர்ஷாத் ।
ப்ரபாஞ்ஜனிம் வானரகோடிஸங்க்யை:
ரிபும் ஜிகீஷு: ஸஸுஹ்ருத்ப்ரதஸ்தே ॥ 147

சூடாமணியைக் கண்டு ஹனுமனின் மூலம் தேவியின் நிலையை அறிந்து வருந்தி, பூஷணத்தை மகிழ்வுடன் அணைத்துக்கொண்டு கோடிக்கணக்கான வானரர்களுடன் எதிரியை வெல்ல விரும்பி, நண்பன் ஸுக்ரீவனுடன் கிளம்பினார்.

अवाप्य वारेस्समुपेत्य तीरं
सेना निवेशं सुहृदा विधाय ।
रामः स सिन्धोस्तरणेप्युपायं
व्यचिन्तयन्मर्त्यविडम्बनेन ॥ १४८

அவாப்ய வாரேஸ்ஸமுபேத்ய தீரம்
ஸேனா நிவேசம் ஸுஹ்ருதா விதாய ।
ராம: ஸ ஸிந்தோஸ்தரணேப்யுபாயம்
வ்யசிந்தயந்மர்த்யவிடம்பனேன ॥ 148

ஸமுத்ரக்கரையை அடைந்து நண்பனின் மூலம் ஸேனைகளை அணிவகுத்து மனிதன் என்னும் போர்வையில் பரமாத்மாவான இராமர் ஸமுத்ரத்தைக் கடக்க உபாயத்தைச் சிந்தித்தார்.

लङ्कां विदह्यापगते कपीन्द्रे
कृत्वा पुनस्तां सुदृढां दशास्यः ।
विमर्शयामास हितैरमात्यैः
कार्यं यदूर्ध्वं प्रियबान्धवैश्च ॥ १४९

லங்காம் விதஹ்யாபகதே கபீந்த்ரே
க்ருத்வா புனஸ்தாம் ஸுத்ருடாம் தசாஸ்ய: ।
விமர்சயாமாஸ ஹிதைரமாத்யை:
கார்யம் யதூர்த்வம் ப்ரியபாந்தவைச்ச ॥ 149

கபீந்த்ரர் ஹனுமான் லங்கையைக் கொளுத்திவிட்டுத் திரும்பிய அளவில் ஸீதையின் பாதுகாப்பை வலுப்படுத்தி இராவணன் தனக்கு ஹிதமான மந்த்ரிமார்களுடனும், நண்பர்களுடனும், உறவினர்களுடனும் இவ்விஷயத்தில் செய்யவேண்டிய மேல்நடவடிக்கையைச் சிந்திக்கலானான்.

शंसत्सु सर्वेषु तदुग्रशौर्यं
विभीषणोऽस्यावरजो जगाद ।
एते हितं ते न वदन्त्यमात्याः
त्वद्भ्रूलताधीनविभूतिभोगाः ॥ १५०

சம்ஸத்ஸு ஸர்வேஷு ததுக்ரசௌர்யம்
விபீஷணோஸ்யாவரஜோ ஜகாத ।
ஏதே ஹிதம் தே ந வதந்த்யமாத்யா:
த்வத்ப்ரூலதாதீநவிபூதிபோகா: ॥ 150

அனைவரும் இராவணனின் மிகக் கடுமையான பராக்ரமத்தைப் புகழ்ந்துரைக்கையில்; இராவணனின் தம்பி விபீஷணன், உனது கண் அசைவிற்குக் கட்டுப்பட்டு ஐச்வர்யங்களையும், போகங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் இம்மந்திரிகள் கூறுவது உனக்கு ஹித மில்லை என்றுக் கூறினான்.

न मोक्ष्यसेरामशरैस्सजीवः
यदीयवह्नीह समाहृतान्ते ।
प्रत्यर्पणेनैव भवेत् स तस्याः
शान्तो न चेत्त्वां सकुलं प्रदह्यत् ॥ १५१

ந மோக்ஷ்யஸேராமசரைஸ்ஸஜீவ:
யதீயவஹ்னிஹ ஸமாஹ்ருதாந்தே ।
ப்ரத்யர்பணேனைவ பவேத் ஸ தஸ்யா:
சாந்தோ ந சேத்வாம் ஸகுலம் ப்ரதஹ்யாத் ॥

உன்னால் கொண்டுவரப்பட்ட ஸீதை நெருப்பைப் போன்றவள். இராமனிடம் திருப்பி ஒப்படைக்கப் பட்டாலே இவள் அமைதி கொள்வாள். நீ இராமனின் பாணத்திலிருந்து நிச்சயம் உயிருடன் தப்பமாட்டாய். இந்நெருப்பு உன்னைக் குலத்துடன் அழிக்கும்.

इत्थं ब्रुवाणां हि तमस्य धूर्ते
रुषा बभाणावरजं दशास्यः ।
यद्यन्य एवं वचनं हि ब्रूयात्
तस्मिन् क्षणे तं गमयामि मृत्युम् ॥ १५२

இத்தம் ப்ருவாணாம் ஹி தமஸ்ய தூர்த்தே
ருஷா பபாணாவரஜம் தசாஸ்ய: ।
யத்யன்ய ஏவம் வசனம் ஹி ப்ரூயாத்
தஸ்மின் க்ஷணே தம் கமயாமி ம்ருத்யும் ॥ 152

இவ்விதம் ஹிதத்தை போதிக்கும் தம்பியை, தூர்த்த இராவணன் இவ்வார்த்தைகளை வேறொருவன் கூறியிருப்பானாகில் அந்நொடியிலேயே அவனை யமனிடம் அனுப்பி பிருப்பேன் என சினந்துரைத்தான்.

आकर्ण्य तत्तं तरसा विमुञ्चन्
विभीषणस्सज्जनसंश्रयार्थी ।
उत्प्लुत्यभीत्या सचिवैश्चतुर्भिः
श्रीरामभद्रं शरणं प्रपेदे ॥ १५३

ஆகர்ண்ய தத்தம் தரஸா விமுஞ்சன்
விபீஷணஸ்ஸஜ்ஜனஸம்ச்ரயார்த்தீ ।
உத்ப்லுத்ய பீத்யா ஸசிவைச்சதுர்பி:
ஸ்ரீராமபத்ரம் சரணம் ப்ரபேதே ॥ 153

அவ்வார்த்தைகளைக் கேட்டு நல்லோர்களின் தொடர்பை விரும்பும் விபீஷணன் உடனேயே ராவணனை பிரிந்து நான்கு மந்திரிகளுடன் கடலைக் கடந்து ஸ்ரீராமனைத் தஞ்சமடைந்தான்.

सुग्रीवशङ्कामवगण्य धीरो
दत्त्वाभयं दीनजनैकबन्धुः ।
लङ्काधिपत्ये सलिलाभिषेकं
चकार रामोऽवरजेन तस्य ॥ १५४

ஸுக்ரீவசங்காமவகண்ய தீரோ
தத்வாபயம் தீனஜனைகபந்து: ।
லங்காதிபத்யே ஸலிலாபிஷேகம்
சகார ராமோவரஜேன தஸ்ய ॥ 154

ஸுக்ரீவனெழுப்பிய சந்தேஹங்களைக் கருத்தில் கொள்ளாது பரிதவிக்கும் மக்களின் உற்றோனாகிய தீரன் இராமன் தன்னை வந்து வணங்கிய விபீஷணனுக்கு அபய மளித்து இராவணனின் தம்பியாகிய அவனுக்கு இலங்கை அரசை அளித்து பட்டாபிஷேகம் செய்து வைத்தார்.

तन्मन्त्रणेनैव तथा त्रिरात्रं
रामोऽब्धितीरे चरितव्रतेऽपि ।
गांभीर्यदर्पाशयताम्बुराशिः
ददौ न किञ्चित्तरणेऽप्युपायम् ॥ १५५

தன்மந்த்ரணேனைவ ததா த்ரிராத்ரம்
ராமோப்திதீரே சரிதவ்ரதேபி ।
காம்பீர்யதர்பாசயதாம்புராசி:
ததௌ ந கிஞ்சித்தரணேப்யுபாயம் ॥ 155

விபீஷணன் கூறியபடி மூன்று இரவுகள் இராமர் ஸமுத்ரக்கரையில் வ்ரதம் இருந்தபோதிலும் பிடிவாதம், செருக்கு இவற்றிற்காட்பட்ட ஸமுத்ரராஜன் தன்னைக் கடப்பதற்கு சிறிதளவும் வழிவகை செய்யவில்லை.

रामस्य चापाक्रमणात्तथाब्धिः
भीत्या तदामन्यत सेतुबन्धम् ।
आधाप्य सेतुं दृढमाब्धिगर्भे
नलेन लङ्कां हरिभिस्स भेजे ॥ १५६

ராமஸ்ய சாபாக்ரமணாத்ததாப்தி:
பீத்யா ததாமன்யத ஸேதுபந்தம் ।
ஆதாப்ய ஸேதும் த்ருடமாப்திகர்பே
நளேன லங்காம் ஹரிபிஸ்ஸ பேஜே ॥ 156

இராமனின் பாணத்திற்கு பயந்து ஸமுத்ரராஜன் அணைகட்ட ஒப்புக்கொண்டான், நளனால் ஸமுத்ரத்தின் நடுவில் உறுதியாக அணையைக் கட்டுவித்து இராமர் வானர ஸேனைகளுடன் இலங்கையை அடைந்தார்.

दशाननाग्रे रघुवीरणुन्नः
गत्वाजवेनाङ्गद आबभाषे ।
देयेति भार्या ममवासवस्ते
युद्धे त्वया रावण राघवाज्ञा ॥ १५७

தசானனாக்ரே ரகுவீரணுன்ன:
கத்வாஜவேனாங்கத ஆபபாஷே ।
தேயேதி பார்யா மமவாஸவஸ்தே
யுத்தே த்வயா ராவண ராகவாக்ஞா ॥ 157

இராமனால் அனுப்பப்பட்ட வாலியின் மைந்தன் அங்கதன் இராவணனை அடைந்து, இராகவனின் பத்னியை என்னிடம் திருப்பி அளித்துவிடு அல்லது போரில் உன்னால் உனது உயிரை அளிக்க வேண்டியிருக்கும். இது இராமனின் கட்டளை எனக் கூறினான்.

तद्भृत्यरक्षोगणबद्ध्यमानः
प्रोत्क्रम्य निघ्नन् स च तान् प्रकोष्ठम् ।
हर्म्यस्य भङ्क्त्वा दशकन्धरस्य
प्रतिप्रपेदे रघुनाथमीशम् ॥ १५८

தத்ப்ருத்யரக்ஷோகணபத்யமான:
ப்ரோத்க்ரம்ய நிக்னன் ஸ ச தான் ப்ரகோஷ்டம் ।
ஹர்ம்யஸ்ய பங்க்த்வா தசகந்தரஸ்ய
ப்ரதிப்ரபேதே ரகுநாதமீசம் ॥ 158

இராவணனின் வேலைக்கார அரக்கர்களால் கட்டப்பட்ட அங்கதன், அவர்களைக் கொன்று இராவணனின் இருப்பிடத்தை நாசமாக்கி, தலைவன் ரகுநாதனை மீண்டும் வந்தடைந்தான்.

अथोच्चचारोद्धत युद्धशंसी
भेरीनिनादः क्षणदाचराणाम् ।
शिलाहताट्टाल परम्पराणां
झंकारशब्दश्च घनः कपीनाम् ॥ १५९

அதோச்சசாரோத்தத யுத்தசம்ஸீ
பேரீநிநாத: க்ஷணதாசராணாம் ।
சிலாஹதாட்டாள பரம்பராணாம்
ஜம்காரசப்தச்ச கன: கபீனாம் ॥ 159

பிறகு யுத்தத்தை அறிவிக்கும் அரக்கர்களின் போர் முரசு ஒலித்தது. (அதே சமயம்) வானரக் கூட்டங்கள் மலைகளைப் பெயர்த்து வீசத் துவங்கியதால் (இங்கும்) இடிமுழக்கத்திற்கு ஒத்த யுத்த கோஷம் எழுந்தது.

रामोजसाविष्टकपिप्रहारैः
रक्षःप्रवीरा निहतास्ससैन्याः ।
तदोदिरोदास्सरितोऽनुवन्ताः
दिग्भ्यः प्रवेगास्त्वरितं महत्यः ॥ १६०

ராமோஜஸாவிஷ்டகபிப்ரஹாரை:
ரக்ஷ:ப்ரவீரா நிஹதாஸஸைன்யா: ।
ததோதிரோதாஸ்ஸரிதோஸ்னுவந்தா:
திக்ப்ய: ப்ரவேகாஸ்த்வரிதம் மஹத்ய: ॥ 160

இராமனின் தேஜஸால் ஆக்ரமிக்கப்பட்ட வானரர்களின் தாக்குதல்களால் அரக்கர்தலைவர்கள் சைன்யங்களுடன் கொல்லப்பட்டனர். அப்பொழுது பெருகும் இரத்த ஆறுகள் திசையெங்கும் பெருமளவில் வேகமாக ஓட ஆரம்பித்தன.

हतं स्वसैन्यं समरे सरोषं
स रावणिः प्रेक्ष्य च मेघनादः ।
चक्षुश्रवास्त्रेण बलान्नृसिंहौ
निबध्य वीरौ स्वपुरं जगाम ॥ १६१

ஹதம் ஸ்வஸைன்யம் ஸமரே ஸரோஷம்
ஸ ராவணி: ப்ரேக்ஷ்ய ச மேகநாத: ।
சக்ஷுச்ரவாஸ்த்ரேண பலான்ந்ருஸிம்ஹௌ
நிபத்ய வீரௌ ஸ்வபுரம் ஜகாம ॥ 161

தனது படைகள் போரில் கொல்லப்பட்டதைக் கண்ட மேகநாதன் கடுங்கோபத்துடன் நாகாஸ்த்ரத்தினால் நரஸிங்கங்களான இராம, லக்ஷ்மணரைக் கட்டிப்போட்டுவிட்டு தனது நகரத்திற்குச் சென்றான்.

दिव्य प्रभावौ गरुडेन साक्षात्
स्पृष्टौ विमुक्ताखिलपाशबन्धौ ।
रक्षोबलं जघ्नतुरात्मसैन्यैः
प्रहस्त धूम्राक्षमुखांश्च रोषात् ॥ १६२

திவ்ய ப்ரபாவெள கருடேன ஸாக்ஷாத்
ஸ்ப்ருஷ்டௌ விமுக்தாகிலபாசபந்தௌ ।
ரக்ஷோபலம் ஜக்னதுராத்மஸைன்யை:
ப்ரஹஸ்த தூம்ராக்ஷமுகாம்ச்ச ரோஷாத் ॥ 162

தெய்வீக ஒளி பொருந்திய அவ்விருவரும் கருடனால் தீண்டப்பட்டு நாகபாசத்திலிருந்து விடுபட்டவர்களாக தனது ஸைன்யங்களுடன் ப்ரஹஸ்தன், தூம்ராக்ஷன் முதலிய அரக்கர் ஸைன்யங்களை அழித்தனர்.

अथागतं रावणमत्रयोद्धुं
रामोऽस्त्रवर्षैः परिपीडिताङ्गम् ।
कृत्वारणे नष्टबलप्रभावं
बाहावशेषं कृपया मुमोच ॥ १६३

அதாகதம் ராவணமத்ரயோத்தும்
ராமோஸ்த்ரவர்ஷை: பரிபீடிதாங்கம் ।
க்ருத்வாரணே நஷ்டபலப்ரபாவம்
பாஹாவசேஷம் க்ருபயா முமோச ॥ 163

பிறகு சண்டையிட வந்த இராவணனை இராமர் பாணமழை பொழிந்து உடலெங்கும் துளைத்து பலமிழக்கச் செய்து வலிமை குன்றிய அவனைக் கைகள் மிஞ்சியிருக்கும் படிச் செய்து கருணையால் கொல்லாது விடுத்தார்.

निद्रालुरस्यावरजेतियत्नात्
प्रबोधितः प्राप्य गिराग्रजस्य ।
स कुम्भकर्णो धृतशूलयुग्मः
विद्रावयामास कपीन् बलाढ्यः ॥ १६४

நித்ராலுரஸ்யாவரஜேதியத்னாத்
ப்ரபோதித: ப்ராப்ய கிராக்ரஜஸ்ய ।
ஸ கும்பகர்ணோ த்ருதசூலயுக்ம:
வித்ராவயாமாஸ கபீன் பலாட்ய: ॥ 164

அண்ணனின் கட்டளையால் தூங்கும் ஸ்வபாவமுள்ள தம்பி கும்பகர்ணன் பெறுமுயற்சியால் எழுப்பப்பட்டவனாக சூலாயுதமேந்தி வானரர்களை தனது வலிமையால் ஓடஓட விரட்டினான்.

निष्पिष्यकीशान् स्वयमेव खात्वा
हत्वोग्रवीरं तरसा कपीन्द्रम् ।
तस्मिन् पुरं गच्छति मुक्तमूर्च्छः
विग्रं विधायामुमुयैत् कपीन्द्रः ॥ १६५

நிஷ்பிஷ்யகீசான் ஸ்வயமேவ காத்வா
ஹ்ருத்வோக்ரவீரம் தரஸா கபீந்த்ரம் ।
தஸ்மின் புரம் கச்சதி முக்தமூர்ச்ச:
விக்ரம் விதாயாமுமுயைத் கபீந்த்ர: ॥ 165

போர்க்களம் புகுந்த கும்பகர்ணன் வானர வீரர்களை கசக்கி உண்டு, வானரத்தலைவன் ஸுக்ரீவனைக் கைப்பற்றி நகரத்திற்குத் திருப்பிச் சென்றான். செல்லும் வழியில் மூர்ச்சை தெளிந்த ஸுக்ரீவன், கும்பகர்ணனின் காது, மூக்கு இவைகளைக் கடித்துத் தொல்லையை உண்டு பண்ணி அவனிடமிருந்து தப்பித்தார்.

तस्मिन् रुषाभ्येत्य तु युध्यमाने
विदीर्णकाये स्रुत शोणितौघे ।
रामास्त्रकृत्त युधि खण्डशोऽसौ
व्यसुर्धरण्यां निपपात भीमः ॥ १६६

தஸ்மின் ருஷாப்யேத்ய து யுத்யமானே
விதீர்ணகாயே ஸ்ருத சோணிதௌகே ।
ராமாஸ்ரக்ருத்த யுதி கண்டசோऽஸௌ
வ்யஸுர்தரண்யாம் நிபபாத பீம: ॥ 166

உடலெங்கும் ரத்தம் பெருக ரோஷத்துடன் சண்டையிடும் கும்பகர்ணனை ராமன் அஸ்த்ரங்களால் கண்ட துண்டமாக வெட்டி பலம்மிகக் கொண்ட அவனைத் தரையில் வீழ்த்தினான்.

तस्मिन् पितृव्ये निधनं प्रयाते
भूयोभिगम्येन्द्रजिदस्त्रवेदी ।
श्रीरामसुग्रीवमुख स सैन्यं
परोक्षतः ब्रह्मशराद् व्यहिंसीत् ॥ १६७

தஸ்மின் பித்ருவ்யே நிதனம் ப்ரயாதே
பூயோபிகம்யேந்த்ரஜிதஸ்ரவேதீ ।
ஸ்ரீராமஸுக்ரீவமுகம் ஸ ஸைன்யம்
பரோக்ஷத: ப்ரம்மசராத் வ்யஹிம்ஸீத் ॥ 167

சித்தப்பன் இறந்ததைக் கேட்ட இந்த்ரஜித் மீண்டும் ஸைன்யத்தைத் திரட்டி ஸ்ரீராமன், ஸுக்ரீவன் இவர்களைக் குறித்து ஏவி, மாயையினால் மறைந்திருந்து ப்ரம்மாஸ்த்ரத்தை ஏவி இராமன் முதலானவர்களை மூர்ச்சை அடையச் செய்தான்.

क्षणं तदस्त्रे प्रतिमन्यमाने
रामेण सेनां पतितां तदीयाम् ।
मरुत्सुतो जाम्बवताभिनुन्नः
हत्वोषधीस्सत्वरमुद्धधार ॥ १६८

க்ஷணம் ததஸ்ரே ப்ரதிமன்யமானே
ராமேண ஸேனாம் பதிதாம் ததீயாம் ।
மருத்ஸுதோ ஜாம்பவதாபிநுன்ன:
ஹத்வோஷதீஸ்ஸத்வரமுத்ததார ॥ 168

ஒரு நொடியில் ப்ரம்மாஸ்த்ரத்தினால் இராமனும் இதர வானரர்களும் மூர்ச்சையடைந்து வீழ்ந்த அளவில் ஜாம்பவானால் ஏவப்பட்ட ஹனுமார் ஒஷதி பர்வதத்தை எடுத்துக்கொண்டு வேகமாக வந்தார்.

ततः प्रवृत्ते घनसंप्रहारे
रामेण केचिन्निहतास्तथान्ये ।
सौमित्रि सुग्रीव हनूमदाद्यैः
निशाचराः पश्यति मेघनादे ॥ १६९

தத: ப்ரவ்ருத்தே கனஸம்ப்ரஹாரே
ராமேண கேசின்னிஹதாஸ்ததான்யே ।
ஸௌமித்ரி ஸுக்ரீவ ஹனூமதாத்யை:
நிசாசரா: பச்யதி மேகநாதே ॥ 169

இவ்விதம் ஸஞ்ஜீவி பர்வதத்தால் உயிர்பிழைத்த இராமன், லக்ஷ்மணன், ஸுக்ரீவன், ஹனுமானுள்ளிட்ட வீரர்களால் அதன்பின் நடந்த கடுமையான சண்டையில் இந்த்ரஜித் பார்த்துக்கொண்டே இருக்குமளவில் பல அரக்கர்கள் கொல்லப்பட்டனர்.

ततः स्वहृष्टां स निहत्य सीतां
मायाप्रभावात् हनुमत्समक्षम् ।
खड्गेन चैत्यन्तु निकुम्भिलाख्यं
जगाम होतुं विजयास्त्रसिध्यै ॥ १७०

தத: ஸ்வஹ்ருஷ்டாம் ஸ நிஹத்ய ஸீதாம்
மாயா ப்ரபாவாத் ஹனுமத்ஸமக்ஷம் ।
கட்கேன சைத்யந்து நிகும்பிலாக்யம்
ஜகாமஹோதும் விஜயாஸ்த்ரஸித்யை ॥ 170

பிறகு தான் இழுத்துவந்த மாயா ஸீதையை ஹனுமன் எதிரிலே கொன்று, மேகநாதன் விஜயாஸ்த்ரத்தைப் பெறுவதற்காக நிகும்பிலை என்ற யாகத்தைச் செய்ய சென்றான்.

श्रुत्वारिकृत्यं दयितानुषङ्गं
रामं शुचन्तं तु निवेद्य मायाम् ।
सौमित्रिणर्वार्धमखे स वद्ध्यो
नैवात्यधेत्याह विभीषणश्च ॥ १७१

ச்ருத்வாரிக்ருத்யம் தயிதானுஷங்கம்
ராமம் சுசந்தம் து நிவேத்ய மாயாம் ।
ஸௌமித்ரிணைவார்தமகே ஸ வத்யோ
நைவாத்யதேத்யாஹ விபீஷணச்ச ॥ 171

ஸீதை கொல்லப்பட்டதால் வருத்தமுற்றிருக்கும் இராமனிடம், மேகநாதனின் இச்செய்கை மாயை என அறிவித்து, யாகம் செய்யவிருக்கும் மேகநாதனை யாகத்தை நிறைவேற்றாவண்ணம் பாதியிலேயே லக்ஷ்மணன் சென்று வதம் செய்யவேண்டும் என விபீஷணன் கூறினான்.

रामाज्ञया लक्ष्मण आत्तचापः
प्रणम्य तं प्राप्य विभीषणेन ।
स रावणे यज्ञ विघातमारात्
चकार शस्त्रैः कपिसैन्यसङ्घैः ॥ १७२

ராமாக்ஞயா லக்ஷ்மண ஆத்தசாப:
ப்ரணம்ய தம் ப்ராப்ய விபீஷணேன ।
ஸ ராவணே யக்ஞ விகாதமாராத்
சகார சஸ்த்ரை: கபிஸைன்ய ஸங்கை; ॥ 172

இராமனுடைய கட்டளையினால் வில்லேந்திய லக்ஷ்மணர் விபீஷணனுடன் விரைவில் யாகம் செய்யும் இடத்தை அடைந்து கபிஸைன்யங்களின் மூலம் இந்த்ரஜித்தின் யாகத்தை அழித்தார்.

पितृव्य कृत्यं स विगर्ह्य रोषात्
त्यजन् मखं रावणिरात्तचापः ।
युद्धं चकार प्रबलास्त्रवर्षैः
सौमित्रिणास्त्रविदा त्रिरात्रम् ॥ १७३

பித்ருவ்ய க்ருத்யம் ஸ விகர்ஹ்ய ரோஷாத்
த்யஜன் மகம் ராவணிராத்தசாப ।
யுத்தம் சகார ப்ரபலாஸ்த்ரவர்ஷை:
ஸௌமித்ரிணாஸ்த்ரவிதா த்ரிராத்ரம் ॥ 173

சித்தப்பாவான விபீஷணனின் நிந்திக்கத்தக்க இந்தச் செயலினால் ரோஷமடைந்த இந்த்ரஜித் யாகத்தைவிடுத்து வில்லை எடுத்து ப்ரபலமான அஸ்த்ரங்களைப் பொழிந்து மூன்று நாட்கள் போர் செய்தான்.

युद्धे प्रवृत्ते बुधभौम्यसाम्ये
सौमित्रिना ताडित मर्मदेशः ।
तं राक्षसं तीव्रनिकृत्तवक्त्रं
चकार रामस्मृतिमुक्तबाणात् ॥ १७४

யுத்தே ப்ரவ்ருத்தே புதபௌம்யஸாம்யே
ஸௌமித்ரினா தாடித மர்மதேச: ।
தம் ராக்ஷஸம் தீவ்ரநிக்ருத்தவக்த்ரம்
சகார ராமஸ்ம்ருதிமுக்த பாணாத் ॥ 174

புதனும் செவ்வாயும் போல் லக்ஷ்மணனும் இந்த்ரஜித்தும் ஈடுபட்ட யுத்தத்தில் இந்த்ரஜித்தால் அடிக்கப்பட்ட லக்ஷ்மணன், இராமனின் பெயரைச் சொல்லி விடப்பட்ட பாணத்தால் அந்த ராக்ஷஸனின் முகத்தைக் கடுமையாக சிதைத்தார்.

श्रुत्वैतदुग्राशनिपात तुल्यं
शोकादपतद्भुवि राक्षसेन्द्रः ।
संप्राप्तसंज्ञः पुनरेव हन्तुं
रामं स्वसैन्यं समशात् विशिष्टम् ॥ १७५

ச்ருத்வைததுக்ராசநிபாத துல்யம்
சோகாதபதத்புவி ராக்ஷஸேந்த்ர: ।
ஸம்ப்ராப்தஸம்ஞ: புனரேவ ஹந்தும்
ராமம் ஸ்வஸைன்யம் ஸமசாத் விசிஷ்டம் ॥ 175

மிகக்கடுமையான இடியின் தாக்குதலுக்கு ஒப்பான இந்த்ரஜித்தின் மரணத்தைக் கேட்டு பூமியில் மூர்ச்சையாய் விழுந்த இராவணன் நினைவு திரும்பி இராமனைக் கொல்வதற்காக தனது ஸைன்யம் முழுவதையும் துரிதப் படுத்தினான்.

यात्वौघमालोक्य समाहृतं तं
सम्मोहनास्त्रेण रघुप्रवीरः ।
अन्योन्यघातप्रहतं वितेने
महूर्तमात्रेण परोक्षभूतः ॥ १७६

யாத்வெளகமாலோக்ய ஸமாஹ்ருதம் தம்
ஸம்மோஹனாஸ்த்ரேண ரகுப்ரவீர: ।
அன்யோன்யகாதப்ரஹதம் விதேனே
முஹூர்த்தமாத்ரேண பரோக்ஷபூத: ॥ 176

படைகளுடன் சூழ்ந்து நிற்கும் ராவணனைக் கண்ட இராமர் ஸம்மோஹனாஸ்த்ரத்தை ஏவி பரஸ்பரம் கடும் சண்டையில் அவனை நிலைகுலையச் செய்தார். நிலை குலைந்த இராவணனும் ஒரு நொடியில் போர்க்களத்தை விட்டு மறைந்து போனான்.

बलप्रणाशोथ जनप्रणावं
श्रुत्वा दशास्यः परमप्रकोपात् ।
शरान्विमुञ्चन् भ्रुकुटीकृतास्यः
सर्वाभिसारेण ययौ स योद्धुम् ॥ १७७

பலப்ரணாசோத ஜனப்ரராவம்
ச்ருத்வா தசாஸ்ய: பரமப்ரகோபாத் ।
சரான்விமுஞ்சன் ப்ருகுடீக்ருதாஸ்ய:
ஸர்வாபிஸாரேண யயௌ ஸ யோத்தும் ॥ 177

பலமிழந்த இராவணன் ஜனங்களின் கூக்குரலைக் கேட்டு மிகவும் கோபமடைந்து முகம் சுருங்க பாணங் களைத் தொடுத்துக் கொண்டு மறைமுக யுத்தம் செய்யக் கிளம்பினான்.

भ्रात्रास्य रथ्यान्निहतान् निरीक्ष्य
क्रोधान्निहन्तुं तममोघशक्तिम् ।
नियोजयामास दशाननोस्मिन्
तं लक्ष्मणोग्रेसरदारिरक्षुः ॥ १७८

ப்ராத்ராஸ்ய ரத்யான்னிஹதான் நிரீக்ஷ்ய
க்ரோதான்னிஹந்தும் தமமோகசக்திம் ।
நியோஜயாமாஸ தசானனேஸ்மின்
தம் லக்ஷ்மணோக்ரேஸரதாரிரக்ஷு: ॥ 178

தம்பி விபீஷணால் தேர்ப்பாகனும், குதிரைகளும் அழிக்கப்பட்டதைக் கண்ட இராவணன் கோபம் மிகக் கொண்டு அவனை அழிப்பதற்காக தோல்வியுறாத சக்தி ஆயுதத்தை ஏவினான். இந்நிலையில் விபீஷணனைக் காப்பாற்ற விரும்பி லக்ஷ்மணனும் அவ்வஸ்த்ரத்தை எதிர்த்து முன்னேறினான்.

तच्छक्तिपातात् पतितं दशास्यः
सौमित्रिमुद्धर्तुमभून्नशक्तः ।
मुष्टिप्रहारेण निपात्यरक्षः
सौमित्रिमादाय ययौ हनूमान् ॥ १७९

தச்சக்திபாதாத் பதிதம் தசாஸ்ய:
ஸௌமித்ரிமுத்தர்த்துமபூன்னசக்த: ।
முஷ்டிப்ரஹாரேண நிபாத்யரக்ஷ:
ஸௌமித்ரிமாதாய யயௌ ஹனூமான் ॥ 179

இராவணனால் ஏவப்பட்ட சக்தி ஆயுதத்தால் அடிபட்டு விழுந்த லக்ஷ்மணனை தூக்குவதற்குத் திறமையற்றவனாக ராவணன் ஆனான். ஹனுமான் ராவணனை முஷ்டிப்ரஹாரத்தால் வீழ்த்தி லக்ஷ்மணனை தூக்கிச் சென்றான்.

तच्छक्तिमुत्पाद्य बलेन रामो
शरैस्स विद्राव्य रणाद्दशास्यम् ।
भ्रातुः प्रमूर्च्छां विलपन्नदभ्रं
खिन्नोऽभवत् प्राकृतवद्रमेशः ॥ १८०

தச்சக்திமுத்பாட்ய பலேன ராமோ
சரைஸ்ஸ வித்ராவ்ய ரணாத்தசாஸ்யம் ।
ப்ராது: ப்ரமூர்ச்சாம் விலபன்னதப்ரம்
கின்னோபவத் ப்ராக்ருதவத்ரமேச: ॥ 180

இராமர் பலம்கொண்டு அச்சக்தி ஆயுதத்தைப் பெயர்த்து எறிந்து பாணங்களால் இராவணனைப் போர்க் களத்திலிருந்து ஓடச் செய்து, மூர்ச்சை அடைந்த தம்பி யின் நிலையைக் கண்டு பாமரன்போல் மிகவும் அழுது (இராமர்) வருத்தமடைந்தார்.

सुषेणनुन्नो भिषजा हनूमान्
हृत्वौषधीं भूधरश्रृङ्गमारात् ।
अजीवयल्लक्ष्मणमात्तमूर्च्छं
संश्लाघमानो रघुपुङ्गवेन ॥ १८१

ஸுஷேணனுன்னோ பிஷஜா ஹனூமான்
ஹ்ருத்வௌஷதீ பூதரச்ருங்கமாராத் ।
அஜீவயல்லக்ஷ்மணமாத்தமூர்ச்சம்
ஸம்ச்லாகமானோ ரகுபுங்கவேன ॥ 181

வைத்யன் ஸுஷேணனால் தூண்டப்பட்ட ஹனுமான் விரைவில் சென்று ஓஷதி பர்வதத்தை எடுத்துவந்து மூர்ச்சை அடைந்த லக்ஷ்மணனை உயிர்ப்பித்தார். இதற்காக இராமனால் பாராட்டப்பட்டார்.

रथेन भूयस्समितिं प्रपन्नो
राम दशास्योर्चयदाशुगाग्रैः ।
प्रत्यर्थिनं तं प्रतियुद्ध्यमाने
रामे तदायान्नभसा रथाग्र्यम् ॥ १८२

ரதேன பூயஸ்ஸமிதிம் ப்ரபன்னோ
ராமம் தசாஸ்யோர்ச்சயதாசுகாக்ரை: ।
ப்ரத்யர்த்தினம் தம் ப்ரதியுத்யமானே
ராமே ததாயான்னபஸா ரதாக்ர்யம் ॥ 182

மீண்டும் தேருடன் போர்க்களத்தை அடைந்த இராவணன் வேகம் மிகுந்த பாணங்களால் இராமனைத் தாக்கினார். இவ்விதம் எதிரியுடன் இராமர் சண்டையிட்டுக் கொண்டிருக்கும்பொழுது விண்ணிலிருந்து இந்திரனின் தேர் இராமனுக்காக வந்தது.

रथन्तमारुह्य निबद्धवर्मः
जैत्रं च शक्रापहितं स सूतम् ।
रामोस्त्रवर्षैः दशकण्ठबाणान्
चिच्छेद तस्यापि शिरांसि बाहून् ॥ १८३

ரதந்தமாருஹ்ய நிபத்தவர்ம:
ஜைத்ரம் ச சக்ராபஹிதம் ஸ ஸூதம் ।
ராமோஸ்த்ரவர்ஷை: தசகண்டபாணான்
சிச்சேத தஸ்யாபி சிராம்ஸி பாஹூன் ॥ 183

இந்த்ரனால் அனுப்பப்பட்ட தேரோட்டியுடன் கூடிய ஜைத்ரமென்னும் ரதத்தில் கவசமணிந்து ஏறிய இராமர் அஸ்த்ரங்களைப் (வர்ஷித்து) பொழிந்து (தசகண்டனின்) இராவணனின் பாணங்களையும், தலைகளையும், கைகளையும் வீழ்த்தினார்.

पुनः पुनस्तानि शिरांसि शत्रोः
संरुह्यमानानि विलोक्य रामः ।
संस्मारितो मातलिना शरेन्द्रं
ब्रह्मास्त्रवह्नौ स जुहाव तीव्रम् ॥ १८४

புன: புனஸ்தானி சிராம்ஸி சத்ரோ:
ஸம்ருஹ்யமானானி விலோக்ய ராம: ।
ஸம்ஸ்மாரிதோ மாதலினா சரேந்த்ரம்
ப்ரம்மாஸ்த்ரவஹ்னௌ ஸ ஜுஹாவ தீவ்ரம் ॥ 184

மீண்டும் மீண்டும் எதிரியின் தலைகள் முளைப்பதைப் பார்த்த இராமன் இந்த்ரனால் ப்ரம்மாஸ்த்ரத்தை நினைவுபடுத்தப்பட்டவராக, ப்ரம்மாஸ்த்ர நெருப்பில் இராவணனை ஆஹுதியாக்கினார்.

दृष्ट्वा दशास्यं निहतं स रामः
सुरप्रसूनार्चित मौलिबन्धः ।
लङ्काधिपत्ये विधिनाभिषेकं
सौमित्रिणाकारि विभीषणस्य ॥ १८५

த்ருஷ்ட்வா தசாஸ்யம் நிஹதம் ஸ ராம:
ஸுரப்ரஸூனார்ச்சித மௌளிபந்த: ।
லங்காதிபத்யே விதினாபிஷேகம்
ஸௌமித்ரிணாகாரி விபீஷணஸ்ய ॥ 185

இராவணன் கொல்லப்பட்டதை அறிந்த இராமர் தேவர்களால் அர்ச்சிக்கப்பட்ட பூக்களை சிரஸில் தாங்கியவராக விளங்கி, முறைப்படி லங்காதிபதியாக விபீஷணனை லக்ஷ்மணன் மூலம் அபிஷேகம் செய்து வைத்தார்.

सीतां स्वनिर्देशसमाहृतां सः
शङ्काहतात्मेव रुषा बभाषे ।
शुद्धिप्रतीत्यै ज्वलनेविशत्सा
पश्यत्सु सर्वेषु रुषेव माया ॥ १८६

ஸீதாம் ஸ்வநிர்தேசஸமாஹ்ருதாம் ஸ:
சங்காஹதாத்மேவ ருஷா பபாஷே ।
சுத்திப்ரதீத்யை ஜ்வலனேவிசத்யா
பச்யத்ஸு ஸர்வேஷு ருஷேவ மாயா ॥ 186

தனது கட்டளையின்படி தன்னிடம் அழைத்துவரப்பட்ட ஸீதையிடம் சந்தேகம் கொண்ட மனதுடையவர்போல் வெறுப்புடன் பேசினார். தனது சுத்தியைத் தெரிவிப்பதற்காக அனைவரும் சலிப்புடன் பார்த்துக்கொண்டிருக்கும் வேளையில் மாயையோ என வியக்கும் வண்ணம் ஸீதை நெருப்பில் நுழைந்தாள்.

तमेत्य सृष्टेन्द्रमुखामरेषु
स्तुवत्सु वह्निस्समयमुत्थितोऽत्र ।
प्रशस्य शीलं जनकात्मजायाः
तत्स्थां स रामाय ददौ च सीताम् ॥ १८७

தமேத்ய ஸ்ருஷ்டேந்த்ரமுகாமரேஷு
ஸ்துவத்ஸு வஹ்னிஸ்ஸமயமுத்திதோऽத்ர ।
ப்ரசஸ்ய சீலம் ஜனகாத்மஜாயா:
தத்ஸ்தாம் ஸ ராமாய ததௌ ச ஸீதாம் ॥ 187

ப்ரம்மா, இந்த்ரன் முதலிய தேவர்கள் இராமனை அடைந்து அவனைப் போற்றும் தருவாயில் அங்கு தோன்றிய அக்னி பகவான் ஜனகனின் மகள் ஸீதையின் நெறியைப் போற்றி நெறியில் நின்ற ஸீதையை ராமனுக்கு அளித்தார்.

मुदाथ रामः परिगृह्य सीतां
स्वाङ्कं समारोप्य निरीक्ष्य जन्यम् ।
लब्धाशिरस्माच्चरणप्रणष्टान्
उज्जीवयामास वरान्मघोनः ॥ १८८

முதாத ராம: பரிக்ருஹ்ய ஸீதாம்
ஸ்வாங்கம் ஸமாரோப்ய நிரீக்ஷ்ய ஜன்யம் ।
லப்த்தாசிரஸ்மாச்சரணப்ரணஷ்டான்
உஜ்ஜீவயாமாஸ வரான்மகோன: ॥ 188

அக்னி பகவான் ஸமர்ப்பித்த ஸீதையை ஏற்றுக் கொண்டு, தந்தை தசரதரைக் கண்டு அவரது மடியிலமர்ந்து, அவரிடமிருந்து ஆசிகளைப் பெற்று மகிழ்வுடன் விளங்கும் இராமன். இந்த்ரனின் வரத்தால் தன் பொருட்டு போரில் உயிர் நீத்த வானரர்களை உயிர்ப்பிக்கச் செய்தார்.

कौबेर यानं रिपुनिर्जितं तं
रामोर्पितं तत्सहजेन भक्त्या ।
प्रियावराभ्यां तरसारुहन् सः
रक्षः प्लवङ्गैश्च ययावयोध्याम् ॥ १८९

கௌபேர யானம் ரிபுநிர்ஜிதம் தம்
ராமோர்பிதம் தத்ஸஹஜேன பக்த்யா ।
ப்ரியாவராப்யாம் தரஸாருஹன் ஸ:
ரக்ஷ: ப்லவங்கைச்ச யயாவயோத்யாம் ॥ 189

குபேரனிடமிருந்து இராவணன் அபஹரித்த புஷ்பக விமானத்தை விபிஷணன் பக்தியுடன் இராமனுக்கு அளிக்க; ஸீதை, லக்ஷ்மணன், வானரஸேனை இவர்களுடன் தாமதமின்றி அதில் ஏறி அயோத்தியை இராமர் அடைந்தார்.

आनन्दजाश्रुस्नपितो स्तनाग्रं
रामोऽर्थितोऽयं भरतेन शश्वत् ।
हरीश लङ्केश निषेव्यमाणो
राज्यं प्रपेदे गुरुणाभिषिक्तः ॥ १९०

ஆனந்தஜாச்ருஸ்னபிதோ ஸ்தனாக்ரம்
ராமோர்த்திதோயம் பரதேன சஸ்வத் ।
ஹரீச லங்கேச நிஷேவ்யமாணோ
ராஜ்யம் ப்ரபேதே குருணாபிஷிக்த: ॥ 190

தழுவிக்கொண்ட பரதனின் கண்களிலிருந்து பெருகும் ஆனந்தக் கண்ணீரால் நனைக்கப்பட்ட இராமன், பரதனால் ப்ரார்த்திக்கப்பட்டவராக சுக்ரீவன் விபீஷணன் இவர்களால் பணிவிடை செய்யப்பட வஸிஷ்டரால் பட்டாபிஷேகம் செய்துவைக்கப்பட்டவராக இராஜ்யத்தை அடைந்தார்.

## ॥ उत्तरकाण्डप्रारम्भः ॥

सिंहासनस्थं सहसीतयामुं
किरीटहारादि विभूषिताङ्गम् ।
समीक्ष्य हर्षाद्गिरिजासमेतः
शम्भुस्तदानां स्तुतिमाजहार ॥ १९१

## உத்தரகாண்டம்

ஸிம்ஹாஸனஸ்தம் ஸஹஸீதயாமும்
கிரீடஹாராதி விபூஷிதாங்கம் ।
ஸமீக்ஷ்ய ஹர்ஷாத்கிரிஜாஸமேத:
சம்புஸ்ததானாம் ஸ்துதிமாஜஹார ॥ 191

கிரீடம், ஹாரம் முதலிய அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டு ஸீதையுடன் ஸிம்ஹாசனத்தில் அமர்ந்திருந்த இராமனைப் பார்த்து மகிழ்ந்த பார்வதியுடன் கூடிய பரமேச்வரன் அவரைத் துதித்தார்.

प्रपूर्णसस्या वसुधा बभूव
  व्याधेश्च दस्योः न भयं तदासीत् ।
वृद्धेषु सत्स्वेव न बालहानिः
  रामे भुवं शासति धर्मसिद्धौ ॥ १९२

ப்ரபூர்ணஸஸ்யா வஸுதா பபூவ
  வ்யாதேச்ச தஸ்யோ: ந பயம் ததாஸீத் ।
வ்ருத்தேஷு ஸத்ஸ்வேவ ந பாலஹானி:
  ராமே புவம் சாஸதி தர்மஸித்தௌ ॥ 192

இராமன் அரசாளும் போது பயிர் நிறைந்ததாக பூமி விளங்கியது. வ்யாதிபயம், சோரபயம் இவை இல்லை. முதியோர் முன் (சிறுவர்கள்) பாலர்கள் மரிக்கவில்லை.

रामार्हितौ तौ कपिराक्षसेन्द्रौ
  सर्वे तथान्येपि ययुस्स्वगेहम् ।
रामस्य नाम्नो भुवि कीर्तनार्थं
  स्थितिर्हनूमान् समवाप कल्पम् ॥ १९३

ராமார்ஹிதௌ தௌ கபிராக்ஷஸேந்த்ரௌ
  ஸர்வே ததான்யேபி யயுஸ்ஸ்வகேஹம் ।
ராமஸ்ய நாம்னோ புவி கீர்த்தனார்த்தம்
  ஸ்திதிர்ஹனூமான் ஸமவாப கல்பம் ॥ 193

இராமனால் கௌரவப்படுத்தப்பட்ட ஸுக்ரீவன், விபீஷணன் மற்றும் அனைவரும் தனது இருப்பிடம் சென்றனர். இராமனின் பெயரை இப்பூமியில் போற்றுவதற்காக அழியாத நிலையை ஹனுமான் அடைந்தார்.

सीता समेतोखिलमर्त्य भोगान्
सुखेन भुञ्जन् सह सोदरैश्च ।
धर्मेण राज्यं परिपालयन् सः
जानान् जुगोपौरसवत्प्रजेशः ॥ १९४

ஸீதா ஸமேதோகிலமர்த்ய போகான்
ஸுகேன புஞ்ஜன் ஸஹ ஸோதரைச்ச ।
தர்மேன ராஜ்யம் பரிபாலயன் ஸ:
ஜானான் ஜுகோபௌரஸவத் ப்ரஜேச; ॥ 194

ஸீதையுடன் கூடிய இராமர் இஹலோக ஸுகங்களை தம்பிமார்களுடன் அனுபவிப்பவராக தர்மத்துடன் ராஜ்ய பரிபாலனம் பண்ணிக்கொண்டு தனக்குப் பிறந்த பிள்ளைகள் போல மக்களைக் காப்பாற்றினார்.

वर्षप्रमाणे महति प्रयाते
धर्मेण राज्यं भुविशासतीशे ।
शुश्राव रामो विजने प्रवासे
लोकापवादं जनकस्य पुत्र्याः ॥ १९५

வர்ஷப்ரமாணே மஹதி ப்ரயாதே
தர்மேண ராஜ்யம் புவிசாஸதீசே ।
சுச்ராவ ராமோ விஜனே ப்ரவாஸே
லோகாபவாதம் ஜனகஸ்ய புத்ர்யா: ॥ 195

தர்மபரிபாலனம் செய்துகொண்டிருக்கும்படி பல ஆண்டுகள் சென்றபிறகு; தனிமையில் மாற்றான் வீட்டில் இருக்கும்பொழுது ஜனகனின் மகள் ஸீதையைக் குறித்து எழுந்த (லோகாபவதாத்தை) மக்களின் பழிச்சொல்லை செவிமடுத்தார்.

वधूं विजानन्नपि सोऽग्निशुद्धां
लोकापवादप्रसरासहिष्णुः ।
सौमित्रिमादिश्य जवात्सगर्भां
मुमोच वाल्मीकितपोवनान्ते ॥ १९६

வதூம் விஜானன்னபி ஸோக்னிசுத்தாம்
லோகாபவாதப்ரஸராஸஹிஷ்ணு: ।
ஸௌமித்ரிமாதிச்ய ஜவாத்ஸகர்பாம்
முமோச வால்மீகி தபோவனாந்தே ॥ 196

அக்னிப்ரவேசம் செய்து பரிசுத்தமானவளாக தனது மனைவியை அறிந்திருந்த போதிலும் மக்களின் அவச்சொல் பரவுவதை விரும்பாதவராக லக்ஷ்மணனை அழைத்து கர்பவதியான அவளை வால்மீகியின் தபோவனத்தருகே காட்டில் விட்டுவிடுமாறு உத்தர விட்டார்.

आश्वास्यमाना मुनिनात्र नित्यं
व्यपोह्य कालं मुनिपत्निसङ्गे ।
क्रमेण रात्रौ विमलाश्रमेऽस्मिन्
सासूत पुत्रौ पतितुल्यरूपौ ॥ १९७

ஆச்வாஸ்யமானா முனினாத்ர நித்யம்
வ்யபோஹ்ய காலம் முனிபத்னிஸங்கே ।
க்ரமேண ராத்ரௌ விமலாச்ரமேஸ்மின்
ஸாஸூத புத்ரௌ பதிதுல்யரூபௌ ॥ 197

வால்மீகியினால் ஆறுதல் அளிக்கப்பட்டவளாக முனி பத்னிகளுடன் காலத்தைக் கழித்து, பரிசுத்தமான அந்த ஆச்ரமத்தில் உரிய காலத்தில் இரவில் கணவனைப்போன்ற வடிவமுடைய இருகுழந்தைகளைப் பெற்றெடுத்தாள்.

मुनिस्तदानीमनयोस्सरक्षां
कुशैलवैश्च प्रविधाय तीव्रम् ।
चक्रे ततः क्षत्रियसंस्क्रियाभिः
कुशोलवश्चेति तयोश्च नाम ॥ १९८

முனிஸ்ததானீமனயோஸ்ஸரக்ஷாம்
குசைலவைச்ச ப்ரவிதாய தீவ்ரம் ।
சக்ரே தத: க்ஷத்ரியஸம்ஸ்க்ரியாபி:
குசோலவச்சேதி தயோச்ச நாம ॥ 199

அப்பொழுது வால்மீகி இவ்விரு குழந்தைகளுக்கும் தர்பங்களாலும், ஓஷதிகளாலும் காப்புக்கட்டி க்ஷத்ரிய விதிப்படி குசன், லவன் என இருவருக்கும் பெயரிட்டார்.

प्रवर्द्धमानौ मुनिना कुमारौ
ब्रह्मोपदेशेन मुनिप्रणीतम् ।
अध्यापितौ गीतिविभक्तवर्णं
रामायणाख्यं मधुरं च काव्यम् ॥ १९९

ப்ரவர்த்தமானௌ முனினா குமாரௌ
ப்ரம்மோபதேசேன முனிப்ரணீதம் ।
அத்யாபிதௌ கீதிவிபக்தவர்ணம்
ராமாயணாக்யம் மதுரம் ச காவ்யம் ॥ 199

முனிவரால் வளர்க்கப்பட்ட அவ்விருகுமாரர்களுக்கும் உபநயனம் செய்துவைத்து. அவரே தெளிந்த எழுத்து, இனியபாட்டு இவற்றால் மதுரமான இராமாயண காவ்யத்தைச் சொல்லி வைத்தார்,

अथोर्विपालश्च वनर्षिणासौ
भीत्यार्थितः क्रूरमहासुरस्य ।
त्रैलोक्यशत्रोर्लवणासुरस्य
प्रमापणे शत्रुहणं न्ययुङ्क्त ॥ २००

அதோர்விபாலச்ச வனர்ஷிணாஸௌ
பீத்யார்த்தித: க்ரூரமஹாஸுரஸ்ய ।
த்ரைலோக்ய சத்ரோர்லவணாஸுரஸ்ய
ப்ரமாபணே சத்ருஹணம் ந்யயுங்க்த ॥ 200

கொடிய அரக்கன் லவணாசுரனின் பயத்தினால், அவனை வதம் செய்யும்பொருட்டு வால்மீகியினால் ப்ரார்த்திக்கப்பட்ட பூமிபாலன் இராமன், மூவுலகிற்கும் சத்ருவான அவனைக் கொல்வதற்கு சத்ருக்னனை நியமித்தார்,

शूलायुधं तं स निहत्य यत्नात्
मधोस्सुतं तस्य वने सुरम्याम् ।
पुरीं प्रथाहां मधुरां च सृष्ट्वा
रामाज्ञया तां प्रशशास धर्मात् ॥ २०१

சூலாயுதம் தம் ஸ நிஹத்ய யத்னாத்
மதோஸஸுதம் தஸ்ய வனே ஸுரம்யாம் ।
புரீம் ப்ரதாஹாம் மதுராம் ச ஸ்ருஷ்ட்வா
ராமாக்ஞயா தாம் ப்ரசசாஸ தர்மாத் ॥ 201

சூலாயுதமேந்திய மதுவின்புதல்வனாகிய அவனைத் தீவ்ரமாகப் போரிட்டுக் கொன்று, அவனது அதீனத்திலிருந்த காட்டுப் பகுதியில் மிக அழகிய புகழ் வாய்ந்த மதுரா நகரை நிர்மாணித்து இராமனின் கட்டளைப்படி நெறியுடன் சத்ருக்னன் ஆட்சிபுரிந்தான்.

अथेक्ष्य पित्राहृत विप्रसूनुं
मृतं ब्रुवाणंत्विति राजदोषात् ।
तपस्थितं शम्बुकशूद्रवाशं
निहत्य रामः शिशुमुज्जहार ॥ २०२

அதேக்ஷ்ய பித்ராஹ்ருத விப்ரஸூனும்
ம்ருதம் ப்ருவாணந்த்விதி ராஜதோஷாத் ।
தபஸ்திதம் சம்புகசூத்ரவாசம்
நிஹத்ய ராம: சிசுமுஜ்ஜஹார ॥ 202

அரசனின் தவறால் என் பிள்ளை இறந்துவிட்டது எனக் கூறிக்கொண்டுவந்த ப்ராம்மணனின் இறந்த பிள்ளையைப் பார்த்து, அதற்குக் காரணமான தவஞ் செய்துகொண்டுள்ள பதிதனைக் கொன்று இராமர் இறந்த குழந்தையைப் பிழைக்க வைத்தார்.

अथाश्वमेधाय सुवर्णकारैः
रामस्य पत्नी रचिता सरूपा ।
अभूत् परित्यागघनापमानात्
मन्युव्रता मौनव्रतीव साक्षात् ॥ २०३

அதாச்வமேதாய ஸுவர்ணகாரை:
ராமஸ்ய பத்னீ ரசிதா ஸரூபா ।
அபூத் பரித்யாககனாபமானாத்
மந்யுவ்ரதா மௌனவதீவ ஸாக்ஷாத் ॥ 203

அச்வமேதம் செய்ய விரும்பிய இராமனுக்காக தங்கத்தால் பொற்கொல்லர்கள் ராமனின் மனைவியின் உருவை அழகுடன் வடித்தனர். அப்பதுமை ராமன் தன்னை ஒதுக்கியதால் ஏற்பட்ட கடுமையான அவமானத்தால் கோபமடைந்து மௌனவிரதம் இருப்பவள் போல் விளங்கியது.

रामस्य यज्ञे विधिवत्प्रवृत्ते
वाल्मीकिशिष्यानुचरौ कुमारौ ।
अगायतां तत्र कुशीलवश्च
स्वरेण रामायणमादिकाव्यम् ॥ २०४

ராமஸ்ய யக்ஞே விதிவத்ப்ரவ்ருத்தே
வால்மீகிசிஷ்யாநுசரௌ குமாரௌ ।
அகாயதாம் தத்ர குசோலவச்ச
ஸ்வரேண ராமாயணமாதிகாவ்யம் ॥ 204

இராமனின் யாகமானது முறைப்படி முடிந்த அளவில் வால்மீகியின் சிஷ்யர்களைத் தொடர்ந்து வந்த குமாரர்கள் (குசன் – லவன்) இருவரும் இனிய குரலுடன் ஆதிகாவ்யமான இராமாயணத்தை இராமனின் அவையில் இசைத்தனர்.

जानन् स्वयं चापि मुनेर्गिरा तौ
सीतासुतौ तां पुनरादिदित्सुः ।
साध्वी यदिस्यात् पुनरेव सीता
करोतु शुद्धिंत्विति सोभ्यधात्तम् ॥ २०५

ஜானன் ஸ்வயம் சாபி முனேர்கிரா தௌ
ஸீதாஸுதௌ தாம் புனராதிதித்ஸு: ।
ஸாத்வீ யதிஸ்யாத் புனரேவ ஸீதா
கரோது ஸுத்திம்த்விதி ஸோப்யதாத்தம் ॥ 205

வால்மீகியின் வாக்கினால் அவ்விருவரும் ஸீதையின் குமாரர்கள் என அறிந்த இராமர் அவளை மீண்டும் அடைய விரும்பி, ஸீதை குற்றமற்றவளாக இருப்பாளேயாகில் மீண்டும் அக்னிப்ரவேசம் செய்யட்டும் என வால்மீகி முனிவரிடம் கூறினார்.

ब्रह्मादिदेवेषु तदागतेषु
प्रचोदिता रामगिरात्र सीता ।
वाल्मीकिवाक्येन च साधुवृत्ता
कर्तुं प्रवृत्ता शपथं सुधीरा ॥ २०६

ப்ரம்மாதிதேவேஷு ததாகதேஷு
ப்ரசோதிதா ராமகிராத்ர ஸீதா ।
வால்மீகிவாக்யேன ச ஸாதுவ்ருத்தா
கர்த்தும் ப்ரவ்ருத்தா சபதம் ஸுதீரா ॥ 206

ப்ரம்மாதி தேவர்கள் அங்கு வந்து கூடிய அவ்வேளையில், இராமனின் வார்த்தையில் கிளர்ந்தெழுந்த ஸீதை வால்மீகியின் வார்த்தையினால் சாந்தமாகி மிகுந்த மனோதிடத்துடன் சபதம் செய்யத் தொடங்கினாள்.

यद्यार्यपुत्रान्नपरः प्रमृष्टः
चित्तेन वापीति जगात सीता ।
न सत्यसङ्कल्पगुणेन मह्यं
ददातु साम्बा वसुधावकाशम् ॥ २०७

யத்யார்யபுத்ரான்னபர: ப்ரம்ருஷ்ட:
சித்தேன வாபீதி ஜகாத ஸீதா ।
ந ஸத்யஸங்கல்பகுணேன மஹ்யம்
ததாது ஸாம்பா வஸுதாவகாசம் ॥ 207

என்து தலைவனைத் தவிர மற்றொருவனை மனதாலும் நான் நினைக்காதவளாக இருப்பேனேயாகில் எனது உண்மையை உரைக்கும் இக்குணத்தால் என் தாய் பூமி என் பொருட்டு இடமளிக்கட்டும் என உரைத்தாள்.

क्षिप्रोत्थिता मूर्तिमती क्षितिस्तां
रथेङ्कमारोप्य भुवं विवेश ।
पातालसंहारकृतास्त्रसज्जो
रामो निरुद्धः कमलासनेन ॥ २०८

க்ஷிப்ரோத்திதா மூர்த்திமதீ க்ஷிதிஸ்தாம்
ரதேங்கமாரோப்ய புவம் விவேச ।
பாதாளஸம்ஹாரக்ருதாஸ்த்ரஸஜ்ஜோ
ராமோ நிருத்த: கமலாஸனேன ॥ 208

ஸீதையின் சபதத்தைக் கேட்டு உடனே உருவெடுத்து அங்கு தோன்றிய பூமாதேவி தனது ரதத்தில் ஸீதையைத் தனது மடியில் அமர்த்திக்கொண்டு பூமியுள் நுழைந்தாள், பாதாள உலகை நாசம் செய்வதற்காக வில்லேந்தி தயாரான இராமன் ப்ரம்மாவினால் தடுக்கப்பட்டார்.

पूर्णेश्वमेधे विधिभाजिरामः
स्नेहेन पुत्रौ पुरमानयन्स्वम् ।
भूपालने तौ स पृथङ्नियोज्या
श्रौषीच्च कालास्मरणं विविक्ते ॥ २०९

பூர்ணேச்வமேதே விதிபாஜிராம:
ஸ்நேஹேன புத்ரௌ புரமானயன்ஸ்வம் ।
பூபாலனே தௌ ஸ ப்ருதங்நியோஜ்யா
ச்ரௌஷீச்ச காலஸ்மரணம் விவிக்தே ॥ 209

அச்வமேத யாகம் நிறைவேறிய பிறகு விதியின் வசப்பட்ட இராமர், லவன்—குசன் இருவரையும் அன்புடன் நகருக்கு அழைத்துவந்து, இருவரையும் தனித்தனியே அரசராக்கித் தனிமையில் யமனால் நினைவுபடுத்தப்பட்ட தன் அவதார முடிவை அறிந்துகொண்டார்.

द्वास्थं तदा लक्ष्मणमेत्य को वा
क्षणेन रामं मम दर्शयेति ।
मुनेस्सभीत्या वदतोत्रि सूनोः
रामं ययावास्य निदेश लोपात् ॥ २१०

த்வாஸ்தம் ததா லக்ஷ்மணமேத்ய கோ வா
க்ஷணேன ராமம் மம தர்சயேதி ।
முனேஸ்ஸபீத்யா வததோத்ரி ஸூனோ:
ராமம் யயாவாஸ்ய நிதேச லோபாத் ॥ 210

யமனிடம் தனிமையில் உரையாடிக்கொண்டிருக்கும் பொழுது, வாயில் காப்பவனாக இருந்த லக்ஷ்மணனை அடைந்து, இந்நொடியே என்னை ராமனைக்காண அனுப்பு என கோபத்துடன் பயமுறுத்தும் அத்ரியின் குமாரரான துர்வாஸ முனிவரின் வருகையை ராமனுக்குத் தெரிவிப்பதற்காக லக்ஷ்மணன் ராமனிடம் சென்றான்.

आतिथ्यकाङ्क्षां स मुनेश्च कृत्वा
तत्याज सौमित्रिमतीतमाज्ञाम् ।
गत्वानुजोऽयं सरयूं च योगात्
भेजे भुजङ्गेशपदं तदीयम् ॥ २११

ஆதித்யகாங்க்ஷாம் ஸ முனேச்ச க்ருத்வா
தத்யாஜ ஸௌமித்ரிமதீதமாக்ஞாம் ।
கத்வானுஜோऽயம் ஸரயூம் ச யோகாத்
பேஜே புஜங்கேசபதம் ததீயம் ॥ 211

துர்வாச முனிவருக்கு அதிதிஸத்காரம் செய்து யமனின் வாக்குப்படி அவரது கட்டளையைமீறி ஸம்பாஷணையின் போது குறுக்கிட்ட லக்ஷ்மணனை (ஒழிந்துபோ—get lost) கண்காணாமல் செல்லும்படி பணித்தார். இவ்விதம் இராமனைப் பிரிந்த லக்ஷ்மணன் சரயு நதிக்கரையை அடைந்து, யோக சமாதியில் இவ்வுலக வாழ்வைத் துறந்து வைகுண்டத்தில் விளங்கும் தன்னுடைய ஆதிசேஷ பதவியை அடைந்தார்.

भ्रात्राविवियोगात् परितप्तचित्तः
शत्रुघ्नमाहार्य स तीव्रदूतैः ।
गृह्णन् हरीशं सह निर्गमोत्कं
स्वं धाम गन्तुं त्वरयाञ्चकार ॥ २१२

ப்ராத்ராவியோகாத் பரிதப்தசித்த:
சத்ருக்னமாஹார்ய ஸ தீவ்ரதூதை: ।
க்ருஹ்ணன் ஹரீசம் ஸஹ நிர்கமோத்தும்
ஸ்வம் தாம கந்தும் த்வரயாஞ்சகார ॥ 212

தம்பி லக்ஷ்மணனின் பிரிவால் மனவருத்தமடைந்த இராமன் தூதர்களை அனுப்பி மதுராபுரியிலிருந்து சத்ருக்னனை அழைத்துவரச்செய்து, தன்னுடன் வர விழைந்த ஹனுமனை தடுத்து நிறுத்தி, தன்னுடைய இருப்பிடமான வைகுண்டத்திற்கு விரைந்து செல்ல ஆயத்தமானார்.

ये ये जनास्त्वानुगमेनुरक्ताः
स तान् गुरूक्त्यैव तथानुमेने ।
निष्क्रम्य पौरानुजभृत्यवर्गैः
स्वं वैष्णवं धाम ययौ स रामः ॥ २१३

யே யே ஜனாஸ்வானுகமேனுரக்தா:
ஸ தான் குருக்த்யைவ ததானுமேனே ।
நிஷ்க்ரம்ய பௌரானுஜப்ருத்யவர்கை:
ஸ்வம் வைஷ்ணவம் தாம யயௌ ஸ ராம: ॥ 213

தன்னுடன் வர விரும்பிய நகர மக்களை பெரியோர்களின் வார்த்தைகளுக்கு இணங்க ஏற்று தம்பிமார்கள், வேலைக்காரர்கள் மற்றும் நகர மக்கள் புடைசூழ தனது இருப்பிடமான வைகுண்டத்தை இராமர் அடைந்தார்.

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

*தஞ்சாவூர்,*
*25—7—97.*

**மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,**
**சரசுவதி மகால் நூலகம்.**

SARASVATI MAHAL LIBRARY PRESS, THANJAVUR